
# தேவாலயத்தின் தூண்கள்



பாஸ்டர் மா. ஜான்ராஜ்

V. மதன்ராஜ், ஏந்தல்

# தேவாலயத்தின் தூண்கள்

## (The Pillars of the Church)

### பாஸ்டர் மா. ஜான்ராஜ்

CARMEL PRAYER FELLOWSHIP
ZIM
ZIONFORT
INTERNATIONAL MINISTRIES

**சீயோன்கோட்டை**
**சர்வதேச ஊழியங்கள்**

வெளியிடுபவர்:
**உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்**
26/D, காந்தி ரோடு, பஸ் ஸ்டாண்டு மேற்குபுறம்,
சிவகாசி. 626123.
போன்: 0091-4562-230491
சபை: 0091-4562-277209
பேக்ஸ்: 0091-4562-230491
இமெயில்: pastor_m_johnraj@yahoo.com
Website : www.carmel.org.in

தேவாலயத்தின் தூண்கள்

| | | |
|---|---|---|
| புத்தக வரிசை | : | 21 |
| முதலாம் பதிப்பு | : | ஜீன் 1997 |
| இரண்டாம் பதிப்பு | : | நவம்பர் 2011 |
| வெளியிடுவோர் | : | உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ் |
| மொத்தப் பிரதிகள் | : | 1000 |
| உரிமை | : | பாஸ்டர். மா.ஜான்ராஜ் |
| விலை | : | Rs. 25/- |
| | | வெளிநாடுகளில் 3 US.டாலர்கள். |


**புத்தகங்கள் கிடைக்குமிடம் :**

**இந்தியாவிலுள்ள அனைத்து கிறிஸ்தவ புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.**

**To Buy Online**

**www.TamilChristianStore.in**

**புத்தக தேவைக்கும் புத்தக ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

**பாஸ்டர். மா. ஜான்ராஜ்**
**உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்**
**26.D, காந்தி ரோடு,**
**சிவகாசி - 626123.**
**அலுவலக போன் : 0091-4562-277209**
**செல்: 8870002009**

To Buy Online:
www.tamilchristianstore.in

# அர்ப்பணம்

| | | |
|---|---|---|
| வழிநடத்திய | வல்லமையுள்ள | தூணே |
| வறுமையும் | வெறுமையும் | அகற்றியவரே |
| வனாந்திர | பாதையில் | வெளிச்சமாய் |
| வந்தவர் | பாதம் | சரணடைந்தோம் |
| தாங்கும் | தயவுள்ள | தூணே |
| ஏந்தி | சுமந்து | தப்புவித்து |
| முழங்காலில் | முழுபெலமாய் | ஜெபித்த |
| முந்தினவர் | பாதம் | சரணடைந்தோம் |
| சத்தியத்தின் | சாட்சியாகிய | தூணே |
| நித்திய | வழியில் | நித்தமும் |
| நிலைத்து | நிற்கும் | தூண்களை |
| நிறுத்தியவர் | பாதம் | சரணடைந்தோம் |
| அப்போஸ்தல | உபதேசத்தின் | தூணே |
| அன்பில் | யோவானையும் | அர்ப்பணிப்பில் |
| கேபாவையும் | ஆலோசனையில் | யாக்கோபையும் |
| தந்தவர் | பாதம் | சரணடைந்தோம் |
| தேவாலய | திருச்சபையின் | தூணே |
| தேன் | பாகாய் | தித்திக்கும் |
| தெவிட்டாத | மதுரமாய் | மகிமையாய் |
| தென்றலாய் | நூல் | தந்தவரே |

உமக்கே நாங்களும் இந்நூலும் அர்ப்பணம்!

**பாஸ்டர். மா. ஜான்ராஜ்.**

''ஞானம் தன் வீட்டைக் கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து... எவன் பேதையோ அவன் இவ்விடத்திற்கு வரக்கடவன்... பேதைமையைவிட்டு விலகுங்கள், அப்பொழுது பிழைத்திருப்பீர்கள்'' என்று விளம்புகிறது. - *நீதி 9 : 1-6.*

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தேவாலயத்தின் தூண்கள் | 5 |
| 2. | முன் நிற்கும் தூண்கள் | 9 |
| 3. | நிலைத்திருக்கும் தூண்கள் | 24 |
| 4. | தாங்கும் தூண்கள் | 42 |
| 5. | ஐக்கியத்தின் தூண்கள் | 61 |
| 6. | சத்தியத்திற்கு தூண்கள் | 66 |
| 7. | வழிநடத்தும் தூண்கள் | 73 |

# 1

# தேவாலயத்தின் தூண்கள்

சில நாட்களுக்கு முன்பாக எங்கள் ஊர் அருகில் உள்ள சாத்தூர் என்ற பட்டணத்திற்கு கிழக்கில் இருக்கிறதான இருக்கன்குடி என்ற ஊரிலிருந்து ஒரு டவுண் பஸ் வந்து சேர்ந்தது. அதிலிருந்து ஏராளமான ஜனங்கள் வேக வேகமாக இறங்கினார்கள். அந்த நாள் சந்தை கூடுகிற கிழமையாய் இருந்தபடியினாலே ஏராளமான ஜனங்கள் பல்வேறு கிராமங்களிலிருந்து கூடிவந்திருந்தார்கள். அதிலே குறிப்பிடத்தக்க ஒரு வயது முதிர்ந்த பாட்டி இறங்கி கடைத்தெருவுக்கு நடந்தார். போகிற வழியிலே தண்ணீர் தாகம் அதிகமாய் இருந்தது. பல உணவு விடுதிகளில் அந்தப் பாட்டி தண்ணீர் கேட்டபோது ஒருவரும் கொடுக்க முன் வரவில்லை.

எதிர்திசையிலே ஒரு நகராட்சி தண்ணீர் குழாயிலே சிலர் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அது குடிக்கக்கூடிய நல்ல தண்ணீர். இந்த பாட்டி அந்த குழாயிற்கு போனார்கள். தண்ணீர் பிடித்தவர்கள் குடங்களை நிரப்பிக் கொண்டு எழும்பி போய்விட்டார்கள். பிற்பாடு இந்த பாட்டி, தண்ணீர் வடிந்து கொண்டிருக்கிற அந்தக் குழாயிலே இரு கரங்களையும் விரித்து வைத்து வயிறு நிரம்ப, தாகம் தீர ஆவலோடு குடித்தார்கள். தாகம் தீர்ந்தது. வயிறு நிரம்பியது. ஆனால் அந்த நகராட்சி தண்ணீர்க் குழாயை எப்படி மூடுவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. கிராமங்களிலே தண்ணீர் குடிக்கிற போது தலையை ஆட்டினால் தண்ணீர் ஊற்றுகிறவர்கள் நிறுத்திக் கொள்வார்கள். அதே போல இந்த பாட்டி போதும் போதும் என்ற அர்த்தத்திலே தன் தலையை இங்கும் அங்குமாய் அசைத்தது. ஆனால் நகராட்சி குழாயோ தண்ணீரைக் கொட்டிக் கொண்டே இருந்தது. தண்ணீர்க் குழாயை மூடுகின்ற அறிவு அவர்களுக்கு இல்லை.

அந்த வழியாய்ப் போன ஒரு வாலிபன் ஒருவர் கிராமத்திலிருந்து படித்துவிட்டு இந்த பட்டணத்திலே வேலை செய்கிறவர் பாட்டியினுடைய தர்ம சங்கடமான சூழ்நிலையை அறிந்து ஓடிவந்து

குழாயின் மேல் பகுதியில் இருக்கிறதான நள்ளியை இடதுபக்கமாகத் திருப்பி அந்த தண்ணீரை நிறுத்திய போது பாட்டியினுடைய வயிறு நிரம்பி மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க, மூச்சு முட்ட அவர்கள் குழாயிலிருந்து நிமிர்ந்தார்கள்.

அப்பொழுது இந்த பாட்டிக்கு ஆச்சரியம். பேராண்டி! எப்படி தண்ணீர் நின்றது என்று கேட்டார்கள். அதற்கு அந்த வாலிபன் பாட்டி; இந்த குழாயின் நுனியில் இருக்கிற நள்ளியை இடதுபுறமாக திருப்பினால் தண்ணீர் நிற்கும். நேராகத் திருப்பினால் தண்ணீர் ஊற்றும் என்று சொன்னான். அப்பொழுது அந்த பாட்டி இந்தக் குழாயை எப்படி இயக்குவது என்று அறிந்து கொண்டு வேகமாக நடை போட்டார்கள். வாங்க வேண்டிய சரக்குகளெல்லாம் வாங்கினார்கள். ஒரு பெரிய சாக்குப்பை நிறைய சரக்குகளை வாங்கிக் கொண்டு, தன் தலையிலே தூக்கி வைத்துக் கொண்டு சுமக்க முடியாமல் பஸ் நிலையத்திற்கு வந்தார்கள்.

அவர்கள் போகக் கூடிய இருக்கன்குடி நகர் பேருந்து ஆயத்தமாக இருந்தது. ஆனால் இரண்டு வாசலிலேயும் ஜனங்கள் நெருக்க, உள்ளேயும் ஜனங்கள் நெருக்கி அடித்துக் கொண்டு அந்த பேருந்து முழுவதையும் நிரப்பி இருந்தார்கள். இந்த மூட்டை முடிச்சோடு வந்திருக்கும் பாட்டி பஸ்ஸிற்குள் புக முடியாமல் இங்கும் அங்கும் ஓடி தத்தளித்தார்கள். பாட்டிக்கு யாரும் இடம் கொடுக்கவில்லை.

ஒன்று, இரண்டு முறை அந்த பேருந்தைச் சுற்றி வந்த அந்த பாட்டி ஒரே ஒரு இருக்கை மாத்திரம் காலியாயிருப்பதைக் கண்டார்கள். பஸ்ஸுக்கு வலப்புறத்திலே இருக்கிற ஓட்டுநர் (டிரைவர்) உடைய கதவைத் திறந்து கொண்டு பாட்டி கொண்டு வந்த ஒரு மூடை சரக்குகளை எஞ்சின் மேல் வைத்து விட்டு அந்த ஓட்டுநர் உட்காரும் சீட்டிலே இந்த பாட்டி அருமையாக உட்கார்ந்து கொண்டாள். அங்கே இருந்த பயணிகள் அனைவரும். ஆச்சரியத்தோடும், அதியத்தோடும் இந்த பாட்டியைக் கவனித்தார்கள். கொஞ்சம் நேரம் கழித்து ஓட்டுநர் வந்தார். ஆனால் இருக்கன்குடி போகும் பாட்டி தன் இடத்தில் உட்கார்ந்து தன் இடத்தை ஆக்ரமித்திருப்பதை அந்த ஓட்டுனர் கண்டார்.

பாட்டி; இந்த இடம் எனக்குரியது. இதில் நீ உட்காரக் கூடாது. இதில் நான் உட்கார்ந்து இந்த பஸ்ஸை ஓட்டிச் செல்ல வேண்டும். அதனால் தயவு செய்து கீழே இறங்கிக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் பஸ்ஸில்

ஏதாவது ஒரு இடத்தைப் பார்த்து அமர்ந்து கொள்ளுங்கள். இல்லாவிடில் நில்லுங்கள் என்று டிரைவர் சொன்னார்.

அந்தப்பாட்டியோ, இது உன்னுடைய பஸ்ஸா? அல்லது உன் அப்பன் வீட்டு பேருந்தா? அரசாங்க பஸ். அனைவருக்கும் இது சொந்தம். ஆகவே நானும் இந்திய அரசாங்கத்திலே ஒரு பிரஜையாக இருக்கிறேன். இந்த ஒரு சீட்டு தான் காலியாக இருக்கிறது. ஆகவே அதிலே நான் அமர்ந்திருக்கிறேன். நான் இறங்கப் போவதுமில்லை. இந்த இடத்தை உனக்கும் கொடுக்கப் போவதுமில்லை என்று அந்த பாட்டி பிடிவாதம் பிடித்தாள். பஸ்ஸில் உள்ள அனைவரும் பாட்டிக்கு புத்திமதி சொன்னார்கள். பாட்டி அந்த இடத்தைக் கொடுத்து விடு. அது டிரைவர் உட்காரும் இடம். அவர் உட்கார்ந்து பஸ்ஸை ஓட்டவேண்டும் என்று எவ்வளவோ சொல்லியும், அந்த பாட்டி கேட்டபாடில்லை.

பேருந்து எப்படி நடத்தப்பட வேண்டும் என்கிற அறிவு அந்த பாட்டிக்கு சிறிதளவும், துளியளவும் இல்லாததினாலே டிரைவருடைய இருக்கையை தனக்காக எடுத்துக் கொண்டு இது அரசாங்க பஸ், பொதுச் சொத்து என்று போராடினார்கள். ஒரு ஐந்து நிமிடம் கழித்து அந்த பஸ்ஸின் நடத்துனரும், ஓட்டுனருமாகச் சேர்ந்து இந்த பாட்டியின் வலது கையையும், இடது கையையும் பிடித்து தூக்கி கீழே இறக்கி விட்டு, பின்பு அந்த பாட்டியின் மூடையையும் கீழே தள்ளிவிட்டு விட்டு இருக்கன்குடி பஸ்ஸை எடுத்துக் கொண்டு அவர்கள் போய்விட்டார்கள். இந்த பாட்டியோ மார்பிலே அடித்துப் புலம்பி, டிரைவர்களே! கண்டக்டர்களே! நீங்கள் நாசமாய்ப் போவீர்கள் என்று திட்டி தன் வயிற்றெரிச்சலைக் கொட்டினார்கள்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை சகோதர, சகோதரிகளே! இந்த பாட்டியின் செயல் உண்மையாய் நடந்த ஒரு சம்பவம். இந்த செயல் நம் பார்வைக்கு நகைப்பிற்குரியதாகவும், வேடிக்கையாகவும் காணப்படுகிறதல்லவா? இதே போன்ற நகைப்பிற்குரிய, வேடிக்கைக்குரிய வேதனையான செயல்கள் இன்று கர்த்தருடைய சபையிலும் நடக்கின்றதை ஞானமுள்ளவர்கள் கவனிக்க முடியும்.

கர்த்தர் தம்முடைய சபையிலே ஐந்து விதமான ஊழியர்களை ஏற்படுத்தியிருக்கிறார். அதிலே தேவனுடைய சபையை நடத்துவதற்கு மேய்ப்பர்களை தேவன் அழைத்து அபிஷேகம் பண்ணி, அதிகாரப்படுத்தி மேய்ப்பர்களை சபையிலே வைத்திருக்கிறார்.

ஆனால் இன்றைக்கு ஒரு சிலர் வேத வசனங்களின் ஞானத்தை அறியாதபடியினால், புரியாதபடியினால், தெரியாதபடியினால் தங்கள் ஸ்தானம் சபையிலே எந்த இடம் என்பதை அறியாமல் மேய்ப்பருடைய ஸ்தானத்தை தங்களுக்கு எடுத்துக் கொண்டு, மேய்ப்பர்களுக்கு இடைஞ்சல் செய்து போய்ச் சேர வேண்டிய பரலோகம் வரை, நடத்திச் செல்ல வேண்டிய மேய்ப்பர்களுக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய விசுவாசிகளும் ஊழியக்காரர்களும் இன்று ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

அருமை நண்பர்களே! அன்பு சகோதர, சகோதரிகளே! சபையாகிய இந்த விசுவாச பிரயாணத்திலே உங்களுடைய ஸ்தானம் எது? என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். வெளி 3:12-ல் ஜெயங் கொள்கிறவனை நான் தேவனுடைய ஆலயத்துக்கு தூணாக்குவேன். அவன் அதனிடத்திலிருந்து நீங்கிப் போவதில்லை என்று ஆண்டவர் சொல்லியிக்கிறார்.

தேவபிள்ளைகள் தேவனுடைய சபையிலே தாங்கள் எங்கே உட்கார வேண்டும்; எந்த இடத்திலிருந்து, என்ன பொறுப்புகளை எடுத்து தேவனுக்காக செயல்பட வேண்டும் என்று விளங்கிக் கொள்வார்களானால் அவர்களுக்கும் நல்லது. மேய்ப்பர்களுக்கும் நல்லது.

உங்களுடைய ஸ்தானத்தைப் புரியாமல், பிறருடைய ஸ்தானத்தை உங்களுடையதாக எண்ணி, இடம் காலியாயிருக்கிறதே என்று சொல்லி, நீங்கள் அடுத்தவர்களுடைய இருக்கையில் அமர்ந்தால் கொஞ்ச நேரம் கர்த்தர் பொறுமையாய் இருப்பார். மேய்ப்பர்களும், தேவதாசர்களும் சற்று அமைதியாய் இருப்பார்கள். காலச் சக்கரம் சுழன்று வரும்போது ஒரு நாள் உங்களைத் தூக்கி எடுத்து, இறக்கிவிட்டு விடும் நிர்ப்பாக்கியமான சூழ்நிலை வரும். ஆகவே தேவபிள்ளைகளே! தேவனுடைய சபையிலே நம்முடைய ஸ்தானத்தை விளங்குவோம். நீங்கள் உங்கள் சபையிலே தூண்களாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

# 2

# முன் நிற்கும் தூண்கள்

தாவீது ராஜா தேவாலயம் கட்டுவதற்காக அதிக தாகமும், விருப்பமும் கொண்டிருந்தார். அன்பு தேவனுடைய பிள்ளைகளே! உங்கள் வாழ்வு நிலைக்க, உங்கள் ஊழியம் சிறக்க, உங்கள் ஜீவியம் ஆசீர்வதிக்கப்பட நீங்கள் தேவாலயத்தை நேசியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். இஸ்ரவேல் ராஜாக்களிலே 4 பேரைக் குறித்து மாத்திரமே தேவன் நற்சாட்சிக் கொடுத்தார். அவர்களுடைய வாழ்வில் வந்த குறைவுகள், வீழ்ச்சியின் மத்தியிலும் கூட தேவன் அவர்களை மன்னித்து, அவர்களை ஆசீர்வதித்து அவர்களை உயர்த்தினார். அந்த 4 ராஜாக்கள் முறையே; தாவீது, சாலமோன், யோசியா, எசேக்கியா ஆகியோர்.

இந்து 4 ராஜாக்களைக் குறித்து தேவன் சாட்சி கொடுக்க காரணம் என்னவென்றால், தாவீது ராஜா தேவாலயம் கட்டுவதற்கு பொருட்களை சேகரித்தார். சாலமோன் ராஜா அந்த தேவாலயத்தை கட்டி முடித்தார். யோசியா ராஜா மூடப்பட்டிருந்த தேவாலயத்தை திறந்து, பழுதுபார்த்து, பண்டிகைகளை ஸ்தாபித்தார். எசேக்கியா ராஜா பல்லாண்டுகளாய் பூட்டப்பட்டிருந்த தேவாலயத்தை தன் 25-வது வயதிலே திறந்து, அவைகளில் பழுதாய் போனவைகளை சீர்படுத்தி, பஸ்கா பண்டிகையை ஆசரித்தான். எனவேதான் இந்த நான்கு ராஜாக்களும் யூதா ராஜாக்களின் சரித்திரத்திலே தேவனிடத்தில் சாட்சி பெற்றார்கள். தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள்.

அன்பு நண்பர்களே! அருமை விசுவாசிகளே! தேவதாசர்களே! நீங்கள் எப்பேர்பட்ட ஊழியம் செய்தாலும் உங்கள் ஊழியம் தேவாலயத்தைச் சுற்றிலும், தேவனுடைய சபையைச் சுற்றிலும் அது வட்டமிட்டுக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது உங்களது வாழ்க்கை தேவனிடத்திலே நற்சாட்சி பெறும். தேவ ஆசீர்வாதம் பெறும். சபைகளை கட்டி எழுப்புங்கள். ஜெப வீடுகளை கட்டி எழுப்புங்கள். எங்கு சுவிசேஷம் அறிவித்தாலும், எந்த மிஷனெரி ஊழியத்தைச் செய்தாலும் அதனுடைய பலனாக கர்த்தருடைய சபைகளை ஸ்தாபித்து, கர்த்தருடைய ஊழியங்களுக்காக இடங்களை

ஜெபவீடுகளை கட்டி எழுப்புங்கள்.

தாவீது ராஜா தன் ஆயுட்காலம் முழுவதும் பல இடங்களுக்கு யுத்தங்களுக்குச் சென்றார். பல அந்நியருடைய சேனையை முறியடித்தார். பொன்னையும், வெண்கலத்தையும், ஏராளமான வெள்ளியையும் சம்பாதித்தார். அவை அத்தனையும் தேவாலயம் கட்டுவதற்காகவே பயன்படுத்தினார்.

தேவனுக்காக கட்டும் ஆலயம் பெரியதாக இருக்க வேண்டும். பிரசித்திப் பெற்றதாக இருக்க வேண்டும். மகிமையாக இருக்க வேண்டும் என்று தாவீது கர்த்தரிடத்தில் கட்டளை பெற்றார். (The Greatest Church, The Famous Church, The Glorious Church)

தாவீதுக்குக் கிடைத்த வெளிப்பாட்டின்படி தாவீதின் குமாரனாகிய சாலமோன்ராஜா தேவனுடைய ஆலயத்தைக் கட்டினார். அந்த தேவாலயத்திற்கு முன்பாக இரண்டு தூண்கள் நிறுத்தப்பட்டன. அந்த இரண்டு தூண்களைக் குறித்து இந்த செய்தியிலே தியானிக்கப் போகிறோம். இந்த இரண்டு தூண்களும் தேவாலயத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டன. ஆலயத்திற்கு வருகிறவர்கள் இந்த பிரமாண்டமான தூண்களைக் கண்டு, அதன் வழியாகத்தான் தேவாலயத்திற்குள் பிரவேசித்தார்கள். இந்த இரண்டு தூண்களும் இன்று தேவனுடைய சபையிலே ஆத்துமாக்களை வரவேற்கக் கூடிய தேவபிள்ளைகளுக்கும், விசுவாசிகளுக்கும், மூப்பர்களுக்கும், ஊழியர்களுக்கும் அடையாளமாக இருக்கின்றன.

**1. இரண்டு தூண்கள்:** சாலமோன் கட்டிய தேவாலயத்தின் முன் புறத்தில் இரண்டு தூண்கள் நிறுத்தப்பட்டன. (I இராஜா 7:21) ராஜாவாகிய சாலமோன் ஈராம் என்னும் ஒருவனை தீருவிலிருந்து அழைப்பித்தான். இவன் நப்தலி கோத்திரத்தாளாகிய ஒரு கைம் பெண்ணின் மகன். இவன் தகப்பன் தீரு நகரத்தானாகிய கன்னான். வெண்கல வேலையை செய்யத்தக்க யுக்தியும், புத்தியும், அறிவும் உள்ளவனாயிருந்தான். இவன் ராஜாவாகிய சாலமோனிடத்தில் வந்து அவன் வேலையையெல்லாம் செய்தான். இவன் இரண்டு வெண்கலத் தூண்களை உண்டாக்கினான். இந்த இரண்டு தூண்களின் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?

கர்த்தருடைய சபையிலே தூண்களாய் இருக்கிற விசுவாசிகள் ஒருவராகவோ, தனிமையாகவோ இருக்கக் கூடாது. தன்னைப் போலவே தூண்களாக கர்த்தரால் பயன்படுத்தப்படுகின்ற கூட்டு விசுவாசிகளுடனோ, அருகிலுள்ள மூப்பர்களுடனோ நாம் நல்ல ஒரு

ஐக்கியம் வைக்கிறவர்களாய் இருக்க வேண்டும். சாலமோன் தேவாலயத்தில் ஒரு தூண் அல்ல. இரண்டு தூண்கள் இருந்தது. இது எதைக் குறிக்கிறது என்று சொன்னால் இன்று விசுவாசிகளாகிய கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் ஐக்கியமும், சமாதானமும், ஒரு மனமும், ஏக இருதயம் உள்ளவர்களாக இருந்தால் நாம் சபைக்குத் தூண்களாக இருந்து ஆசீர்வதிக்கப்படுவோம். நம் மூலம் பலர் தேவாலயத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இந்த சத்தியத்தை உறுதியாகச் சொல்லுகிறார். இந்த பூமியிலே இருவர் தாங்கள் வேண்டிக் கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்து ஒருமனப் பட்டிருந்தால் பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகுமென்று சொல்கிறார். (மத். 18 : 19)

அர்ஜெண்டினாவில் நடந்த எழுப்புதலுக்காக YWAM என்ற குழுவிலிருந்து ஒரு கூட்ட வாலிபர்கள் ஊழியத்திற்குப் போனார்கள். அந்த ஊழியத்திலே ஜான் தாசன் என்ற தேவ மனிதன் செயலாளராகவும், டேவிட் வேலிஸ் என்ற மனிதன் தலைவராகவும் இருந்தார்கள். இவர்கள் இருவரும் ஊழியத்திற்கு போனபோது சுமார் 20 சகோதரர்கள் ஊழியத்திற்காகச் சென்றார்கள். அவர்கள் அர்ஜெண்டினா எழுப்புதலுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கும் வேளையிலே, ஒரு சில இடங்களிலே தெருப்பிரசங்கங்களையும், சுவிசேஷ பிரதிகளையும் விநியோகித்தார்கள். ஒரு சிலர் இரட்சிக்கப்பட்டு சுமார் 70 பேருக்கு மேல் 3 மாதத்திலே விசுவாசிகளானார்கள்.

ஆத்துமாக்களைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிற பிசாசு தந்திரமாக தூண்களைப் போலிருக்கும் அந்த இரண்டு ஊழியர்களையும் தாக்கினான். தலைவராய் இருக்கும் டேவிட் வேலிஸ் கடுமையான ஜுரத்தினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலானார். ஜான்தாசன் என்ற தேவமனிதன் 3 நாட்களாக தனிமையிலே சுற்றி ஊழியம் செய்துவிட்டு, மூன்று நாட்களுக்கு அப்புறம் டேவிட் வேலிஸ்-ஐ பார்த்தபோது அவர் இன்னும் கடுமையாக நோய்வாய்ப் பட்டிருந்தார்.

டேவிட் வேலிஸ் என்பவரை ஆஸ்பத்திரியில் சேர்த்த போது மருத்துவர்கள் ஜான்தாசனைத் திட்டினார்கள். கிறிஸ்தவர்களுக்கு அறிவு இல்லை. புத்தி இல்லை. வியாதி வரும் போது ஆரம்பத்திலே கவனிக்கக் கூடிய அக்கரையில்லை. இந்த டேவிட் வேலிஸ்-க்கு மலேரியா காய்ச்சல் கண்டிருக்கிறது. இவர் பிழைப்பது கடினம் என்று

சொல்லிவிட்டார்கள். ஜான்தாசன் தன் வீட்டிற்கு வந்து மூன்று நாட்களாக ஜெபித்து, உபவாசித்து, தன் உடன் தூணைப் போலிருக்கிற சகோதரனுக்காக போராடி ஜெபித்தார். மூன்று நாட்கள் கழித்து ஆஸ்பத்திரியில் போய் பார்த்தபோது மலேரியா இரண்டு மடங்காகக் கூடிவிட்டது. இனி டேவிட் வேலிஸ் பிழைப்பது கடினம். அப்படி பிழைத்தாலும் வீட்டின் மூலையிலே போடப்பட்டிருக்கிற ஒரு முட்டைக்கோஸ் போல செயலற்றுக் கிடப்பார். கை கால்கள் அசையாது. மூளை வேலை செய்யாது. பேசும் திறனை இழந்து போவார். கேட்கும் செவித் திறனை இழப்பார் - ஒரு ஜீவனற்ற ஒரு பச்சைக் காய் போல, முட்டைக் கோஸ் போல இருப்பார் என்று டாக்டர்கள் சொன்னார்கள். தேவ மனுசன் ஜான் தாசன் ஆவியிலே நொறுங்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்.

இப்பொழுது டேவிட் வேலிஸை intensive care என்று சொல்லக் கூடிய அவசர நோய் சிகிச்சைப் பிரிவில் சேர்த்து, கண்ணாடி அறைக்குள்ளே அவரைப் பூட்டி வைத்தார்கள். டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் ஒரு பலனும் இல்லை. அடுத்த நாள் ஜான் தாசன் மருத்துவரின் அனுமதியோடு டேவிட் வேலிஸின் அருகிலேப் போய் குனிந்து அவர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினாலே டேவிட் வேலிஸ் உடைய ஜீவனுக்கு விரோதமாய் போராடுகிற பொல்லாத சத்துருவே; உன்னைக் கடிந்து கொள்கிறேன். உன் கரத்தை எடு என்று ஜான் தாசன் கட்டளையிட்டார். அந்த வேளையிலே Coma stage என்று சொல்லக்கூடிய மயக்க நிலையில் இருந்த டேவிட் வேலிஸ். ஆமென், அல்லேலூயா என்று அவர் லேசாக தன் வாயிலே முணுமுணுத்து கர்த்தரைத் துதித்தார்.

இப்பொழுது இந்த இருவரும் ஜெபத்திலே ஒரு மனப்பட்டு விட்டார்கள். மறுநாள் இந்த ஜான் தாசன் ஆஸ்பத்திரிக்குச் சென்று டேவிட் வேலிஸ்-ஐ பார்த்தபோது சற்று குணமடைந்திருந்தார். ஒரு சில நாட்களிலே பரிபூரண சுகமடைந்தார். அவர் வீட்டிற்கு வந்தார். இப்பொழுது ஊட்டியை மையமாகக் கொண்டு இந்தியாவிலே இருந்து கொண்டு, உலக எழுப்புதலுக்காக ஊழியம் செய்து கொண்டிருக்கிறார். அவருக்கு மனைவியும், இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள். செயலற்றவராய் பேச்சுத் திறனோ, செவித்திறனோ, இல்லாதபடி கைகால் அசையாமல் பிணம் போல செயலற்று கிடப்பார். நடைபிணமாய் இருப்பார் என்று சொன்ன அந்த டாக்டருடைய கூற்றை தேவன் அபத்தமாக்கி அந்த டேவிட் வேலிஸ்-ஐ தேவன் குணமாக்கினார். இன்றைக்கு "YWAM" ஊழியமும் சிறப்பாய் நடக்கிறது.

டேவிட் வேலிஸ் ஆப்ரிக்காவிலும், நியூஸ்லாந்திலும் பாஸ்டராகவும், மிஷனெரியாகவும் இருந்து பலத்த காரியங்களை செய்தார். ஊழியத்தில் உள்ள இருவரும் ஒரு மனமாய் ஜெபித்ததுபோல் நாமும் செயல்படுவோமாக! தூண்களாக முன் நிற்போமாக!

உங்களில் ஒருவன் ஆயிரம் பேரையும், இரண்டு பேர் பதினாயிரம் பேரையும் துரத்துவான் என்பது அருமை ஆண்டவரின் அற்புதமான வாக்குத்தத்தம். ஆகவே ஒண்டியாய் இருந்து விழுகிறவனுக்கு ஐயோ! இரண்டு பேராய் இருந்து படுத்துக் கொண்டால் சூடுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான் என்று ஆண்டவர் சொல்கிறார்.

அருமை சகோதரா! அன்பு சகோதரியே! உனக்குத் தேவன் கிருபை வரங்களைக் கொடுத்து சபையில் தூண்களைப் போல் வைத்திருந்தால் நீங்கள் தனிமையாக செயல்பட வேண்டாம். நீங்கள் உங்கள் மேய்ப்பரோடும் உடன் மூப்பரோடும், உடன் சகோதர, சகோதரிகளோடும் சேர்ந்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யுங்கள்.

முக்கியமாக சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் ஏலிக்கு முன்பாக கர்த்தருக்கு பணிவிடை செய்தான் என்று வேதம் சொல்லுகிறபடி, தூண்களாய் இருக்கிற நீங்கள் உங்கள் போதகருக்கு முன்பாக நின்று, எங்கே வீடு சந்திக்கப் போகிறீர்கள், எந்த கிராமத்திற்கு சுவிசேஷ ஊழியத்திற்கு போகிறீர்கள், எந்த வீட்டை சந்தித்தீர்கள்? எந்த ஆத்துமாவிற்கு ஆண்டவரை பகிர்ந்து கொடுக்கிறீர்கள்? என்ற விபரத்தையெல்லாம் அவ்வப்போது உங்கள் மூப்பர்களோடு கூட பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒரு தூணாக அல்ல, இரண்டு தூண்களாக இருந்து செயல்படுங்கள். தேவன் உங்களை எழுப்புதலுக்குப் பாத்திரமாக பயன்படுத்துவார்.

**2. ஒரே மாதிரியான தூண்கள்:** சாலமோன் தேவாலயத்திலே நிறுத்தப்பட்ட இரண்டு தூண்களும் ஒரே மாதிரியான தூண்களாக இருந்தது. வலது புறத்தில் இருந்த தூணும், இடது புறத்தில் இருந்த தூணும் தோற்றத்திலும், அழகிலும், உயரத்திலும், அளவிலும், வனப்பிலும், செய்யப்பட்ட உலோகத்திலும், நிறையிலும் ஒரே மாதிரியாய்க் காணப்பட்டது. அருமையான தேவனுடைய பிள்ளைகளே! இந்த ஒரே மாதிரியான தூண் என்பது UNIFORM என்பதைக் காட்டுகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்கு கட்டளையிடுகிறது என்னவென்றால், உன் வயிலிலே கலப்பு இன

விதைகளை விதைக்க வேண்டாம். கழுதையையும், காளையையும் சேர்த்து உழ வேண்டாம் விசுவாசியும், அவிசுவாசியும் சேர்ந்திருக்க வேண்டாம். அந்நிய நுகத்திலே அவிசுவாசியோடு பிணைக்கப்பட வேண்டாம் என்றெல்லாம் ஆண்டவர் திட்ட வட்டமாய் சொல்லியிருக்கிறார்.

இன்று நம்முடைய சபைகளிலே விசுவாசிகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையிலே ஒரே தரிசனம், ஒரே நோக்கம், ஒரே திட்டத்திற்காக, உழைக்கிறவர்களாக, செயல்படுகிறவர்களாக காணப்பட வேண்டும். ஆனால் கொரிந்திய சபையைக் கண்ணோக்கிப் பார்த்தால் ஒரே மாதிரியான விசுவாசிகளாக அங்கே அவர்கள் இல்லை. மூன்று வித்தியாசமான கூட்டத்தார் அங்கிருந்தார்கள். ஆவிக்குரிய சிலர் காணப்பட்டார்கள். மாம்சத்திற்குரியவர்கள் அநேகர் காணப்பட்டார்கள். ஜென்ம சுபாவத்திற்குரியவர்கள் இன்னும் ஏராளமான பேர் காணப்பட்டார்கள். ஆகவே அந்த சபையிலே வழக்குகளும், சண்டைகளும், பிரிவினைகளும் மார்க்கபேதங்களும், குழப்பங்களும் காணப்பட்டன. சில சிறு எறும்புகள் ஒன்றாக, ஒரே பக்கமாக தங்களைவிட பெரிய அரிசி பையை ஒரே திசையில் இழுத்துச் செல்லும்போது எளிதில் அதைக் கொண்டு போவதைப் போல் நாம் எல்லோரும்ஒரே தரிசனத்தேடு செயல்படுவோமாக?

**3. அழகுள்ள தூண்கள் :** சாலமோன் தேவாலயத்திலே முன்பாக நிறுத்தப்பட்ட இரண்டு தூண்களும் பார்வைக்கு மிக அழகாக இருந்தது என்று வேதம் சொல்லுகிறது. அந்த தூண்கள் பார்வைக்கு மிக நேர்த்தியாக இருந்தது. டேக்ஸ் என்ற வேத பண்டிதன் 366-ஆம் பக்கம் (OT) - Coloum - 4 - B) The Piller has been beautiful beyondwords to discribe என்று எழுதுகிறார். இந்த தூண்கள் பார்வைக்கு அழகானவை. வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை என்று அவர் சொல்கிறார். ஏனென்றால் இந்த தூண்கள் வழுவழுப்பாய் இருந்தது. உயரமாக இருந்தது. சுற்றுக்கட்டுகள் இருந்தது. அதிலே கும்பங்கள் இருந்தது. வலை பின்னல் இருந்தது. மாதுளம் பழங்கள் செய்யப்பட்டிருந்தது. விரிந்த லீலிபுஷ்பங்களின் வேலை அதிலே இருந்தது. விம்மிய மாதுளம் பழங்களின் வரிசை அதிலே இருந்தது. இத்தனையும் தோற்றத்திற்குப் பார்க்க மிகவும் அழகுள்ள தூண்களாகக் காணப்பட்டது. சங். 45 : 13ல் ராஜகுமாரத்தி உள்ளாக பூரண மகிமையுடையவள். அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. விசுவாசிகள் ஆவிக்குரிய பிரகாரம் அழகுள்ளவர்களே. கர்த்தருடைய பிள்ளைகள்

தேவனுடைய பார்வையிலே அழகுள்ளவர்களே. ஆகவே உங்களுடைய உள்ளான அழகை பெருக்கிக் கொள்ள கவனமுள்ளவர்களாயிருங்கள். I பேதுரு 4-3ல் சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாய் இருக்கக் கடவது. அது தேவனுடைய பார்வையிலே விலையேறப் பெற்றது என்று பேதுரு அப்போஸ்தலன் எழுதுகிறார். இன்று பெண்களுக்கு மட்டுமல்ல. ஆண்களுக்கும் இந்த இரண்டு விதமான ஆவி தேவை. சாந்தமுள்ள ஆவி, அமைதலுள்ள ஆவி. இதுவே நம்முடைய உள்ளான அழகு. இது ஒரு நாளும் வாடாது. குறையாது. கடையிலே கிடைக்காது. பரிசுத்த ஆவியானவர் மட்டுமே அந்த உள்ளான அமைதலுள்ள, சாந்தமுள்ள சுபாவத்தைக் கொடுத்து உள்ளான அலங்கரிப்பை நமக்குத் தருகிறார். தூண்களாய் இருக்கிற அருமை விசுவாசியே, சகோதரா, மூப்பர்களே! உங்களுக்கு இந்த இரண்டு விதமான ஆவி இருக்கிறதா? சாந்தமுள்ள ஆவி, அமைதலுள்ள ஆவி, இந்த இரண்டும் இருந்தால் தான் நீங்கள் சபைக்குத் தூண்கள். இல்லாவிட்டால் சபையிலே நீங்கள் துரும்பாய் இருப்பீர்கள் ஒரு சிறு காற்று அடித்தாலும் கோபப்பட்டு, எரிச்சல் பட்டு துரும்பானது இந்தக் கூரையிலிருந்து பிடுங்கப்பட்டு அடுத்தக் கூரையிலே போய் ஒட்டிக் கொள்ளும். அல்லது குப்பையிலே விழும். அல்லது சாக்கடையிலே விழும். எனவே சாந்தமுள்ள ஆவியோடு அமைதலுள்ள ஆவியோடு அழகான தூண்களாய் விளங்குவீர்களாக.

**4. உயரமான தூண்கள்:** சாலமோன் கட்டிய தேவாலயத்திலே முன்பாக நின்ற தூண்கள் இரண்டும் வெண்கலத்தால் செய்யப்பட்டது. ஒவ்வொரு தூணும் 18 முழ உயரமும், ஒவ்வொரு தூணின் சுற்றளவும் பன்னிரண்டு முழ நூலளவுமாயிருந்தது. அந்தத் தூண்களுடைய தலைப்பில் வைக்க வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இரண்டு கும்பங்களை உண்டாக்கினான். ஒவ்வொரு கும்பமும் ஐந்துமுழ உயரமாயிருந்தது. தூண்களுடைய முனையின் மேலுள்ள கும்பங்களுக்கு வலை போன்ற பின்னல்களும், சங்கிலி போன்ற தொங்கல்களும் ஒவ்வொரு கும்பத்திற்கும் எவ்வேழாக இருந்தது. தூண்களைப் பண்ணின விதமாவது: தலைப்பின் மேலுள்ள குடும்பங்களை மூடும்படிக்கு கும்பங்கள் ஒவ்வொன்றிலும் பின்னலின் மேல் சுற்றிலும் இரண்டு வரிசை மாதுளம் பழங்களைச் செய்வித்தான். ஒவ்வொரு வரிசைக்கும் நூறு நூறாக இருநூறு மாதுளம் பழங்கள் இருந்தது. மண்டபத்தின் முன்னிருக்கும் அந்தத் தூண்களுடைய தலைப்பின் மேலுள்ள கும்பங்கள் லீலி புஷ்பங்களின் வேலையும், நாலுமுழ உயரமுமாயிருந்தது. ஆகவே அந்த தூண்களுடைய மொத்த

உயரம் 18 + 5 + 4 = 27 முழ உயரம், சுமார் 60 அடி உயரமுள்ள தூணாக அந்தத் தூண்கள் இருந்தது.

இரண்டு தூண்களின் மேலுமுள்ள கும்பங்களில் செய்யப்பட்ட பின்னலுக்கு அருகே இருந்த இடத்தில் விம்மிய இருநூறு மாதளம் பழங்களின் வரிசைகள் சுற்றிலும் இருந்தது. மற்றக் கும்பத்திலும் அப்படியே இருந்தது. அந்தத் தூண்களைத் தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்தினான் என்று I இராஜா 7:15 to 21 வசனம் வரைக்கும் நாம் காண்கிறோம். இந்த தூண்கள் சுமார் 60 அடி உயரமாக இருந்தது. தேவாலய தூண்கள் இவ்வளவு உயரமாக இருப்பதற்கு காரணம் என்ன? தேவ ஜனமே! சற்று சிந்தித்து நாம் அறிய வேண்டும்.

ஆமான் 60 முழ உயரத்திற்கு ஒரு தூக்கு மரத்தை யூதனாகிய மொர்தகாய்க்காக செய்தான். தான் செய்த தூக்கு மரத்தில் தானே சிக்கிக் கொண்டான். அகாஸ்வேரு ராஜா உக்கிரங் கொண்டவனாக ஆமானை தூக்கில் போட கட்டளையிட்டான். மொர்தகாயை விடுவித்து கனப்படுத்தும்படி கட்டளை பிறப்பித்தான். மறுநாள் காலையிலே 60 முழ உயரமான அந்த தூக்கு மரத்தில் ஆமான் தொங்கிக் கொண்டிருந்தான். இந்த 60 முழ தூக்குமரம் ஏன் இவ்வளவு உயரமாக செய்யப்பட்டது? ஒரு காரணம் என்னவென்றால் அகாஸ் வேரு அரண்மனையின் அலங்கம் எவ்வளவு உயரமாயிருந்ததோ அதை விட உயரமானது இந்த தூக்கு மரத்தின் உயரம் என்று வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். ஆமானாகிய யூதரின் சத்துரு தூக்கில் தொங்குவதை தோற்கடிக்கப்பட்டதை அகில உலகத்திலிருக்கிற சகல ஜனங்களும் பார்க்கத்தக்க அளவிற்கு உயரத்திலே அவன் தொங்க விடப்பட்டான்.

எனவே தேவ ஜனமே! இந்த உயரமான தூண்கள் எதைக் குறிக்கிறது என்றால் நம்முடைய சத்துருவாகிய பிசாசு நம்முடைய காலின் கீழே நசுக்கப்பட்டான். அழிக்கப்பட்டான். நாம் அவன் மேல் ஜெயம் எடுத்திருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. தேவாலயத்தின் தூண்கள் உயரமாக இருக்கும் போது சத்துருக்கள் தோற்கடிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை உலகத்திற்கு நாம் காட்டுகிறோம். நம்முடைய கண்களும் சத்துருவின் தோல்வியைக் காண்கிறது. நாம் ஜெயித்துவிட்டோம் என்பதையும் நாம் நிச்சயப்படுத்த முடிகிறது.

நமது சபைக்கு உண்டாகிற ஜெய ஜீவியம், அற்புத விடுதலை, ஆறுதல், சுகம் ஆகியவற்றை நாம் மட்டும் அறிந்தால் போதாது. அது முழு உலகத்திற்கும் அறிவிக்கப்பட வேண்டும். அதற்காய் தான் நாம் உயர்ந்த தூண்களாய் இருக்க வேண்டும்.

நாம் தேவனுடைய குமாரனைப் பற்றும் அறிவிலும், விசுவாசத்திலும், ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்குத் தக்க பூரண புருசராக வளர வேண்டுமென்று எபே 4:11-ல் நாம் வாசிக்கிறோம். நாம் இனிக் குழந்தைகளாயிராமல் மனுசருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான பலவித தந்தரமான போதகமாகிய காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல் அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவர்களாய் நாம் இருக்க வேண்டுமென்று எபே 14, 15-ல் சொல்லப்பட்டுள்ளது.

தூண்களாக இருக்கிற சகோதர, சகோதரிகளே! நீங்கள் லீலிபுஷ்பம் போல் அழகும், விரிந்த மாதுளம்பழம் போல வனப்பும் உடையவர்களாக மட்டுமல்ல உயரமான தூண்களாக நின்று கிறிஸ்துவின் வெற்றியை முழு உலகத்திற்கும் அறிவியுங்கள். சாத்தானின் தோல்வியை முழு உலகத்திற்கும் பறை சாற்றுங்கள். நமது சபையில் உள்ள விசுவாச மக்கள் இப்படிப்பட்ட உயரமான தூண்களாக இருப்பார்களாக.

**பெலனுள்ள தூண்கள் :** தேவாலயத்தின் முன்னே நிற்கிற தூண்களுடைய ஒன்றின் பெயர் போவாஸ் என்பதாகும். போவாஸ் என்பதற்கு In him - God's strength. தேவனுக்குள் என் பெலன் இருக்கிறது என்று அர்த்தம். வேறுவிதமாகச் சொல்லப் போனால் கர்த்தர் என்னைப் பலப்படுத்துகிறவர் என்று அர்த்தம். அப்போஸ்தலர் 1:8-ல் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்று நம் ஆண்டவர் சொன்னார். பரிசுத்த ஆவியானவர் நம்மை நிரப்பும் போது பலமுள்ள, வல்லமையுள்ள விசுவாசிகளாக தேவன் மாற்றிவிடுகிறார். நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுசனில் வல்லமையாக பலப்பட வேண்டும் என்று எபே 3:14,145,6 வசனங்ளில் நாம் வாசிக்கிறோம்.

தேவ ஜனமே! நாம் தேவனுடைய ஆலயத்தில் பலமுள்ள தூண்களாக போவாஸைப் போல் விளங்க வேண்டுமானால் அதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், வல்லமையும் தான் நம்மை அவ்விதமாக பலமுள்ள தூண்களாக நிலை நிறுத்தும். நாம் பலமுள்ள தூண்களாக ஆசீர்வதிக்கப்படும் போது நான்கு இடங்களுக்கு சாட்சியாக இருக்கிறோம் என்று ஆவியானவர் சொல்லுகிறார்.

எருசலேமில் சாட்சி என்பது நமது சொந்த தலைமை சபையில் சாட்சிகளாக விளங்குகிறோம். நம்முடைய சபை இருக்கிறதான உள்ளூரிலே நாம் சாட்சியாக விளங்குகிறோம்.

யூதேயா முழுவதும் என்பது நம்முடைய National Ministry அல்லது நம்முடைய சொந்த தேசம் முழுவதிலும் செய்யப் போகிற ஊழியம், ஜீவிக்கப் போகிற சாட்சி உள்ள வாழ்க்கை ஆகியவற்றைக் குறிக்கிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பெலப்படுத்தும் போது நம்முடைய சொந்த சபையிலும் நாம் சாட்சியாய் வாழ முடியும். நாம் வாழுகிற தேசம் முழுவதற்கும் சாட்சியாக ஜீவிக்க முடியும். கிணற்று தவளை போல குறிப்பிட்ட ஒரு சின்ன இடத்தில் மாத்திரம் நாம் இருக்கப் போவது இல்லை. ஆவியானவருடைய பெலன் உங்களை நிரப்பும் போது உங்களுடைய தலைமை சபையில் மட்டுமல்ல உங்கள் தேசம் முழுவதற்கும் கர்த்தர் உங்களைக் கொண்டு செல்வார். சாட்சியாக நிறுத்துவார். கிறிஸ்துவுக்கு சாட்சியாக ஊழியத்திலே பயன்படுத்துவார்.

நாம் சமாரியாவிலும் சாட்சியாக இருப்போம். எருசலேமுக்கும், சமாரியாவிற்கும் நாகரீகத்திலும், தோற்றத்திலும், பழக்க வழக்கத்திலும், ஜீவியத்திலும் அநேக வித்தியாசங்கள் இருக்கிறது. சமாரியா என்பது (Cross cultural) மற்ற்றுக் கலாச்சாரமுள்ள நாடு என்று அர்த்தம். உதாரணமாக தமிழ் நாட்டிலே இருக்கிற நாம் அந்த மான், நிக்கோபா தீவுகளுக்கோ, சிங்கப்பூர், மலேசியாவுக்கோ அல்லது ஆப்ரிக்காவில் இருக்கும் கென்யா, டான்சானியா போன்ற தேசங்களுக்கோ, அல்லது மேற்கத்திய நாடுகளுக்கோ, அல்லது அரபு நாடுகளுக்கோ கர்த்தரால் கொண்டு செல்லப்பட்டு பயன்படுத்தப்படுவோமானால் அதுதான் சமாரியாவிலே சாட்சியாய் இருக்கிற ஊழியம். பரிசுத்த ஆவியானவர் உங்களைப் பெலப்படுத்தி தூண்களாக்கும் போது நீங்கள் போவாஸைப் போல் பெலனடைவீர்கள். பெலனடைவது எதற்காக? சமாரியாவிற்கு கொண்டு செல்லப்படுவதற்காக. மூப்பனாகிய பிலிப்பு சமாரியாவிற்கு கொண்டு செல்லப்பட்டார். தன் 4 குமாரத்திகளோடு அங்கு போனார். அங்கே வல்லமை உள்ள ஊழியத்தை அவர் செய்தார். தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல. இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை நண்பனே! சகோதர, சகோதரிகளே! ஒரு குறிப்பிட்ட இடத்திலே நீங்கள் முடங்கிக் கிடக்கிறீர்களே என்று நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். ஒரு நாள் வரும். உங்களை தேவன் எடுத்துக் கொண்டு மாற்றுக் கலாச்சாரமுள்ள மக்கள் மத்தியிலே ஆண்டவர் உங்களை

பயன்படுத்துவார்.

பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சியாய் இருப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார். அதாவது (International Ministry) அகல உலக தேசங்களுக்கும் தேவன் நம்மை பயன்படுத்துவார் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே அகில உலகங்களுக்கும் நீங்கள் எங்கு சென்றாலும், எந்த இடத்திற்கு சென்றாலும், எந்த தேசத்திற்கு சென்றாலும் உங்கள் மேல் இருக்கும் அபிஷேகம் உங்களை பெலப்படுத்தி உலகிற்கு ஆசீர்வாதமாக பயன்படுத்தும். ஆகவே பெலத்தின் மேல் பெலனடையுங்கள். வல்லமை மேல் வல்லமை பெறுங்கள். பெலனுள்ள தூண்களாக இன்று தேவனுடைய சபையிலே காணப்படுங்கள். நாளுக்கு நாள் தாவீது விருத்தி அடைந்தது போல, படிப்படியாய் நீங்களும் கர்த்தருடைய ஊழியத்திலே ஆசீர்வதிக்கப்பட்டு முழு உலகமும் செல்லுங்கள்.

**6. ஸ்திரமான தூண்கள்:** சாலமோன் தேவாலயத்தின் முன்னிருந்த அடுத்த தூணின் பெயர் ''யாகீன்'' என்பதாகும். யாகீன் என்பதற்கு God Establishes ''தேவன் என்னை ஸ்திரப்படுத்துகிறவர் என்று அர்த்தம். தேவ பிள்ளைகளாகிய நம்மை தேவன் தமது ஆவியினால் நிரப்பும் போது பெலப்படுத்துகிறது மட்டுமல்ல. அதோடு வரங்களையும் தந்து ஸ்திரப்படுத்துகிறார். ஆவியில் பெலப்படும்போது நமது வாழ்வு பிரகாசமடைகிறது. வரங்களைப் பெற்று ஸ்திரப்படும் போது நாம் பிறருக்கு ஆசீர்வாதமாக பயன்படுகிறோம். (ரோமர் 1 : 10) பரிசுத்த ஆவியானவர் நமக்கு வரங்களை தந்து ஸ்திரப்படுத்துகிறவராயிருக்கிறார். I கொரி 1 : 7,8-ல் நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். கர்த்தராக இயேசுகிறிஸ்து வரும் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவு பரியந்தமும் அவர் தாமே உங்களை ஸ்திரப்படுத்துவாராக என்று சொல்லியிருக்கிறது. தேவ ஜனங்களே! நீங்கள் ஸ்திரமுள்ள தூண்களாக நில்லுங்கள்.

கடந்த நாட்களிலே பீஹாரில் நடந்த ஒரு கன்வென்ஷனிலே Fr. பெர்க்மான்ஸ் அவர்கள் கலந்துகொண்டு கர்த்தருடைய செய்தியைக் கொடுத்தார்களாம். தூரத்திலிருந்து வந்த ஒரு ஆதி வாசிப்பெண் அந்தக் கூட்டத்திலே மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றார்கள். அந்தக் குறிப்பிட்ட பெண் ஆண்டவரை ஏற்றுக் கொண்டு முழுகி ஞானஸ்நானம் எடுத்தபோது தன் நெற்றியில் இருக்கிற பொட்டுகளை அழித்துவிட்டாள். வட இந்தியாவிலே

ஸ்திரிகள் பொட்டு வைப்பது மிகவும் முக்கியம். புருவங்களுக்கு நடுவே வைக்கும் பொட்டு சிவபெருமானுக்கும், தலையின் உச்சியின் நடுவே வைக்கும் பொட்டு தன் புருசனுக்கு கனத்தைக் கொடுப்பதற்குமாக வைக்கப்படும்.

ஒரு ஸ்திரி தன் நெற்றியில் உள்ள பொட்டை அழிப்பாளானால், தன் புருஷன் இறந்து விட்டான். கைம்பெண்; அல்லது விதவை என்று அர்த்தம் பெறுகிறது. வட இந்தியாவில் இந்தக் கலாச்சாரம் சுவிசேஷ ஊழியத்திற்கு இடையூராய் உள்ளது. இந்த ஸ்திரியானவள் மனந்திரும்பின போது இந்துக் கலாச்சாரத்தை விட்டு விலகி தன் நெற்றியில் இருக்கிற பொட்டை தைரியத்தோடு அழித்து விட்டாள். அதை அறிந்த ஒரு மனுசன் ஓடிப் போய்ச் சென்று அருகில் இருக்கிற கிராமத்திலிருக்கிற அவள் புருசனிடத்திலே உன் மனைவி நெற்றியிலிருந்த பொட்டை அழித்துவிட்டு தாசியைப் போலவும், வேசியைப் போலவும் மாறிவிட்டாள். கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்ந்து விட்டாள். அவள் இப்பொழுது ஒரு குடும்பப் பெண்போல் இல்லை என்று சொல்லிவிட்டான். இந்நாட்களிலே நற்செய்தி சொல்லுவோரின் வேகத்தை விட துர்ச்செய்தி சொல்லுவோரின் வேகம்தான் அதிகம். அகிமாஸ் நற்செய்தி சொல்லுகிறவன். கூஷியோ துர்ச்செய்தி சொல்லுகிறவன். ஆனால் கூஷியானவன் அகிமாஸ்க்கு முந்திக் கொண்டுபோய் தாவீது ராஜாவுக்கு; ''உம்முடைய குமாரன் அப்சலோம் மரித்தான்'' என்று சொன்னான். இன்றும் நற்செய்தி சொல்லுவோரின் வேகத்தைவிட துர்ச்செய்தி செர்ல்வோரின் வேகம் கூடுதலானதுதான்.

தன் மனைவியைக் குறித்து சொல்லப்பட்ட இழிவான இந்த வார்த்தைகளை கேட்டபோது விவசாய வேலை செய்த அந்த மனிதன் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தன் மனைவியை அடிப்பதற்கு ஆயத்தமானான். விசுவாசியான இந்த மனைவி தன் புருசனிடம் போனபோது, ''நீ கிறிஸ்தவளாக மாறியது உண்மை தானா?'' என்றுக் கேட்டான். அவள் ஆம்; என்று சொல்லி, பரிசுத்த ஆவியில் நிறைந்து அந்நிய பாஷைகளைப் பேசினாள். உடனே அந்த புருசன் மூர்க்க வெறிகொண்டு தன் கையிலுள்ள மண்வெட்டியால் அவளுடைய மண்டையை உடைத்து பிளந்துவிட்டான். இரத்த வெள்ளத்தில் அந்த ஸ்திரி கீழே சாய்ந்தாள். அவன் கோப வேஷத்தோடு புறப்பட்டுப் போய் தன் நண்பனைப் பார்த்து என் மனைவியை இவ்விதமாய் அடித்து காயப்படுத்தி கீழே சாய்த்துவிட்டேன். அவளை எடுத்துக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் கவனி. இன்னும் மூன்று நாட்கள் கழித்து நான் திரும்பி வருவேன். நான் திரும்பி வருவதற்குள் அவள் திரும்பவும் பொட்டு வைத்து முன்பு போல இந்துப் பெண்ணாக வாழ்ந்தால் நான்

புருசனாக இருப்பேன். இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்று எனக்கேத் தெரியாது என்று சொல்லி மூர்க்கமாய் போய்விட்டான்.

அந்த மனுசனுடைய நண்பர் ஓடிவந்து காயம்பட்ட அந்த ஸ்திரியை எடுத்துக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தார். மூன்று நாட்கள் கழித்து அந்த பெண் மூர்ச்சை தெளிந்து சுயபுத்தி வந்தபோது அவள் புருசனுடைய நண்பன் அருகில் நின்று ஏனம்மா? இப்படி பொட்டுகளை அழித்துவிட்டாய்? ஏன் கிறிஸ்தவளாய் மாறிவிட்டாய்? என்று விசாரித்தான். அப்பொழுது அந்த ஸ்திரி : நான் இயேசுவே தேவன், இயேசுவே வழி என்று அறிந்து கொண்டேன். ஆகவே இப்பொழுது ஆண்டவரை ஏற்றுக் கொண்டேன். அது என் புருசனுக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னாள். அதற்கு அந்த நண்பர் சொன்னார் நீ இப்பொழுது கிறிஸ்தவ மார்க்கத்திலே சேர்ந்ததினாலே உன்னுடைய பழைய மூளையை எடுத்துவிட்டு சலவை செய்யப்பட்ட புதிய மூளையை உன் தலையிலே வைத்திருக்கிறார்களாம் என்று அறிந்து தான் உன் புருசன் உன் மண்டையைப் பிளந்து மூளை இருக்கிறதா இல்லையா என்று பார்த்தானாம்.

அதற்கு அந்த ஸ்திரி சொன்ன பதில் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. என் புருசனோடு நான் வாழ்ந்த போது எனக்கு மூளை இல்லாதிருந்தது. இப்பொழுது இந்த கிறிஸ்தவ கூட்டத்திற்குப் போய் இயேசுவை ஏற்றபோது இப்போது தான் எனக்கு மூளை வந்து புத்தி தெளிந்தது. ஏனென்றால் I யோவான் 5 : 12-ல் குமாரனை உடையவன் மூளையை உடையவன். குமாரன் இல்லாதவன் மூளை இல்லாதவன் என்று அந்த ஸ்திரி சொன்னாள். அப்பொழுது அவள் புருசனுடைய நண்பன் கோபங்கொண்டு எனக்கும், உன் புருசனுக்கும் மூளை இல்லை. உனக்கும், அந்த கிறிஸ்தவர்களுக்கும் மட்டுமே மூளை இருக்கிறது என்று சொல்லுகிறாயா? என்று கேட்டார். அப்பொழுது இவள் ஐயா, நான் உங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. என்னைப் பற்றி சொல்கிறேன். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன் என்பது போல குமாரனை உடையவன் மூளையை உடையவன். குமாரனாகிய இயேசுவை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மூளை இல்லாதவர்கள். ஆகவே அந்த மூளை வெண்மையாய் இருக்கிறதா, கருப்பாய் இருக்கிறதா? என்று பார்ப்பதற்காகத்தான் என் புருசன் என் மண்டையை உடைத்துப் பார்த்தார் என்று சொன்னார்களாம். படிப்பறிவில்லாத அந்த ஸ்திரி பேசின அந்த ஞானத்தை கேட்டபோது அந்த நண்பன் உள்ளம் உடைந்தது. இன்னும் சற்று நேரம் பேசினால் என்னையே கிறிஸ்தவனாய் மாற்றி விடுவாய் போலிருக்கிறதே என்று சொல்லி அவன் ஆண்டவரை ஏற்றுக் கொண்டான். அவள் புருசனும்,

ஆண்டவரை ஏற்றுக் கொண்டான். அடுத்து ஆறு மாதத்திலே அவளுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் ஸ்திரத் தன்மையும், அவள் பேசுகிறதான ஆணித்தரமான வார்த்தைகளையும் கேட்டு 15 பேர் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று விசுவாசிகளானார்கள். இப்பொழுது அவளுடைய ஊரிலே அவளை முன்னிட்டு இரட்சிக்கப்பட்ட 15 பேரையும் சேர்த்து ஒரு புதிய சபை ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.

அருமை சகோதர, சகோதரிகளே! நீங்கள் ஸ்திரமுள்ள தூண்களாக இருந்தால் நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். உங்களின் ஸ்திரத்தன்மையைப் பார்க்கும் போது புறஜாதி மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு கர்த்தர் பக்கமாக வருவார்கள். ஸ்திரமுள்ள தூண்களாய் சபையில் நில்லுங்கள்.

**7. பிடுங்கப்பட்ட தூண்கள்:** இதுகாறும் ஆசீர்வாதமான காரியங்களை, தூண்களைக் குறித்து படித்துக் கொண்டு வரும் போது துக்க காரியமான மற்றொரு செய்தியையும், இந்த தூண்களைக் குறித்த செய்தியிலே ஆவியானவர் எழுதி வைத்திருக்கிறார். II இராஜா 25:16-ல் இந்த தூண்களை பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேசார் படையெடுத்து வந்து யூதாவை முற்றுகை போட்டு, எருசலேம் அலங்கத்தை சுட்டெரித்து தேவாலயத்தையெல்லாம் உடைத்து நொறுக்கி, அதிலிருக்கிற பொன்னை எல்லாம் அவன் எடுத்துக் கொண்டு, வெண்கலத்தால் செய்யப்பட்ட இந்த இரண்டு தூண்களையும் பிடுங்கி எடுத்து தன் தேசத்திற்கு கொண்டு போய் அதை தன்னுடைய தேசத்தில் வைத்துவிட்டான் என்று நாம் வாசிக்கிறோம், சாலமோன் கர்த்தருடைய ஆலயத்திற்காய் பண்ணுவித்த இரண்டு தூண்களும் ஒரு கடல் தொட்டியும், ஆதாரங்களுமாகிய அந்த சகல பணிமூட்டுகளுடைய வெண்கலத்திற்கு நிறையேயில்லை. கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கலத்தூண்களையும், அதிலிருந்த ஆதாரங்களையும் எடுத்துக் கொண்டு போனான் என்று II இராஜா 25:16,13-ல் நாம் வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு தேவாலயத்தின் தூண்கள் பிடுங்கப்பட்டன.

புதிய ஏற்பாட்டு சபையிலுள்ள தூண்கள் பிடுங்கப்படக் கூடிய தூண்களாக அல்ல. அசைக்கப்படக் கூடிய தூண்களாக அல்ல. விழுந்து போகக் கூடிய தூண்களாக அல்ல. நீங்கள் பிடுங்கப்படாத உறுதியுள்ள தூண்களாக, ஸ்திரமுள்ள தூண்களாக, நிலைத்திருக்கும் தூண்களாக இருக்க வேண்டும். பிலெதெல்பியா சபையைக் குறித்து கர்த்தர் சொல்லும்போது ஜெயங் கொள்ளுகிறவனை கர்த்தருடைய

ஆலயத்தின் தூணாக்குவேன். அவன் அதன் இடத்திலிருந்து நீங்கிப் போவது இல்லை என்று வெளி 3 : 18-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

**8. சாட்சியாய் நிற்கும் தூண்கள் :** பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகிக்கும் போது நம்மை கடைசிவரை சாட்சியாய் நிறுத்துகிறார் என்று ஏற்கெனவே வாசித்தோம். சாட்சி - To be witness என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியிலே MARTUS என்ற வார்த்தை சொல்லப்பட்டுள்ளது. MARTYARDAM என்ற வார்த்தைக்கு இரத்த சாட்சி என்று அர்த்தம். அதாவது கிறிஸ்துவுக்காக தூண்களாக நின்று நாம் ஜீவிக்கும் போது இரத்தம் சிந்தி மரிக்க வேண்டிய நிலை வந்தாலும் அந்த நேரத்திலும நமது உத்தம விசுவாசத்தையும், பரிசுத்த வாழ்வையும் மறுதலியாமல், சாட்சியாக மரிப்போம் அல்லது சாட்சியாக கடைசி வரை ஜீவிப்போம் என்பதுதான் அதனுடைய அர்த்தம். கிறிஸ்தவ மார்க்கம் இரத்தம் சிந்தி வளர்ந்த மார்க்கம்.

**''இரத்த சாட்சிகளின் இரத்தம்**
**திருச்சபையின் வித்து''**

என்று சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள். அன்பானவர்களே! உங்களுக்கு பாடுகளும், உபத்திரவங்களும் வேதனைகளும், கட்டுகளும், காவல்களும், அடிகளும், இன்னும் அதையும் தாண்டி இரத்தம் சிந்த வேண்டிய சூழ்நிலை வந்தாலும் ஒன்றை விளங்கிக் கொள்ளுங்கள். உங்கள் விசுவாசத்தைக் கெடுக்கவோ, உங்கள் பரிசுத்தத்தை உங்களை விட்டு பிடுங்கவோ, உங்கள் கிறிஸ்தவ மார்க்கத்தின் உறுதியை கெடுக்கவோ சாத்தானால் முடியாது. வேதனைகளும், சோதனைகளும் பெருகும் போது கிறிஸ்தவ மார்க்கம் இன்னும் அதிகமாய் வளரும் என்று வேதம் சொல்லுகிறது.

எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் எவ்வளவாய் ஒடுக்கப்பட்டார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள் என்று வேதம் சொல்லுகிறது. ஒடுக்கம் பெருக்கத்தைக் கொண்டு வரும். வேதனைகளும், சோதனைகளும் உங்களுடைய வாழ்விலே சாதனைகளைக் கொண்டு வரும். கர்த்தர் உங்கள் ஆசீர்வதிப்பாராக!

''எத்தனை இன்னல்கள் என் வாழ்வில் வந்தாலும்
உம்மைப் பிரியேன் ஐயா
இரத்தமே சிந்தி சாட்சியாய் வாழ்வேன்
நிச்சயம் நிச்சயமே... என்று பாடுங்கள்.

# 3

# நிலைத்திருக்கும் தூண்கள்

தேவாலயத்தின் தூண்களிலே கடந்த அதிகாரத்தைப் படிக்கும்போது சிறப்புமிக்க போவாஸ், யாகீன் என்ற இரு தூண்களும், காலச் சக்கரம் சுழன்று வருகிற வேளையில் எதிரியாகிய நேபுகாத் நேச்சாரால் அந்த தூண்கள் பிடுங்கப்பட்டு சிநெயார் தேசத்திலுள்ள பாபிலோனுக்கு அவைகள் கொண்டு போகப் பட்டன என்று நாம் படித்தோம். நேபுகாத் நேசார் போவாஸ் யாகீன் என்ற இரு தூண்களிலுள்ள வெண்கலத்தின்மேல் ஆசை கொண்டு, அத்தூண்களைப் பிடுங்கி எடுத்து தன் தேசத்துக்கு கொண்டு போனது போல இன்று புதிய ஏற்பாட்டு தேவாலயமாகிய உங்கள் ஒவ்வொருவரையும் பிடுங்கி எடுத்துக் கொண்டு பிசாசானவன் தன்னுடைய அரண்மனையாகிய சினிமா தியேட்டருக்கும் மதுபான கடைகளுக்கும், உலக கேளிக்கைகளுக்கும், நாடக சாலைகளுக்கும், கிளப்புகளுக்கும் உலக உல்லாச விடுதிகளுக்கும் கொண்டு செல்ல பிசாசானவன் தந்திரமாக தீவிரித்துக் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட சோதனைக் காலத்திலே இந்த செய்தியானது உங்களை நிலைத்திருக்கும் தூண்களாக நிலை நிறுத்தப் போகிறது. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**I. தூண்கள் என்றால் என்ன?** நிரந்தரமான சிறப்பான கட்டிடங்களைக் கட்டுகிறதான கட்டிட பொறியாளர்கள், அக்கட்டத்திலே 10 அடிக்கு ஒருமுறை அல்லது 12 அடிக்கு ஒரு முறை ஆழமாகத் தோண்டி, சிமெண்டு, இரும்புக் கம்பிகள், கருஞ்சல்லிகள் போன்றவற்றால் ஸ்திரமான தூண்களை உருவாக்கி அத்தூண்கள் மேல் பல மாடிக் கட்டிடங்களை எழுப்புகிறதை நாம் பார்க்கிறோம். தூண்கள் இல்லாதக் கட்டடங்கள் நிலைப்பது இல்லை. இதுபோலவே தம்முடைய வீடாகிய தேவனுடைய சபையை தூண்களைப் போன்ற விசுவாசிகள், தூண்களைப் போன்ற மூப்பர்கள், தூண்கலைப் போன்ற ஜெப வீரர்களைக் கொண்டு தேவன் கட்டுகிறார். ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனை என் தேவாலயத்தின் தூணாக்குவேன் என்று வெளி.

3 : 12-ல் ஆண்டவர் சொல்லுகிறார். அதிலிருந்து அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை என்று நம்மை நிலைத்திருக்கும் தூண்களாக இருக்கும்படி தேவன் வாக்கு தத்தம் செய்திருக்கிறார். எனவே தூண்கள் என்றால் (Faithful Permanently) கடைசி வரை கர்த்தர் தங்களை வைத்திருக்கிற சபைக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பவர்களே தூண்கள் எனப்படுவர். (Go out no more) கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த சபையை விட்டு வெளியே போகாமல் கர்த்தர் வைத்த சபையிலே கடைசிவரை கனி தொடுப்பவர்கள் சபைக்குத் தூணாக இருப்பார்கள்.

ஒரு சிறு தென்றல் காற்று அடித்த உடன் இந்தக் கூரையிலிருந்து கீழே விழுந்து, இன்னொரு கொடுங் காற்று அடித்தவுடன் இன்னொரு கூரையிலேப் போய் ஒட்டிக் கொள்கிறவர்கள், திருச்சபைக்கு தூண்களாக இருக்க முடியாது. அவர்கள் துரும்பாகவே எண்ணப்படுவார்கள். தூண்கள் கடைசி வரை நிலைத்திருக்கும்.

**II. தூண்களின் பெயர் என்ன?** பிலதெல்பியா சபையிலே தூண்களாக நிலைத்த தேவ ஜனங்களுக்கு நம் ஆண்டவர் 3 பெயர்களைக் கொடுக்கிறார். ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன். அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை. என் தேவனுடைய நாமத்தையும், என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன் மேல் எழுதுவேன் என்று வெளி 3 : 12-ல் கர்த்தர் சொல்லுகிறார். இந்த வசனத்திலே தேவன் தூண்கள் மேல் மூன்று நாமத்தை எழுதுவதை நாம் பார்க்கிறோம்.

**1. தேவனுக்குச் சொந்தமானவர்கள் :** தூண்கள் மேல் தேவன் என் தேவனுடைய நாமத்தை எழுதுவேன் என்று சொல்லுகிறார். தேவனுடைய நாமத்தை தேவன் எப்போது எழுதுவார்? தேவனுக்குச் சொந்தமானவர்கள் மேல் தான் தேவன் அவர் நாமத்தை எழுதுவார். கடனுக்கு, இரவல் வாங்கப்பட்ட மரம் நம் ஆலயங்களுக்குத் தூணாக இருக்க முடியாது. கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட மரங்களே நமது வீடுகளுக்கும், ஆலயங்களுக்கும் தூணாக இருக்க முடியும். அருமை நண்பர்களே! நீங்கள் இரவல் வாங்கப்பட்டவர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள். ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் என்று I கொரி 6 : 20-ல் ஆண்டவர் சொல்லுகிறார். நம்மை கிரயத்துக்கு வாங்கும்படி நம்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தை நமக்காக சிந்தி இருக்கிறார். அந்த இரத்தத்தினால் நம்முடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னால் நாம் தேவனால் கிரயத்திற்கு கொள்ளப்பட்டிருக்கிறோம். குற்றமில்லாத, மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்களே என்று I பேதுரு 1:19-ல் நம் ஆண்டவர் சொல்லுகிறார்.

எனவே தேவ ஜனங்களே! உங்கள் பாவங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் பரிபூரணமாய் மன்னிக்கப்பட்டிருக்கிறதா? நான் என் ஆண்டவரால் பிசாசின் மாயாபுரி சந்தையிலிருந்து விலைக்கு வாங்கப்பட்டவன் என்று பாவ மன்னிப்பின் நிச்சயம் உங்களுக்கு இருக்கிறதா? உங்களை உங்கள் சபையிலே ஒரு தூணாக நிறுத்தியிருக்கிறாரா? தேவனுக்குச் சொந்தமானவர்களே தேவனுடைய சபையில் தூணாக இருக்கிறார்கள். இன்று தேவனுடைய சபையில் எழுப்புதல் நடக்கிறது. ஏராளமான ஜனங்கள் மத்தியிலே எனக்கு பாவத்திலிருந்து விடுதலை வேண்டும். பரிசுத்த வாழ்வு வேண்டும். கிறிஸ்துவின் திவ்விய சாயல் எனக்கு வேண்டும் என்ற வாஞ்சையோடு வருகிறவர்கள் மேல் தேவன் தமது நாமத்தை எழுதி சபையின் தூண்களாக நிறுத்துவார்.

**2. பரலோக குடிமகன்கள் :** தேவனுடைய சபையின் தூண்களாய் நிற்பவர்கள் மீது அவன்மேல் என் தேவனால் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும் எழுதுவேன் என்று சொன்னார். நம்மேல் நம் ஆண்டவர் இவர்கள் புதிய எருசலேமுக்குரியவர்கள் என்று எழுதுவார். தேவாலயத்தின் தூண்கள் அவர்கள் பரலோகத்தின் குடிமகன்களாகயிருப்பார்கள். (A spiritual citizen ship) பரலோக குடிமகன்கள், பரலோக சுதந்தரவாளிகள் என்று எழுதுவார். பரலோக குடிமகன்கள் சினிமா தியேட்டருடைய தூண்களாக இருக்கமாட்டார்கள். புதிய எருசலேம் பரலோகத்தை விட்டு பூலோகத்திற்கு இறங்கி வரும்வரை திருச்சபையில் தூண்களாக நிலைத்திருப்பார்கள். அருமையான தேவ ஊழியர்களே! நம்முடைய சபையில் எத்தனை பேர் கர்த்தருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்கு இந்த உலகத்தில் என்ன நடந்தாலும் சபையை விட்டு போகமாட்டார்கள். சபையில் என்ன இடறல்கள் காணப்பட்டாலும் கர்த்தர் வைத்த இடத்தை விட்டு நீங்க மாட்டார்கள். இரவும் பகலும் இயேசுவின் வருகையே அவர்களுடைய

பேச்சாக, மூச்சாக, தாகமாக, உயிர்நாடியாகக் காணப்படும். கர்த்தருடைய வருகையின் தாகத்தோடு பரலோக குடிமகனாக விளங்குபவர்கள் இன்று தேவாலயத்தின் தூண்களாக இருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**3. கிறிஸ்துவின் சாயல் உடையவர்கள் :** பிலதெல்பியா சபையின் தூண்கள் மேல் மூன்றாவதாக என் புதிய நாமத்தை அதன் மேல் எழுதுவேன் என்று ஆண்டவர் சொன்னார் (New name of God) இவர்கள் கிறிஸ்துவின் சுபாவத்தை சுதந்தரித்துக் கொண்டவர்கள் என்று அர்த்தம். The charactor of christ. அன்பான நண்பர்களே! நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் மேல் வைராக்கியமாய் இருக்கிற பரிசுத்த ஆவியானவர் நமக்காக வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு பிதாவினிடத்தில் வேண்டுதல் செய்தார். எதற்காக? தேவக் குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்காக நம்மை முன்குறித்திருக்கிறபடியினாலே, கிறிஸ்துவின் சாயல் நம்மில் பூரணமாக உருவாகும்படியாக, பரிசுத்த ஆவியானவருடைய விண்ணப்பத்தை விளங்கிக் கொண்ட தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய வாழ்க்கையிலே கிறிஸ்துவினுடைய சாயலை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

நேற்று அடியேன் மதுரையில் உள்ள புதூரிலே வேதாகம பள்ளியில் பாடம் நடத்தி விட்டு நகர்ப்பேருந்து வழியாக நான் என்னுடைய சிவகாசி ஊருக்கு திரும்பி செல்வதற்கு புதூரிலிருந்து பெரியார் பஸ் நிலையத்தில் வந்து இறங்கினேன். பெரியார் பஸ் நிலையத்திலிருந்து பழங்காநத்தம் பஸ் நிலையத்தில் வந்து இறங்கினேன். பழங்காநத்தம் பஸ்நிலையத்தில் நான் இறங்கிய போது அங்கே சிவகாசிக்கு ஒரு பஸ் புறப்பட்டுக் கொண்டிருந்தது. முன் வாசல் வழியாய் நான் ஏறியபோது அங்கே முன் இருக்கைகளிலே ஒரு சீட் காலியாக இருந்தது. உடனே நான் என் கைக்குட்டையை அந்த சீட்டிலே விரித்து விட்டு தண்ணீர் குடிப்பதற்காக நான் கீழே இறங்கினேன். தேவ ஜனங்களே! அந்த நேரத்தில் அங்கு ஒரு சிறிய தவறு நடந்து விட்டது. அது என்னவென்றால் நான் பார்க்கும்போது அந்த முன் இருக்கை காலியாக இருந்தது. எனக்கு முன்னே ஒருவர் அங்கு வந்து ஒரு பத்திரிக்கையை அதிலே விரித்து விட்டு அவரும் என்னைப் போலவே காப்பி குடிப்பதற்காக கடைக்குச் சென்றிருந்தார். அருகிலிருப்பவர் அந்த பத்திரிக்கையை எடுத்து வாசிக்கத் தொடங்கி விட்டார். நான் பார்க்கும் போது அந்த இடம் காலியாக இருந்தது. நான் என்னுடைய கைக்குட்டையை விரித்துவிட்டு நான் சர்பத் குடிக்க போய் விட்டேன்.

போய் விட்டு திரும்ப வரும்போது அந்த இடத்திலே ஒருவர் உட்கார்ந்திருந்தார். நான் அவரைப் பார்த்து இது என்னுடைய இடம். நான் ஒரு கைக்குட்டையை விரித்து வைத்துவிட்டுப் போனேன் என்று சொன்னபோது அவர் சொன்னார் என்னுடைய பத்திரிக்கையை உங்களுக்கு முன்னமே இதில் வைத்துவிட்டுப் போனேன். அருகிலிருக்கிறவர் அதை எடுத்து வாசித்தபடியினால் இடம் காலியாக இருப்பதைக் கண்டு நீங்கள் உங்கள் கைக்குட்டையை விரித்துவிட்டு போய் விட்டீர்கள் என்று நான் வந்த போது விசயத்தை சொன்னார்கள். நான் உங்களுடைய கைக் குட்டையை கீழே எடுத்துப் போட்டுவிட்டு என்னுடைய இடத்தை சுதந்தரித்துக் கொண்டேன் என்று சொன்னார். ஒரு நிமிடம் பலத்த ஏமாற்றம், சூழ இருக்க மக்கள் மத்தியில் வெட்கமும், தலைகுனிவும் போல அந்த சூழ்நிலைக் காணப்பட்டாலும், கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்துவதற்கு பொறுமையாய் இருக்க, தாழ்மையாய் இருக்க, அன்பாய் இருக்க, சகித்துக் கொள்ள அந்த வேளையில் அதிகமாய் சோதிக்கப்பட்டேன். என்னை விட வயதில் குறைந்தவர், எல்லா நிலைமையிலும் சாதாரண மனிதன். என்றாலும் அந்த இடத்திலே நான் ஒரு தேவ மனிதன். கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்த வேண்டியவன் என்ற அறிவு எனக்கு இருந்த படியினாலே, அந்த பஸ்ஸில் இருந்த 60 பேர் மத்தியிலே குனிந்து என் கைக்குட்டையை எடுத்துக் கொண்டு நான் நின்று கொண்டே இரண்டு மணி நேரம் 80 கிலோ மீட்டர் தூரம் .பயணம் செய்தேன். அன்பான தேவனுடைய பிள்ளைகளே! இப்படிப்பட்ட நேரம் தான் நாம் கிறிஸ்துவின் சாயலை உடையவர்களா? ஜென்ம சுபாவம் உடையவர்களா? என்பதை வெளிப்படுத்த வேண்டிய ஒரு நேரம், இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நம்முடைய இருதயத்திலே கிறிஸ்துவின் சாயல் இருந்தால் நாம் அதை அப்படிப்பட்ட சோதனை வரும்போது வெளிப்படுத்துவோம். நம்முடைய இதயத்திலே ஜென்ம சுபாவங்களும், பாரம்பரிய குணங்களும் இருக்கும் என்று சொன்னால் அப்படிப்பட்ட வேளையிலே ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வதும், கை கலப்பதும் அல்லது எங்கள் இடந்தான் என்று போராடுவதுமான பல பிரச்சனைகள் நேரிடுகிறது. ஆகவே கிறிஸ்துவின் சாயலை உடையவர்களே தேவாலயத்திற்கு தூண்களாக இருப்பார்கள். அந்த தலைகுனிவு வந்த நேரத்தில் என்னுடைய இடத்தைப் பிடித்துக் கொண்ட அந்த வாலிபனோடு நான் வார்த்தைகளாலோ, செயலாலோ போராடுவேன் என்று சொன்னால் நான் ஒரு தேவ மனிதன் என்பதை எப்படிக் காட்ட முடியும். அன்பானவர்களே! இதுபோல உலகம் முழுவதிலும் இருக்கும் மக்கள் தங்களை கிறிஸ்துவின் சாயலுக்கு

அர்ப்பணித்து விட்டால் தேசத்திலே சண்டைகள் இருக்காது. குழப்பங்கள் இருக்காது, போலீஸ் ஸ்டேசன் நமக்குத் தேவையில்லை. நீதிமன்ற வழக்குகளும், நீதிபதிகளின் தீர்ப்புகளும் நமக்குத் தேவையில்லாதபடி சமாதானத்தை உடையவர்களாக நாம் காணப்படுவோம். கிறிஸ்துவின் சபையிலே அவரின் திவ்ய குணங்களை வெளிப்படுத்துபவர்களே தூண்களாய் இருக்கிறார்கள்.

**III. தூண்களா? துரும்புகளா? :** பிலதெல்பியா சபையில் தூண்களாக இருப்பவர்கள் ஜெயம் பெற்றவர்கள். ஆவிக்குரிய வாழ்க்கையிலே தோல்வி அடைகிறவர்கள் துரும்புகளாக இருக்கிறார்கள். இன்று கர்த்தருடைய சபையிலே ஒருசிலர் மட்டும் தூண்களாக இருக்கவும், அநேகர் துரும்புகளாக சிதறுவதும், முறிந்து விழுவதும், வேறு இடத்திலே போய் ஒட்டிக் கொள்வதுமான சூழ்நிலைகள் ஏன் நடக்கிறது என்பதற்கான ஏழு காரியங்களை நாம் வேத வசன வெளிச்சத்திலே பார்க்கப் போகிறோம். அதன் பின்பு தூண்களாக நிற்பதற்கு நிபந்தனைகள் என்ன என்பதையும் கவனிக்கப் போகிறோம். இன்று கர்த்தருடைய சபையிலே துரும்புகளாக சிலர் இருப்பதற்கு ஏழு காரணங்கள்.

**(A) பாவிகள் நீதிமான்களின் சபையிலே நிலை நிற்பதில்லை (சங். 1:5)** என்று தாவீது ராஜா சொல்கிறார். ஒரு சபையின் ஊழியக்காரனிடத்தில் பாவம் இருந்தால் அந்த சபையிலே பலர் அந்த இடத்தை விட்டு வேறு சபைக்கு ஓடிப் போவார்கள். அதே நேரம் சபையில் இருக்கிற ஒரு விசுவாசிக்குள் பாவம் இருந்தால் பாவத்துக்கு இடம் கொடுத்த அந்த ஒரு மனிதன் மட்டும் பரிசுத்தமான சபையை விட்டு துரத்தப்படுவார். அல்லது தானாகவே நீங்கிப் போவார் என்று வேத வசன வெளிச்சத்திலே நாம் பார்க்கிறோம்.

(B) சபைக் கூடி வருதலை சிலர் விட்டுவிடுவது போல நீங்களும் விட்டுவிடாமல் நாளானது சமீபித்து வருகிறபடியால் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும் என்று எபி. 10:35-ல் எபிரேய நிருப ஆக்கியோன் எழுதுகிறார். இன்று சபை கூடி வருகிற ஞாயிறு ஆராதனையின் நாளை அசட்டைப் பண்ணுகிறவர்கள் நாளடைவில் சபையை விட்டு நீங்கிப் போவார்கள். ஆராதனையில் ஒரு ஒழுங்கு வேண்டும். ஒழுங்கில்லாதவர்களை தேவன் ஆசீர்வதிக்க மாட்டார். ஒழுங்குள்ளவர்களையே தேவன் ஆசீர்வதிப்பார். நமது ஆராதனைக்கு குறிப்பிட்ட வேளையில் வருகிறவர்கள் தூண்கள். பிந்தி வருகிறவர்கள் துரும்புகள். நமது ஆராதனைகளில் செய்தி நேரங்களில்

வெளியே எழுந்து போய் கை கால் சற்று இளைப்பாற சுற்றி வருகிறவர்கள் துரும்புகளாகப் போய் விடுவார்கள். ஆனால் கடைசிவரை ஆராதனையில் நிலைத்திருந்து ஆசீர்வாத ஜெபம் வரைக்கும் ஒருமனமாய் ஆராதனையில் உறுதியாய் இருப்பவர்கள் சபைக்குத் தூண்களாக இருப்பார்கள். ஜெபவேளையிலே உற்சாகமில்லாமல் கண்களை திறந்து கொண்டு மருள மருள பார்ப்பவர்கள் துரும்புகளாக இருப்பார்கள். ஆனால் கண்களை மூடி, கருத்து ஒருமித்து இதயத்தை தேவ சமூகத்திலே ஊற்றி ஒரு மனமாய் ஜெபித்து துதிக்கிறவர்கள் சபையில் தூண்களாய் இருப்பார்கள்.

அருமை நண்பர்களே! உங்களுக்கு கர்த்தர் கொடுத்த சபை ஆராதனையிலே ஒரு நாளும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். அமெரிக்கா போன்ற மேல் நாடுகளிலே ஆவியை இழந்த ஒரு சிலர் ஞாயிற்றுக் கிழமைகளிலே தங்கள் வீடுகளைப் பூட்டி விட்டு உல்லாச விடுதிக்குச் சென்று விடுதியின் கதவுகளைப் பூட்டிக் கொண்டு எங்களை தொந்தரவு செய்யாதே (Don't Distrube me) என்ற போர்டை அறைக்கு வெளியே தொங்கவிட்டு உல்லாசமாக வாழுகிறார்கள். ஞாயிறு ஆராதனைக்கு வாருங்கள் என்று அழைப்பது தங்களுக்கு நேரிடும் தொல்லை என்று நினைக்கிறார்கள்.

சபை கூடுதலை விட்டு விடுகிறவர்கள் நாளடைவில் சபையை விட்டு நீங்கிப் போவார்கள் என்று வேத வசனத்திலே நாம் அறிகிறதனாலே இன்று ஒரு உறுதியான தீர்மானம் செய்வோம். ஞாயிறு காலை 10 மணிக்கு உங்கள் வீட்டிற்கு விருந்தினராக எவர் வந்தாலும் அவர் உங்கள் நண்பர்களும் அல்ல. அப்படிப்பட்டவர்கள் உங்கள் சொந்தக் காரர்களும் அல்ல. ஞாயிற்றுக் கிழமை கர்த்தருடைய நாள். கர்த்தருடைய நாளை தனக்கென்று எடுத்துக் கொள்ளுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன். கர்த்தருடைய நாளிலே தனக்கு இஷ்டமானதை செய்து தன் வீட்டிலே தங்குகிறவர்கள் அல்லது ஊர் சுற்றுகிறவர்கள், உல்லாசப் பயணம் செல்கிறவர்கள் தான் கெட்டுப் போவதுமல்லாமல் பிறரையும் கெடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

தேவனுடைய பிள்ளையே! கர்த்தருடைய நாளை மனமகிழ்ச்சி நாளாக எண்ணி அது கர்த்தருக்கு பரிசுத்த நாளாக எண்ணி கர்த்தர் உங்களுக்காக கொடுத்த ஸ்தலத்திலே சென்று உங்கள் காணிக்கை, தசமபாகங்களை செலுத்தி, பரிசுத்த ஆவியில் நிரம்பி ஆராதனை செய்யுங்கள். நீங்கள் உங்கள் சபையிலே தூண்களாக இருப்பீர்கள்.

C. கர்த்தருடைய சபையிலே துரும்பாக எரிந்து வெந்து சாம்பலாகக் கூடியவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்களை எதிர்த்து நிற்பவர்கள் என்று நாம் அறிகிறோம். எண் 16 : 33-ல் கோராகின் கூட்டத்தார் 250 பேர் கர்த்தருடைய ஆலயத்தின் ஊழியக்காரனாகிய மோசேக்கு எதிர்த்து நின்றார்கள். எதிர்த்து பேசினார்கள். எதிர்த்து செயல்பட்டார்கள். அருமையான விசுவாசிகளே! தேவ ஊழியருக்கு தேவன் கொடுக்கிற விசேஷமான ஒரு வாக்குதத்தம் உண்டு. அது என்னவென்றால் உனக்கு விரோதமாக கூட்டங்கூடினால் அது என்னாலே கூடுகிற கூட்டமல்ல. எவர்கள் உனக்கு விரோதமாய் கூட்டங்கூட்டினார்களோ, அவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள். இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்திரமும், என்னால் உண்டான அவருடைய நீதியுமாயிருக்கிறது என்று தேவன் சொல்லுகிறார். (ஏசா 54 : 15-17)

எனவே தேவ பிள்ளைகளே! நீங்கள் உங்கள் ஊழியரை எக்காரணம் முன்னிட்டும் எதிர்த்து பேசக்கூடாது. எதிர்த்து செயல்படக் கூடாது. கம்யூனிஸ ஆவி உங்களுக்குள் இராதபடி கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் இருக்கிறார். எதற்கெடுத்தாலும் கேள்வி கேட்பதும், எதை எடுத்தாலும் எதிர்த்து பேசுவதும் அது கம்யூனிச ஆவி. ஆனால் தீமையை சகிப்பதும், எந்த சூழ்நிலையிலும் தாழ்ந்து போவதும் பரிசுத்த ஆவியானவரின் கனிகளாகும். கோராகின் கூட்டத்தார் உயர்பதவி மேல் ஆசைப்பட்டு, உயர்ந்த ஸ்தானங்களை விரும்பி, கனத்தையும், மரியாதையையும் எதிர்பார்த்து ஊழியக்காரனாகிய மோசேக்கு எதிர்த்து பேசினார்கள். அவர்களுடைய முடிவு என்ன? பூமி வாயை பிளந்து கோராகின் கூட்டத்தாரை முழுமையாக குடும்பத்தோடு கூட விழுங்கி விட்டது. **அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் மரித்தார்கள்** என்று எண்ணாகமம் 16 : 33-ல் நாம் வாசிக்கிறோம். ஆகவே நீங்கள் கர்த்தருடைய சபையிலே துரும்பாக அழிந்து போகக் கூடாது. தூண்களாக நிலைத்திருக்க உங்கள் ஊழியக்காரரோடு இசைந்து செல்லுங்கள்.

D. தேவனுடைய சபையிலே பயமும் நடுக்கமும், பயபக்தியும், தேவ பயமும் நமக்கு இருந்ததால் நாம் தூணாக இருப்போம். துரும்பாக நாம் விழவோ, துரும்பாக அழியவோ தேவையில்லை. தாவீது ராஜா தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை புது வண்டியிலே ஏற்றிக் கொண்டு வரும்போது மாடுகள் இடறியது. அப்பொழுது தேவனுடையப் பெட்டி வண்டியிலிருந்து சாய்ந்தது. ஊசா என்பவன்

கை நீட்டி அந்த பெட்டியைத் தொட்டான். பிடித்தான். அப்பொழுதே கர்த்தர் அவனை அடித்தார். **அவன் தேவ சமூகத்திலே செத்தான்.** I நாளா 13 : 10; II சாமு. 6 : 17; எண் 4 : 15)

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! ஊசா செய்த காரியம் நல்லது போல நமக்கு தென்பட்டாலும் தேவனாகிய கர்த்தர் தேவ சமூகத்தில் அவனை அடித்து கர்த்தருடைய சபை நடுவிலே இறந்தான் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஊசாவின் துணிவின் நிமித்தம் கர்த்தர் அவனை அடித்தார் என்று கர்த்தர் சொல்லுகிறார். எண் 4 : 15-ஆம் வசனத்தில் பாளயம் புறப்படும் போது ஆரோனும், அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தையும், அதன் சகல பணிமூட்டுகளையும் மூடித் தீர்த்த பின்பு, கோகாத் புத்திரர் அதை எடுத்துக் கொண்டு போகிறதற்கு வரக்கடவர்கள். அவர்கள் சாகாதபடிக்குப் பரிசுத்தமானதைத் தொடாதிருக்கக் கடவர்கள் என்று கர்த்தர் முன் கூட்டியே சொல்லியிருக்கிறார். ஆகவே கர்த்தர் தொடாதே என்று சொன்னதை தொடுவது துணிகரம். இன்று ஆவிக்குரிய வாழ்க்கையிலே வளர்ந்து விட்டேன் என்று நினைக்கிற ஒரு சில விசுவாசிகள் தங்கள் மேய்ப்பர்கள் செய்யக்கூடிய பரிசுத்தமான பணிவிடையை தாங்களும் செய்யலாம் என்று துணிகரம் கொள்கிறார்கள். ஞானஸ்நானம் கொடுப்பது மேய்ப்பர்களுடைய ஊழியமாக இருக்கிறது. சபையிலே வேறு எவரும் அதைக் கொடுக்கக் கூடாது. அதேபோல் காணிக்கைகள் வாங்குவது பரிசுத்தமான ஆசாரியருக்கே உரியதாகும். விசுவாசியான தேவ பிள்ளைகள் எவ்வளவு ஊழியத்தை செய்தாலும் அவர்கள் காணிக்கைகளை வாங்குவதற்கு உரிமை உள்ளவர்கள் அல்ல. தன் கரத்தை நீட்டி துணிவோடு விசுவாசிகள் காணிக்கை வாங்கக் கூடாது. அதே போல கர்த்தருடைய சபையை நடத்துதலிலும் உங்கள் மேய்ப்பருக்கு உதவியாக நின்று ஊழியம் செய்யுங்கள். மேய்ப்பர்களுக்கு மிஞ்சிப் போக நீங்கள் துணிகரம் கொண்டு பலி செலுத்தவும், தூபம் காட்டவும் நீங்கள் துணிகரம் கொள்வீர்கள் என்று சொன்னால் ஊசாவிற்கு ஏற்பட்ட ஆபத்து உங்களுக்கு நேரிடலாம். கவனமாய் இருந்து கர்த்தருடைய ஊழியக் காரருக்கு அடங்கி நடங்கள். ஊழியர் கொடுக்கிற பொறுப்பை மட்டும் செய்யுங்கள். கர்த்தர் உங்களுக்கு தீர்க்காயுசை கட்டளையிடுவார்.

E. கர்த்தருடைய சபையிலே தூண்களாக நிலைக்கவும் துரும்பாக அழிந்து போகாதிருக்கவும் நீங்கள் வேசித்தனத்திற்கும் விபசாரத்திற்கும் விலகி ஓடவேண்டும் - அசுத்தங்களை அகற்றுங்கள்

பரிசுத்தம் இல்லாதவர்கள் சபையிலிருந்து நீங்கலாகி சபையிலிருந்து தள்ளப்படுவார்கள். இஸ்ரவேலருடைய சரித்திரத்திலே மோவாபிய பெண்களோடு கூட வேசித்தனம் செய்த இருபத்தி நாலாயிரம் இஸ்ரவேலர்கள் வாதையினால் செத்தார்கள். அதோடு கூட ஒரு குறிப்பிட்ட மனிதன் ஒரு மோவாபிய ஸ்திரியை சபையின் நடுவிற்கு அழைத்துக் கொண்டு வந்தான். அப்பொழுது நடு சபையிலிருந்து பினெகாஸ் எழுந்து சென்று வேசித்தனம் செய்யும் மனிதனுடைய அறைக்குள் பிரவேசித்து அந்த மனிதனையும், அந்த ஸ்திரியையும் தன் கையிலிருக்கும் ஈட்டியினால் ஒரே குத்தாக குத்தி கொன்று விட்டான். அவர்கள் **நடுச் சபையிலே அழிந்து போனார்கள்.** ஆகையால் தேவனுடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. தேவ ஜனமே! உங்களுடைய சரீரம் பரிசுத்தமாய் இருக்கட்டும். நம்முடைய தேவன் நம்முடைய செய்கைகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். நியாயத்தீர்ப்பு நாளிலே நம்முடைய வீட்டின் மச்சு நம்மை குறித்து சாட்சியிடுமாம். நம்முடைய சுவரில் இருக்கும் கல் நம்மைக் கூப்பிடுமாம். இதை வாசிக்கும் போதே உங்களுக்கு பயமும் நடுக்கமும் வரவில்லையா? நீங்கள் இருக்கிற அறையின் மச்சு உங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கிறது. நீங்கள் தங்கி இருக்கிற வீட்டின் சுவரின் கற்கள் சிமெண்ட் பூச்சுக்கு உள்ளேயிருந்தாலும் அவைகள் கண்களுடையதாய் உங்களைக் கவனித்துக் கொண்டே உள்ளது. இவையெல்லாம் நியாயத் தீர்ப்பு நாளிலே எழும்பி நின்று பாவிகளுக்கு விரோதமாக சாட்சி சொல்லும் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறபடியினாலே மிக ஜாக்கிரதையோடு பரிசுத்தமாயிருங்கள். சபையிலே தூண்களாய் இருங்கள்.

F. தேவனுடைய ஊழியத்திலும் தூண்களான ஊழியர்களும் உண்டு. துரும்பாய்ப் போன ஊழியர்களும் உண்டு. எலியா எலிசா போன்றவர்கள் தூண்களாக இருந்திருக்கிறார்கள். எலிசா தீர்க்கதரிசி தனக்கு இரட்டிப்பான வரம் வேண்டுமே என்ற தாகத்தோடு வாஞ்சையோடு ஊழியம் செய்தார். அந்த ஆவிக்குரிய வாஞ்சையோடு தன் எஜமானாகிய எலியாவை பின்பற்றினார். எலிசாவின் விருப்பத்தின்படி தன் எஜமான் மேலுள்ள ஆவியின் வரம் இரண்டு மடங்காக எலிசாவின் மேல் இறங்கிற்று. இதை தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிற எலிசாவின் ஊழியக்காரனாகிய கேயாசி எலிசாவைப் போல தனக்கு ஆவியின் வரம் வேண்டும் என்று விரும்பாமல் பண ஆசை உள்ளவனாக, பொருள் ஆசை உள்ளவனாக, திராட்சை தோட்டங்கள் வாங்கவும், தோப்புகளை சேர்க்கவும் ஆசை

உள்ளவனாக காணப்பட்டான். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கிறது. அவைகளை இச்சித்து தங்களை உருவக் குத்திக் கொள்கிறார்கள். அநேக வேதனை அடைகிறார்கள் என்று I தீமோ 6 : 10-12 வசனங்கள் சொல்லுகிறது.

நாகமான் என்ற படைத் தளபதி குஷ்டரோகத்தினாலே ஜெபிக்க வந்தான். ஆண்டவருக்கு கீழ்படிந்தான். கர்த்தர் நாகமானின் குஷ்டரோகத்தை சுகமாக்கினார். நாகமான் கொடுத்த காணிக்கைகளை எலிசா தீர்க்கதரிசி வாங்க மறுத்து விட்டார். பண ஆசை இல்லாதவர்களே உண்மையான ஊழியர்கள். சபையின் தூண்களாக விளங்குவார்கள். பண ஆசை உள்ளவர்கள் துரும்பாய் அழிந்து போவார்கள் என்பதை கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். நாகமானின் பின்னாலே கேயாசி ஓடினான். ஒன்றிரண்டு பொய்களைச் சொன்னான். அப்பொழுது நாகமானிடத்திலிருந்து பணமும், .பொருள், பொன்னும், மாற்றுவஸ்திரங்களும், கிடைத்தது. அதோடு கூட எலிசா தீர்க்க தரிசியின் சாபமும், நாகமானின் கையிலிருந்த குஷ்டரோகமும் கேயாசியைத் தொற்றிக் கொண்டது. அவன் **தேவ சமூகத்தை விட்டுப் போகும் போது குஷ்டரோகியாய்ப் போனான்.**

அருமை நண்பர்களே! தேவ சமூகத்திற்கு வருவது நம் நோய் நீங்கி, பாவம் போய் பரிசுத்தமான ஜீவியம் பெற்று தீர்க்காயுசோடு வாழ்வதற்காகத்தான். கேயாசியோ தேவ சமூகத்திலிருந்து போகும்போது வியாதியோடு போகிறான் சாபத்தோடு போகிறான். எனவே சபையிலே தூணாக நிலைப்பதற்கு பண ஆசையை விட்டுவிட வேண்டும்.

G. புதிய ஏற்பாட்டு சபையிலே தூண்களாக நிலைப்பதற்கு நாம் உண்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அனனியாவும், சப்பீராளும் தங்கள் ஊழியக்காரரிடத்தில் பொய் சொன்னார்கள். ஊழியக்காரரிடத்தில் சொல்லும் பொய் பரிசுத்த ஆவியானவரிடத்தில் சொல்லும் பொய்யாகும். ஆகவே பொய் பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும் என்ற கர்த்தருடைய வார்த்தையின்படி காணிக்கையிலே கர்த்தரை வஞ்சித்த அனனியாவும், சப்பீராளும் **சபையின் நடுவிலே விழுந்து ஜீவனை விட்டார்கள்.** (அப். 5 : 10) சபைக்கு தூண்களாக இருக்க வாஞ்சை கொண்டார்கள். ஆனால் துரும்பாக இறந்து போனார்கள். காணிக்கையிலே கர்த்தருடைய ஊழியக்காரரையோ, கர்த்தர் உங்களுக்கு கொடுத்த சபையையோ

வஞ்சிக்கக் கூடாது. கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த வருமானத்திலே தசமபாகத்தையும், காணிக்கையையும் மனப்பூர்வமாய், உற்சாகமாய், சந்தோசமாய் அதை உங்கள் ஊழியத்திற்காகக் கொடுங்கள். அப்பொழுது கர்த்தருடைய சபையிலே நீங்கள் தூண்களாக நிலைத்திருப்பீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**IV. ஜெயங் கொண்டவர்கள்:** கர்த்தருடைய சபையிலே தூணாக நிலைப்பதற்கு தேவன் வைத்திருக்கும் நிபந்தனை என்ன? ஜெயங்கொள்கிறவர்களை நான் தேவனுடைய ஆலயத்தின் தூணாக நிறுத்துவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஜெயங்கொண்டவர்களே தூண்களாக நிற்பார்கள். யுத்தம் இல்லாமல் வெற்றி இல்லை. நாம் வீட்டிற்குள் அடைந்து கிடந்தால் நமக்கு போராட்டங்களும் இருக்காது. ஜெயமும் இருக்காது. ஆனால் கர்த்தருடைய வசனத்தை கைக் கொள்ள நாம் யுத்த களத்தில் இறங்கி நாம் சுவிசேஷ ஊழியத்திலும், ஆவிக்குரிய போராட்டத்திலும் குதிக்கும்போது நமக்கு போராட்டங்கள் எழும்பும். அந்த போராட்டத்தில் ஜெயிக்கும் போது நாம் ஜெயங்கொண்டவர்களாக தேவாலயத்தின் தூண்களாக விளங்குகிறோம். பிலதெல்பியா சபைக்கு 5 வித போராட்டங்கள் இருந்தது. அந்த 5 போராட்டங்களையும் இன்று நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சம்மந்தப்படுத்திப் படிப்போம். ஜெயம் பெறுவோம். சபைக்குத் தூணாய் இருப்போம்.

**1. அன்பு போராட்டம்:** பிலதெல்பியா என்றால் ,சகோதர அன்பு என்று அர்த்தம். சகோதர அன்பு குறைந்து போகிற ஒரு கடைசி காலத்திலே நீங்களும், நானும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவ அன்பை அப்பியாசப் படுத்துகிற நாம் சகோதர அன்பையும் அப்பியாசப்படுத்த வேண்டும். சிலியோஸ், அடால்பஸ் என்ற இரண்டு சகோதரர்கள் சேர்ந்து கட்டிய பட்டணம் தான் இந்த பிலதெல்பியா. அந்த இருவருடைய அன்பிலே உருவான பட்டணம்தான் பிலதெல்பியா. இன்றும் அருமை நண்பர்களே! நம்முடைய சபையிலே நமக்கும் நம்முடைய அருகிலிருக்கும் சகோதரருக்கும் அன்பிருக்குமானால் நம்முடைய சபைகள் கட்டி எழுப்பப்படும். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போகும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 24 : 12-ல் சொல்லியிருக்கிறார். அன்பு போராட்டத்திலே நாம் ஜெயிக்கிறவர்களாகக் காணப்பட வேண்டும்.

வேதத்திலிருக்கிற முதல் ஆராதனைக்கு அண்ணன், தம்பியாகிய

காயீனும், ஆபேலும் சென்றார்கள். அங்கே சகோதர அன்புக்கு பஞ்சம் உண்டாயிற்று. காயீனுடைய உள்ளத்திலே அன்பு இல்லை. ஆகவே தன் தம்பியாகிய ஆபேலை அடித்து கொலை செய்தான். அன்பில்லாதவன் வறண்ட வனாந்தரமாய் இருப்பான். அவன் சபிக்கப்பட்டவன். சகோதர அன்பு காட்டவேண்டிய போராட்டம் காயீனுக்கு வந்தபோது அன்பு காட்டுவதற்குப் பதில் வம்பு காட்டினான். அவன் கர்த்தருடைய சமூகத்தை விட்டு போகும் போது சபிக்கப்பட்டவனாய், நிலையற்றவனாய் தள்ளப்பட்டான். சகோதர அன்பு காட்டவேண்டிய போராட்டத்தில் காயீன் வம்பு செய்தான்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், சீசரில் ஒருவனாகிய யூதாசும் கெத்சமனே தோட்டத்தில் சந்தித்தபோது அங்கே சகோதர அன்பு உருவாகி இருக்க வேண்டும். ஆனால் யூதாஸ் காரியோத்தோ வஞ்சக முத்தமிட்டு இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்தான். இதினிமித்தம் இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். சகோதர அன்பை அப்பியாசப்படுத்தாத யூதாஸ் நாண்டு கொண்டு செத்தான்.

மனிதனுடைய அன்பிற்காக ஏங்கித் தவிக்கிற சகோதர அன்பிற்காக எதிர் பார்த்து ஏமாந்து போகிற அன்புள்ள சகோதர சகோதரிகளே! உங்களை இயேசு நேசிக்கிறார். நீங்கள் சகோதர அன்பை அப்பியாசப் படுத்துங்கள். சகோதர அன்பு கிடைக்கவில்லையே என்று ஏமாற்றமடைய வேண்டாம். நீங்கள் கூடி வருகிற சபையிலே உங்களை விசாரிக்கவும், உங்கள் ஆபத்து நாட்களில் உங்களைத் தூக்கி விடவும் ஒருவருமில்லையே என்று நீங்கள் கலங்க வேண்டாம். இயேசு கிறிஸ்து நமக்கு போதுமானவர். நீங்கள் உங்களைவிட தாழ்வாய் இருக்கிற பிறருக்கு அன்பு செலுத்திப் பாருங்கள். உங்களுக்கும் சகோதர அன்பு கிடைக்கும்.

**2. மறுதலிக்கும் போராட்டம்:** ஜெயங்கொள்ளுகிறவர்களை தேவாலயத்தின் தூணாக்குவேன் என்று சொன்னபோது நமக்கு வரும் 2-வது போராட்டம் ஆண்டவருடைய நாமத்தை மறுதலிக்கும்படியாக வருகிறதான போராட்டம். உனக்கு கொஞ்ச பெலன் இருந்தும் என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தைக் கைக் கொண்டபடியினால் இதோ திறந்த வாசலை உனக்கு வைக்கிறேன் என்று வெளி 3 : 8-ல் நம் ஆண்டவர் நம்மைப் பார்த்துச் சொல்லுகிறார். எங்களுடைய சபையிலே ஆபிரகாம் என்ற ஒரு வாலிப சகோதரன் சமீபத்திலே இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார். தன்னுடைய

படிப்பிலே மாவட்ட அளவிலே அவர் முதல் தரமாக வந்தார். அந்தப் பள்ளிக்கூடம் சாதாரண பள்ளிக்கூடம், அவர் வீட்டிலே சிறிய அறைகளே உண்டு. அந்த ஒடுக்கமான இடத்தில் அந்த சகோதரன் வாழ்ந்தார். பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது T.B. வியாதியினால் தாக்கப்பட்டு அந்த வியாதி கொடுமையாய் கூடியது. அதினிமித்தாய் மூக்கிலே இரத்தமும், சளியுமாய் வரும். ஆசிரியர் பள்ளியிலே பாடம் சொல்லிக் கொடுக்கும் போது தூங்கிக் கொண்டேயிருப்பார். இப்படிப்பட்ட வேளையில் இந்த சகோதரர் சபைக்கு வந்தார். இரட்சிக்கப்பட்டார். ஞானஸ்நானமும் பரிசுத்த ஆவியும் பெற்றார். வியாதி அவருக்கு பரிபூரணமாய் நீங்கி சுகம் பெற்றார் படிப்பிலே குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உண்டாகி மாவட்ட அளவிலே முதல் தரமாக வந்தார். அவருக்கு ஒரு டேபிள் பேன்-ம் ஒரு சேம்பியன் ஷீல்டும் பாராட்டுப் பத்திரமும், வெகுமதியும் நமது அரசாங்கம் கொடுத்து கௌரவித்தது. அப்பொழுது அரசாங்க அதிகாரிகள் அவனைப் பார்த்து நீ எவ்விதமாக இப்படிப் படித்து முன்னுக்கு வந்தாய்? அதற்குரிய அனுகூலமான காரியம் என்ன என்று அந்த சகோதரனைக் கேட்டபோது அந்த சகோதரன் ஆண்டவர் நாமத்தை அறிக்கையிட்டார். நான் இப்போது சுகமாய் இருப்பது இயேசுவின் கிருபை. பள்ளியிலே படித்துக் கொண்டிருப்பது இயேசுகிறிஸ்துவின் புண்ணியம். நான் இந்த பரிட்சையிலே மாவட்ட அளவிலே முதல் தரமாய் வந்தது இயேசு கிறிஸ்துவின் தயவினால் தான் என்று சொன்னார், என் வீட்டில் படிக்கத்தக்க நல்ல சூழ்நிலை இல்லை. என் பெற்றோர்கள் படிக்காதவர்கள். சிறிய அறையிலே மின்சார ஒளிக் குறைந்த காற்றோட்டம் இல்லாத என்னுடைய வீட்டிலே நான் படிப்பதற்கு எந்த சாத்தியக்கூறும் இல்லை. வியாதியிலே மரிக்க வேண்டிய நான் அந்த வியாதிலிருந்து சுகம் பெற்று, பாடம் நடத்தும் போதெல்லாம் தூங்கிக் கொண்டிருந்த நான் முதல் தரமாய் மார்க் எடுத்திருக்கிறேன் என்று சொன்னால் அது இயேசுவின் கிருபையே. இயேசுவே இப்படிப்பட்ட நிலைக்கு என்னை உயர்த்தினார் என்று இயேசுவின் நாமத்தை மறுதலிக்காமல் அறிக்கையிட்டார். அதிகாரிகள் ஆச்சரியப்பட்டனர். இந்த சாட்சியைக் கேட்டிருந்த உடன் மாணவர்கள் 60 பேர் ஆண்டவர் பக்கமாய் மனந்திரும்பினார்கள். கடந்த நாட்களிலே எங்களுடைய சபைக்கு வந்து 25 மாணவர்களாக மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று சபையிலே சாட்சிகளாய் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆண்டவரை மறுதலிக்காதவர்களுக்கு தேவன்

திறந்த வாசலை வைக்கிறார். அவர்களை சபைக்கு தூண்களாக்குகிறார்.

**3. பொய்யர்கள் மூலம் போராட்டம்:** கர்த்தருடைய சபையிலே தூண்களாக நிலைத்திருப்பவர்கள் உண்மையுள்ளவர்கள். உண்மை பேசுபவர்கள். உண்மை பேசுவதற்கும், உண்மையாய் வாழ்வதற்கும் போராட்டங்கள் வரும். பிலதெல்பியா சபையில் இருந்தவர்களுக்கு உண்மையாய் இருக்க போராட்டம் வந்தது. அந்த போராட்டம் அவர்களுக்குள் உருவாகவில்லை. பிறர் மூலமாய் அது வந்தது. யூதர் அல்லாதிருந்தும், தங்களை யூதர் என்று சொல்லக்கூடிய சாத்தானின் கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன். இதோ அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன் என்று வெளி 3:9-ல் ஆண்டவர் சொன்னார். ஆகவே அன்று பிலதெல்பியா சபையிலே பொய் சொல்கிறதான சாத்தானுடைய கூட்டத்தார் பக்க வழியாய் நுழைந்தது போல இன்றும் நம்முடைய சபையிலே பொய் சொல்லுகிறவர்கள் நுழைந்து விடுவார்கள். ஒன்றைப்பத்தாக திரிப்பார்கள். பத்தை நூறு என்று சொல்லி அளந்து விடுவார்கள். பொய்களுக்கு அளவே இல்லை. கருப்பு பொய், வெள்ளைப் பொய், பச்சைப் பொய், ரப்பர் பொய், பிளாஸ்டிக் பொய் என்று பொய்கள் பலவிதம் உண்டு என்று பாஸ்டர் ஜீவானந்தம் தன் பிரசங்கத்தில் அடிக்கடி சொல்வார்கள்.

அருமை நண்பர்களே! பொய் சொல்வதின் மூலம் உங்கள் உள்ளம் உடைந்து போக தக்கதான அதிர்ச்சியான வீண் பழிகளும், குற்றச் சாட்டுகளும் கூட உங்களுக்கு வரலாம். பிறர் சொல்லுகிற பொய்களால் நீங்கள் நிந்திக்கப்பட்டீர்களா? அவமானம் அடைந்தீர்களா? செய்யாத குற்றத்திற்கு தண்டிக்கப்பட்டீர்களா? நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று நம் ஆண்டவர் சொல்லுகிறார். ஆகவே உலகம் முழுவதும் பொய் சொல்லி பொய்யை அடைக்கலமாய் கொண்டாலும் தேவனுடைய பிள்ளையே! நீங்களும், நானும் உண்மையுள்ளவர்களாய் இருந்து ஜெயம் பெறுவோமாக!

பொய்யின் அதிபதி பிசாசானவனாயிருக்கிறான். உண்மையின் அதிபதி பரிசுத்த ஆவியானவராய் இருக்கிறார். பிசாசானவன் பொய்யனாய் இருக்கிறபடியினால் தன் சொந்தத்திலிருந்தும், பொய்யிலிருந்தும் எடுத்துப் பேசுவான். நாம் கர்த்தரையே சார்ந்து கொண்டு உண்மை பேசுவோமாக!

**4. பொறுமையாய் இருக்கப் போராட்டம்:** பிலதெல்பியா சபையிலே தூண்களாக இருப்பதற்கு நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மற்றொரு ஆலோசனையைத் தருகிறார். என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால் பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும் படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும் படியாக நானும் உன்னைக் காப்பேன் என்று 3:10-ல் கர்த்தர் சொன்னார். நம் எல்லாருக்கும் பொறுமை உண்டு. ஆனால் நம் பொறுமைக்கு எல்லை உண்டு. ஆனால் நமது பொறுமையிலே நாம் ஜீவிக்க வேண்டுமென்று ஆண்டவர் சொல்லவில்லை. **என் பொறுமையைக்** குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டாய் என்று, ஆண்டவர் சொல்லுகிறபடியினாலே இயேசு கிறிஸ்து எப்படி பொறுமையாக இருந்தாரோ அதே போல் நாம் பொறுமையாக இருக்க வேண்டும். அவர் வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும் நியாயமாய் தீர்ப்பு செய்பவருக்கு தம்மை ஒப்புக் கொடுத்து அமைதியாய் இருந்தார். இதற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டும் இருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார் என்று I பேதுரு 2:21, 22-ல் சொல்லியிருக்கிறார். ஆகவே பொறுமையாய் இருப்போம். பொறுமையின் போராட்டத்தில் பொறுமையைக் காத்துக் கொள்வோம். யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறோமே. பொறுமையாய் இருந்த யோபு இரண்டு மடங்காய் ஆசீர்வதிக்கப்பட்டாரே.

**5. அபிஷேகத்தைக் காத்துக் கொள்ள போராட்டம்:** பிலதெல்பியா சபையிலே ஐந்தாவது ஜெயங் கொள்கிறவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள்? என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். இதோ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு (வெளி. 3:11) என்று கர்த்தர் சொன்னார். பிலதெல்பியா சபையார் ஒவ்வொருவரின் தலையின் மேலும் தேவன் தமது கிரீடத்தை வைத்திருந்தார். இந்த கிரீடம் எப்படிப்பட்டது? பூமியில் உள்ள ராஜாக்கள் தலையில் வைத்திருக்கும் கிரீடத்தைப் போன்று நமது தலையிலே கிரீடம் வைக்கவில்லை. ஆரோன் கர்த்தருடைய சபையிலே ஊழியம் செய்வதற்காக அவனுடைய தலையிலே அபிஷேக தைலம் என்னும் கிரீடத்தை ஆண்டவர் வைத்திருந்தார் என்று லேவி 21:12-ல்

நாம் வாசிக்கிறோம். பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படாமலும், தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் இருப்பானாக. அவனுடைய தேவன் அபிஷேக தைலம் என்னும் கிரீடம் அவன் மேல் இருக்கிறதே. நான் கர்த்தர் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அபிஷேக தைலமே ஆரோனின் தலையில் உள்ள கிரீடம். இன்று அபிஷேகம் பெற்றுக் கொண்ட நாம் அபிஷேகத்தையும், அதன் மூலம் பேசுகிற அந்நிய பாஷையையும் அற்பமாக நினைக்கக் கூடாது. அது நம் தலையின் மேல் வைக்கப்பட்ட கிரீடம். கிரீடங்கள் யாருக்காக? ராஜாக்களுக்காக தேவன் கிரீடத்தை சூட்டுகிறார். ஆகவே தான் நம்மை ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் அபிஷேகம் பண்ணினார் என்று வெளி 1 : 6-ல் நாம் வாசிக்கிறோம். சவுல் ராஜாவாக அபிஷேகம் பண்ணபட்டார். கிரீடம் அவர் தலையில் சூட்டப்பட்டது. அந்த கிரீடத்தை அவர் இழந்து போனார். சிம்சோன் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். அபிஷேக தைலம் அவர் சிரசின் மேல் இருந்தது. 20 வருடத்திற்கு அப்புறம் அந்த சிம்சோன் தன் தலையில் இருக்கிற அபிஷேக தைலம் என்னும் கிரீடத்தை இழந்து போனார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! உங்கள் அபிஷேக தைலம் என்னும் கிரீடத்தைக் காத்துக் கொள்ளுங்கள். கடந்த வருஷம் Fr. பெர்க்மான்ஸ் அவர்கள் மலேசியாவிற்கு ஊழியத்திற்கு சென்றார்கள். ஊழியங்களை முடித்தபிற்பாடு அங்கிருந்த ஒரு விசுவாசி, தமது தேவனுடைய தாசரை ஒரு பெரிய மார்க்கெட்டிற்கு அழைத்துப் போனாராம். அங்கிருக்கும் ஒரு பெரிய கடையிலே Depa-rtmental store-ல் A to Z என்ற அளவில் சகல பொருள்களும் வாங்கலாமாம். அந்த விசுவாசி தந்தை பெர்க்மான்ஸ்டம் நீங்கள் விரும்புகிற பொருட்களை வாங்கிக் கொள்ளுங்கள் நான் அதற்குரிய பணத்தை செலுத்தி விடுகிறேன் என்று சொன்னாராம். Fr. பெர்க்மான்ஸ் அந்த கடை முழுவதும் சுற்றிப் பார்த்தார். அதை வாங்கலாமா? இதை வாங்கலாமா? என்று யோசித்தபோது எல்லாவற்றையுமே வாங்க வேண்டும் என்று தான் எண்ணம் துவங்கியது. அந்த வேளையில் பரிசுத்த ஆவியானவர் அமைதியாக அவருடைய உள்ளத்தில் பேசினார். பொருட்கள் மேலே கண்ணு வைத்தால் உன் அபிஷேகம் போய்விடும். ஆட்கள் மேல் கண்ணு வைத்தால் உன் அபிஷேகம் அம்போ என்று அகன்றுவிடும் என்று கர்த்தர் பேசினார். உடனே ஒரு பொருள் கூட வாங்காமல் தனக்கிருக்கிற அபிஷேகம் போதும் என்று சொல்லிவிட்டு அந்த தேவமனிதன் தன் வீட்டிற்குத் திரும்பி வந்து ஒரு பாடலை இயற்றினார். அதுதான் VOL. 12-ல் உள்ள ஒரு பாடல்.

''பொருள்கள் மேலே கண்ணு போச்சுன்னா
போச்சய்யா உன் அபிஷேகம்
ஆட்கள் மேலே கண்ணு போச்சுன்னா
அம்போதான் உன் அபிஷேகம்

காத்துக் கொள் காத்துக்கொள்
பெற்றுக்கொண்ட அபிஷேகத்தைக் காத்துக்கொள் - நீ
காத்துக்கொள் காத்துக்கொள்
பெற்றுக் கொண்ட அபிஷேகத்தைக் காத்துக்கொள்

என்று பாடி தன் தலையில் உள்ள அபிஷேக தைலம் என்னும் கிரீடத்தைக் காத்துக் கொண்டார். நாமும் நமது அபிஷேகத்தைக் காத்துக் கொண்டு நீங்காத தூண்களாக விளங்குவோமாக?

# 4

# தாங்கும் தூண்கள்

பல ஆண்டுகளுக்கு முன்பு பெலிஸ்தியா தேசத்திலே நியாதிபதியாகிய சிம்சோன் சிறைக் கைதியாக கட்டப்பட்டவனாய் சிறையிலே தள்ளப்பட்டான். அந்நாட்களிலே பெலிஸ்தியர்கள் பண்டிகை கொண்டாட ஆரம்பித்து 3000 பேர் உட்காரக்கூடிய ஒரு மண்டபத்திலே கண்கள் குருடான, கட்டப்பட்டுள்ள சிம்சோனை வேடிக்கைக் காட்டும்படியாகக் கொண்டு வந்தார்கள். கண்கள் தெரியாத சிம்சோன் தள்ளாடி விழுவதையும், அவன் பரிகசிக்கப்படுவதையும் பார்த்து அந்த பெலிஸ்தியர்கள் மனமகிழ்ச்சியாயிருந்தார்கள். சிம்சோனுடைய செயல்கள் அவர்களை சந்தோசப்படுத்தக் கூடிய வேடிக்கையாக காணப்பட்டது. அவனை அம்மண்டபத்தின் இரண்டு தூண்களுக்கு நடுவே நிறுத்தினார்கள். சிம்சோன் தனக்குக் கைலாகு கொடுத்து நடத்துகிற பிள்ளையாண்டானோடே வீட்டைத் **தாங்குகிற தூண்களிலே** நான் சாய்ந்து கொண்டிருக்கும்படி அவைகளை நான் தடவிப் பார்க்கட்டும் என்றான். அந்த வீடு புருஷராலும், ஸ்திரீகளாலும் நிறைந்திருந்தது. அங்கே பெலிஸ்தியரின் சகல பிரபுக்களும், வீட்டின் மேல் புருஷர்களும், ஸ்திரிகளுமாக ஏறக்குறைய மூவாயிரம் பேர் சிம்சோன் வேடிக்கைக் காட்டுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு கர்த்தராகிய ஆண்டவரே நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும் படிக்கு, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும். தேவனே என்னைப் பலப்படுத்தும் என்று சொல்லி சிம்சோன் அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத்தூண்களில் ஒன்றை தன் வலது கையினாலும், மற்றொன்றை தன் இடது கையினாலும் பிடித்துக் கொண்டு என் ஜீவன் பெலிஸ்தியரோடே கூட மடியக் கடவது என்று சொல்லி பலமாய்ச் சாய்க்க அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள் மேலும் எல்லா ஜீவன்கள் மேலும் விழுந்தது. இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள். (நியா. 16 : 25-30)

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! நாம் வாசித்த இந்த வேத பகுதியிலே இருக்கின்ற தூணையும், அங்கே கூடியிருந்த ஜனங்களையும், இங்கே நடந்த சம்பவங்களையும் இன்று ஒரு தேவாலயத்திற்கு ஒப்பிடலாம். அல்லது ஒரு சபையின் ஊழியத்திற்கு ஒப்பிடலாம். இந்த சரித்திர சம்பவத்திலிருந்து தூண்கள் உடைய அனுபவத்திலிருந்து நாம் தேவாலயத்தைத் தாங்கும் தூண்களாக இருப்பது எப்படி? என்று ஒன்பது காரியங்களை தியானிப்போமாக!

## 1. தாங்கும் தூண்கள்: (Supporting pillars)

3000 பேர் உட்காரத் தக்கதான அந்த மிகப் பெரிய மண்டபத்தைத் தாங்குவதற்கு 100 தூண்களோ, 200 தூண்களோ அல்ல. அவ்வளவு பெரிய மண்டபத்தையும் இரண்டே தூண்கள் தாங்கிற்று. இதிலே நம்மை சந்தோசப்படுத்தக் கூடிய ஆவிக்குரிய சத்தியங்கள் இருக்கிறதைப் பார்க்கலாம். எந்த ஒரு பட்டணத்திலோ, அல்லது ஒரு சிறிய கிராமத்திலோ கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு அந்த சபையை தாங்குவதற்கு ஏராளமான பேர் அவசியமில்லை. முதலாவது அம்மண்டபத்தை அல்லது அந்த சபையை தாங்குவதற்கு இரண்டு நல்ல விசுவாசிகள் இருந்தால் போதும். அன்று 3000 பேர் கூடியிருந்த மண்டபத்தை இரண்டே தூண்கள் தாங்கியிருந்தது போல இன்றும் பல்லாயிரக்கணக்கானவர்களை இரட்சிப்பதற்கு அனுகூலமாய் பயன்படுத்தப்படும் சபையை, சபையின் ஊழியத்தை அல்லது மிஷனெரி ஊழியத்தை தாங்குவதற்கு, ஒரு போதகரின் தேவைகளை சந்திப்பதற்கு, ஒரு சுவிசேஷகனை சுவிசேஷ ஊழியத்தில் உற்சாகப்படுத்துவதற்கு இரண்டு நல்ல விசுவாசிகள் இருந்தால் போதுமானது.

கர்த்தருடைய கிருபையினாலே புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவிலிலே தேவன் நல்லதொரு கிளைச் சபையைத் தந்துள்ளார். சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக அந்த சபையை தொடங்கும் போது இரண்டே குடும்பங்கள் தான் அங்கே விசுவாசிகளாய் இருந்தனர். ஒருவர் டாக்டராகவும், இன்னொருவர் ஆசிரியராகவும் குடும்பமாக இருந்தார்கள். ஒரு சில புதிய ஆத்துமாக்கள் கூடி வந்தார்கள். அடியேன் என்னுடைய ஊரிலிருந்து மாதம் ஒருமுறை அந்த ஜனங்களுக்குப் போய் பிரசங்கம் பண்ணி, பரிசுத்த இராப்போஜனம் நடத்தி, ஞானஸ்நானம் கொடுத்து அந்த ஊழியத்தை வளர்த்தேன். கொஞ்ச நாட்களுக்கு பிற்பாடு அங்கு ஒரு

ஊழியக்காரரை குடும்பமாக போட்டேன். ஊழிய ஆரம்ப நாட்களிலே அந்த போதகரையும், குடும்பத்தையும் தாங்கியது இரண்டே குடும்பங்கள் தான்.

தேவ கிருபையினால் இப்போது அந்த இடத்திலே 200 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்துள்ளார்கள். பலர் வெளியூருக்கு மாற்றலாகி போய்விட்டாலும் இப்போது அங்கு 120 விசுவாசிகள் ஸ்திரமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அங்கே ஒரு பூமி வாங்கப்பட்டது. ஜெபவீடு கட்டப்பட்டது. ஊழியக்காரர் தன்னிறைவோடு ஊழியத்தைச் செய்ய தேவன் எல்லா ஆசீர்வாதத்தையும் தந்தார். இந்த சபை இவ்விதமாய் ஸ்திரப்பட்டு, பலப்பட்டு வளர்வதற்கு வெளிநாட்டாருடைய உதவியோ, வெள்ளைக்காரர்களோட பணமோ, அல்லது எந்த ஸ்தாபனத்துடைய உதவித் தொகையோ காரணமாக இருக்கவில்லை. அந்த ஸ்தல சபையிலே இரண்டு குடும்பங்கள் தூண்களாக இருந்தார்கள். இன்று அந்த சபை நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்கள் போதுமான தூண்களாய் உள்ளார்கள்.

12 ஆண்டுகளுக்கு முன்பாக கர்மேல் சபை தொடங்கும் போது ஒரு சில ஏழை விசுவாசிகள் எங்களிடத்தில் இருந்தார்கள். ஒரு சிலரை வைத்துதான் இந்த ஊழியம் இந்த ஐக்கியம் ஆரம்பிக்கப்பட்டது. அந்நாட்களிலே படித்த, பட்டம்பெற்ற, பக்கத்து சபையை சேர்ந்த ஒரு சகோதரன் என்னை சந்தித்து எனக்கு ஒரு ஆலோசனை கொடுத்தார்.

Gospel for Asia என்ற ஸ்தாபனம் கேரளாவிலே இருந்து கொண்டு ஆசியாவிலே ஏழாயிரம் சபைகளுக்கு உதவித் தொகைக் கொடுக்கிறார்கள். நீங்களும் ஏன் பொருளாதாரத்திலே கஷ்டப்பட வேண்டும். இந்த Gospel for Asia என்ற ஸ்தாபனத்திற்கு உதவித் தொகை கேட்டு ஒரு விண்ணப்பம் அனுப்புங்கள். ஒவ்வொரு ஊழியக்காரருக்கும் அவர்கள் 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரைக் கொடுக்கிறார்கள் என்று அந்த சகோதரன் சொன்னார்.

உடனே நான் அந்த சகோதரனுக்கு பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல்படி பதில் சொன்னேன். அன்பு சகோதரரே! சபையைத் தாங்குவதற்கு வெளியில் உள்ளோரோ, வெளி மாநிலத்தாரோ உதவி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. என்னுடைய விசுவாசம் எல்லாம் உண்மையாய் ஜெபித்து ஊக்கத்தோடு முழு பெலத்தோடு தசமபாகம்

காணிக்கைக் கொடுக்கிற இரண்டு விசுவாசிகள் இங்கே இருந்தால், அவர்களைக் கொண்டே இந்த சபையை ஸ்திரப்படுத்த முடியும். பிற்பாடு இந்த இரண்டு பேரைப் போல இன்னும் அநேகர் எழும்பும் போது இந்திய தேசம் முழுவதிலும் சபைகளை ஸ்தாபித்து எழுப்புதலைக் கொண்டு வர முடியும் என்று நான் அவரிடம் சொன்னேன்.

என் விசுவாசத்தின்படியே தேவன் இந்த கர்மேல் ஊழியத்தை கனப்படுத்தினார். அந்த ஆரம்ப நாட்களில் ஒரு சிலர் தூண்களாக நின்று ஊழியத்திற்கு உதவியாக இருந்தார்கள். இன்று அநேகரை இந்த ஊழியத்தை தாங்கும் கரங்களாக தேவன் எழுப்பியுள்ளார். அதனால் தான் இந்த சபையின் மூலம் ஸ்தல சபை ஊழியம், கிளை சபை ஊழியம், மிஷனெரி ஊழியம், இலக்கிய ஊழியம் என்று சொல்லி ஊழியங்கள் ஆலமரங்கள் போல் படர்ந்து விரிந்து கொண்டு செல்கிறது.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை நண்பரே! சகோதர சகோதரிகளே! நீங்கள் உங்களுடைய இடத்திலே உங்கள் சபைக்கு உங்களுடைய தேவாலயத்திற்கு ஒரு தூண்களாக நில்லுங்கள். போதுமான அளவு பொருளாதார உதவி செய்யும் தூண்களாக இருங்கள். ஊழியத்தை எப்படியெல்லாம் தாங்க முடியுமோ அப்படியெல்லாம் தாங்க உங்களை ஒப்புக் கொடுங்கள். அருமையான தேவனுடைய ஊழியக்காரர்களே! உங்களுடைய ஊழியத்திற்கு ஆசீர்வாதத்திற்காக அலைகடல் அலைந்து, திரைகடல் ஓடி திரவியம் தேடி ஓட வேண்டிய அவசியமில்லை. முழங்காலில் நின்று என்னுடைய சபையிலிருக்கிற இந்த விசுவாசிகளை தாங்கும் தூண்களாக எழுப்பித் தாரும். தன்னிறைவு பெற்ற சபையாய் தரணியில் தழைக்க தாங்கும் தூண்களை உருவாக்கும் என்று நீங்கள் ஜெபித்தால் உங்கள் விசுவாசிகள் ஆவியில் வளருவார்கள். ஆத்துமாவிலே பெலனடைவார்கள். அவர்கள் உங்களைத் தாங்குகிற தூண்களாக இருப்பார்கள். இதை நான் போதனையாக எழுதாமல் வாழ்வில் கண்ட சாதனையாக எழுதுகிறேன். ஆகவே தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல. உங்களுக்கும் அவர் நன்மை செய்வார்.

## 2. நிமிர்ந்து நிற்கும் தூண்கள் : (Up right pillars)

சிம்சோன் நிறுத்தப்பட்ட அந்த மண்டபம் 3000 பேர் கொள்ளத்தக்கதான பெரிய மண்டபம். அவ்வளவு பெரிய

மண்டபத்தைத் தாங்கியது இரண்டே தூண்கள் தான் என்று நாம் பார்த்தோம். இந்த தூண்கள் நேராக நிற்கும் பொழுது, மண்டபத்தைத் தாங்குகிறது. 3000 பேர் ஜீவனுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறது. 3000 பேர் மகிழ்ச்சியடைய அந்த மண்டபம் உதவியாக இருந்தது. அதிலே பிரபுக்கள், ராஜாக்கள், அதிகாரிகள், பொதுமக்கள் என்று சொல்லி பலதரப்பட்ட மக்கள் அதன் நிழலில் தங்கும்படியாக அந்த தூண்கள் அந்த மண்டபத்தைத் தாங்கி நின்றது.

அதே தூண்கள் சிம்சோனின் கையினாலே அசைத்து அது பிடுங்கப்பட்டு கீழே விழுந்தபோது அந்த மகாபெரிய மண்டபம் இடிந்து கீழே விழுந்தது. உள்ளே குழுமியிருந்த 3000 பேர் ஜீவனையும் பறித்துவிட்டது. படுகாயமடைந்து, ஊனமுற்று அத்தனை பேரும் இறந்து போனார்கள். 3000 பேரில் ஒருவர் கூட ஜீவன் தப்பவில்லை.

தூண்களான விசுவாசிகள், தூண்களான உடன் ஊழியர்கள் ஐக்கியத்தையும், சபையையும், தேவாலயத்தையும் தாங்குபவர்களாக நேராக நிற்கும் போது ஆத்துமாக்களுக்கு பாதுகாப்பும், ஜீவனுக்கு அடைக்கலமும் உண்டாகிறது. தூண்களாக இருக்கிற மூப்பர்கள், தாங்குகின்ற விசுவாசிகள், நிமிர்ந்திருக்கும் வாலிபர்கள் விழுந்து போவார்கள் என்று சொன்னால் அவர்களைக் கொண்டே சபை நஷ்டப்படும். மண்டபம் இடிந்து விழும். தேவாலயம் நாசமடையும். அங்குள்ள ஆத்துமாக்கள், சிதறடிக்கப்பட்டு, பின் மாற்றத்தில் சென்று, பாவ வலையில் விழுந்து, சாத்தானுடைய கண்ணியிலே சிக்கி நஷ்டப்பட வேண்டியதிருக்கும்.

எனதருமை உடன் ஊழியர்களே! அருமை விசுவாசிகளே! நீங்கள் விழுந்து போன தூண்களா? நிமிர்ந்து நிற்கும் தூண்களா? நீங்கள் ஒருவேளை விழுந்து போன தூண்களாய் இருந்தால் இன்று எழுந்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். விழுந்தவன் எழுந்திருக்கிறதில்லையோ? வழிதப்பிப் போனவன் திரும்புகிறதில்லையோ என்று எரேமியா மூலமாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு அழைப்புக் கொடுத்தக் கர்த்தர் இந்த வேளையிலே உங்களையும் அழைக்கின்றார். (எரே 8 : 4) ஆகவே விழுந்து போனத் தூண்களாகிய நீங்கள் எழுந்து நின்று முன்பு போல உங்கள் தேவாலயத்தில் நிமிர்ந்து நிற்கிறவர்களாக இருங்கள். கர்த்தர் தம் வருகை வரைக்கும் உங்களை விழுந்து போகாமல் காப்பாராக!

## 3. தடவிப்பார்க்கப்படும் தூண்கள்: (Deceived pillars)

3000 பேர் அமர்ந்திருந்த அந்த மண்டபத்தை தாங்கியிருந்த இரண்டு தூண்களையும் நான் தடவிப் பார்க்கட்டும் என்று சிம்சோன் கேட்டான். அந்தத் தூண்களைத் தடவிப் பார்ப்பது தூண்கள் மேல் உள்ள அன்பினாலல்ல. அந்தத் தூண்களைப் பிடித்து சாய்த்து, அந்த மண்டபத்தை உடைத்து, அதிலிருக்கிற ஜனங்களைக் கொல்ல வேண்டும் என்ற தந்திர ஆலோசனையினாலும், வஞ்சகத் திட்டத்தினாலும் தான் சிம்சோன் அதைத் தடவிப் பார்க்க, அந்த இடத்திலே கொண்டுபோய் வைக்கக் கேட்டான். (நியா 16:26) சிம்சோன் தனக்குக் கைலாகு கொடுத்து நடத்துகிற பிள்ளையாண்டானோடே வீட்டைத் தாங்குகிற தூண்களிலே நான் சாய்ந்திருக்கும்படி அதை நான் தடவிப் பார்க்கட்டும் என்று சொன்னான்.

அந்த பிள்ளையாண்டான் சிம்சோனை அந்த பாரமாண்டமான தூண்களுக்கு நடுவே நிறுத்தினான். அந்த இரண்டு தூண்களையும் சிம்சோன் தடவிப் பார்த்தான். அன்பானவர்களே! சிம்சோன் தூண்களைத் தடவுவதற்கு அவன் உள்ளத்திலே மறைவான ஒரு திட்டம் உண்டு. இன்னும் சில நிமிட நேரங்களில் நான் இந்தத் தூண்களைப் பிடித்து அசைத்து கீழே விழத் தள்ள வேண்டும். இந்த மண்டபம் உடைய வேண்டும். ஜனங்களெல்லாம் கொல்லப்பட வேண்டும் என்ற தந்திரமான, வஞ்சகமான எண்ணத்தில்தான் தூண்களைத் தடவுகிறான்.

இன்றும் நம்முடைய சபைகளிலே தூண்களைப் போலிருக்கிற மேய்ப்பர்களையோ, தூண்களைப் போலிருக்கிற ஜெப வீரர்களையோ தூண்களைப் போல ஊழியங்களைத் தாங்குகிற, விசுவாசிகளையோ உதாரக் குணமுள்ளவர்களையோ அடுத்த சபையார் அல்லது அருகிலிருக்கிற சபையின் போதகர் அருகிலே வந்து தூண்களைத் தடவிப் பார்க்கிறவர்களாக இருக்கிறார்கள். சொந்த மேய்ப்பன் தன்னுடைய விசுவாசிகள் மேல் வைக்கிற அன்பைவிட கூடுதலான அன்பு காட்டுவது போல இந்த வஞ்சக மேய்ப்பர்கள், கள்ள அப்போஸ்தலர், கபடமுள்ள வேலையாட்கள் பிற சபையின் தூண்களான விசுவாசிகளுக்குக் கரம் கொடுத்து தடவிப் பார்க்கிறார்கள். கைகுவித்து, வணக்கம் செலுத்தி, கையைப் பிடித்து இழுத்து

அப்சலோமைப் போல வஞ்சக முத்தமிடுகிறார்கள். முதுகைத் தட்டிக் கொடுக்கிறார்கள். தோள் மீது கை வைக்கிறார்கள். பிரதர், ''நீங்கள் உண்மையாகவே உங்கள் சபைக்கு ஒரு நல்ல தூணாக இருக்கிறீர்கள். உங்களுடைய ஜெபம், உங்களுடைய தியாகம், நீங்கள் அதிகமாய்க் கொடுப்பதும் இதன் மூலம் உங்கள் சபை வளர்ந்து பெருகுகிறது. உங்களைப் போல இரண்டு விசுவாசிகள் எங்களுடைய சபையிலே இருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும். நான் ஊழியத்தைத் தீவிரமாய்ச் செய்வேன். எங்கள் சபையிலே உங்களைப் போல நல்ல விசுவாசிகள் இல்லை என்று சொல்லி அவர்கள் மறைமுகமாக வஞ்சகமான அழைப்புக் கொடுக்கிறார்கள். பள்ளத்தைக் கண்டு பாய்ந்தோடும் தண்ணீரைப் போல, பாராட்டுகளைக் கண்டு இதயம் இளகி பிறரின் பின்னால் ஓடக் கூடிய ஒரு பரிதாப நிலை தூண்களான சில விசுவாசிகளுக்கு வந்து விடுகிறது. தூண்களான விசுவாசிகளே, பிறசபையின் ஊழியர்கள் உங்கள் மீது சாய்ந்திருக்க உங்கள் வீட்டில் தங்க இடம் கொடாதிருங்கள். அருமையான ஊழியக்காரர்களே! நீங்கள் பிற சபையின் தூண்களான விசுவாசிகளை தடவ வேண்டாம். அருமை சகோதர சகோதரிகளே! நீங்கள் பிற சபையின் ஊழியர் தடவிப் பார்க்கும் அளவிற்கு அவர்களோடு நீங்கள் ஐக்கியம் வைக்க வேண்டாம். பரிசுத்த ஆவியானவர் எச்சரித்து இந்த வார்த்தைகளை எழுதுகிறார். மிக கவனமாய் இருந்து கர்த்தர் கொடுத்தத் தோட்டத்திலே கடைசி வரை கனி கொடுங்கள். கர்த்தர் நாட்டிய தேவாலயத்திலே கடைசிவரை நிமிர்ந்து நிற்கிறத் தூண்களாக நின்று கர்த்தருக்கு மகிமை சேருங்கள். உங்கள் சபையில் தாங்கும் தூண்களாக, நிமிர்ந்து நிற்கும் தூண்களாக எப்படி செயல்படுவது என்று இன்னும் தியானிப்போம்.

**4. ஜெபிக்கும் தூண்கள்:** ரெவிதீம் என்ற இடத்திற்கு இஸ்ரவேல் ஜனங்கள் வந்தபோது தங்களுடைய வாழ்க்கையிலே முதலாவதாக ஒரு யுத்தத்தை சந்தித்தார்கள். அமலேக்கியர் என்னும் கொடிய ஜனங்கள் இஸ்ரவேல் ஜனத்தோடு யுத்தம் பண்ணினார்கள். அமலேக்கியர் என்றால் கலகக் குணம் உள்ளவர்கள் என்று அர்த்தம். இந்த கலக்க குணம் உள்ளவர்களே ஆதி சபையின் முதல் எதிரிகளாக வந்து யுத்தம் செய்தார்கள். கலகமுள்ள இடத்திலே சமாதானம் இருக்க முடியாது. பழைய ஏற்பாட்டு சபையின் ஜனங்களுக்கு முதலாவது வந்த யுத்தத்திலே பாளையத்தின் பின் வருகிற சிலர் வெட்டப்பட்டு மரித்தார்கள். இன்று புதிய ஏற்பாட்டு சபையிலும் இந்த கலகத்தின்

ஆவியோடு போராட்டம் இருக்கத்தான் செய்கிறது. நம்முடைய தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார் என்று I கொரி 14:32-ல் சொல்லப்பட்டுள்ளது. I கொரி 14-ஆம் அதிகாரத்தில் தேவனுடைய சபையில் வரங்களைப் பெற்று ஆவியின் வரங்களை அப்பியாசப்படுத்தி, செயல்படுத்தி ஊழியங்கள் செய்வது எப்படி? என்ற விவரத்தை சொல்லுகிற பவுல் தான் அங்கே கலகம் வரக்கூடும் என்று எச்சரித்து இந்த வசனத்தை எழுதுகிறார். ஆகவே நாம் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரிகளுக்காகவும், சகல மனிதர்களுக்காகவும் ஜெபங்களையும், விண்ணப்பங்களையும், துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்க வேண்டும் என்று II தீமோத் 2:1-ல் பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார்.

அமலேக்கியர் வந்து இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணியபோது அந்த யுத்தத்தின் முடிவில் தேவ ஜனங்களுக்கு வெற்றி கிடைத்தது. எதிரிகளாகிய அமலேக்கியர் அழிக்கப்பட்டார்கள். அமலேக்கியர் அன்று அழிந்து போனாலும் சதா காலங்களிலும் இந்த அமலேக்கியனோடு யுத்தம் நடக்கும் என்று ஆண்டவர் முன் கூட்டியே தீர்க்கதரிசனமாக சொல்லிவிட்டார். அன்று முதல் இன்று வரை அமலேக்கியனோடு தேவ ஜனங்களுக்கு போராட்டங்களும், யுத்தங்களும் உண்டு. அன்று அமலேக்கோடு மோசேயும், அவருடைய சபையாராகிய தேவ ஜனங்களும் யுத்தம் செய்தார்கள். மோசேயின் கரங்கள் உயர்ந்திருந்தபோது இஸ்ரவேலர்கள் ஜெயித்தார்கள். அமலேக்கியர் தோற்றுப் போனார்கள். மோசேயின் கரங்கள் தளர்ந்து கீழே விழுந்தபோது இஸ்ரவேலர்கள் தோற்றார்கள். அமலேக்கியர் ஜெயித்தார்கள். இந்த மோசேயின் செயல் எதைக் குறிக்கிறது? ஜெபத்தைக் குறிக்கிறது. நீங்கள் ஜெபிக்கிறதின் மூலம் தான் சபைக்கு ஜெயம் உண்டாகும். ஜெபிக்கிறவர்களே நமது ஊழியங்களின் தூண்களாக இருக்கிறார்கள். கொடுப்பவர்கள் லேசாகக் கொடுத்து விடலாம். ஐசுவரியத்தின் மிகுதியிலிருந்தோ, ஆஸ்தியின் ஒரு பகுதியையோ எளிதாகத் தந்து விடலாம். ஆனால் ஜெபிப்பவர்கள் மிக மிகக் குறைவு. முதலாவதாக நம்முடைய ஊழியங்களின் தூண்களாக, தாங்கும் தூண்களாக இருக்கிறவர்கள் ஜெபிக்கக் கூடியவர்கள். ஜெபம் ஒரு விமானப் படையைப் போல். ஆகாயத்தில் பறந்து சென்று ஆகாய மண்டலத்திலிருக்கிற பொல்லாத ஆவிகளின் சேனைகளைக் கட்டி சிறைப்படுத்தி நமக்கு வெற்றியைக் கொண்டு வரும். எந்த சபை

ஜெபிக்கிறதோ அந்த சபை ஜெயிக்கும் சபையாய் முன்னேறும். ஜெபிக்கிறவர்கள் பரிசுத்தமாய் இருப்பார்கள். சாத்தானை தோற்கடிப்பார்கள். ஜெபிப்பவர்கள் தங்களையும் காத்துக் கொண்டு, தங்களோடு கூட ஒரு கூட்ட ஜனத்தையும் காக்கிறவர்களாக இருப்பார்கள்.

ஆனால் ஜெபிக்கிறவர்களுக்கு சோர்வு உண்டாகும் என்று நாம் மோசேயின் செயலிலிருந்து பார்க்கிறோம். மோசேயின் கைகள் அசந்து போயிற்று என்று நாம் வேதத்திலே வாசிக்கிறோம். இதுபோல இன்றும் ஜெபிப்பவர்களுக்கு இடையிடையே சோர்வுகள் வரக்கூடும். (யாத். 17 : 12) ஆனபடியால்தான் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள் என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு உவமையைச் சொன்னார். (லூக் 18 : 1) ஜெபிக்கிறவர்கள் சோர்ந்து போகும் போது அவர்களுடைய கரத்தைத் தாங்குபவர்கள் உடன் ஊழியர்களும், உடன் விசுவாசிகளுமாகியிருக்கிறார்கள். மூத்தவனாகிய மோசேயின் கைகள் அசந்து கீழே விழும்போது உடன்பிறப்பான ஆரோன் வலப்பக்கத்திலும், ஊர் என்பவன் இடப்பக்கத்திலும் நின்று மோசேயின் கைகளைத் தாங்கினார்கள். ஆரோன் லேவிக் கோத்திரத்தை சேர்ந்தவன். ஊர் யூதாக் கோத்திரத்தைச் சேர்ந்தவன். இது எதைக் குறிக்கிறது என்று சொன்னால் நம் ஊழியங்களை, ஊழியங்களைச் செய்கிற உடன் ஊழியர்களும் தாங்க வேண்டும். சபையில் இருக்கிற உடன் விசுவாசிகளான கர்த்தருடைய ஜனமும் தாங்க வேண்டும். இன்று ஏதாவது விசுவாசிகள் மாத்திரம் ஊழியத்தைத் தாங்கி, உடன் ஊழியர்கள் ஊழியத்தைத் தாங்க மறந்து போனால் சரியான விதத்திலே பலமுள்ள சபையாக இருக்க முடியாது. ஆகவே அருமையான ஊழியக்காரர்களே! உங்கள் தலைமை போதகருடைய கரத்தை நீங்கள் தாங்குபவர்களாக இருங்கள். அருமையான விசுவாசிகளே! உங்கள் பாஸ்டருடைய கரத்தை நீங்கள் தாங்குபவர்களாக இருங்கள். இரண்டுபக்கமும் தாங்கும் கரங்கள் மோசேயைத் தாங்கினபடியினாலே மோசே அன்று சாயங்காலம் வரைக்கும் அசந்து போகாமல் கையை உயர்த்தி ஜெபித்துக் கொண்டிருந்தான். அன்று மாலைக்குள்ளாக அமலேக்கியர் அழிக்கப்பட்டார்கள். இஸ்ரவேலர்கள் ஜெயம் பெற்றார்கள். ஆகவே அந்த இடத்திலே ''யெகோவாநிசி'' என்ற பலிபீடம் கட்டப்பட்டது. யெகோவாநிசி என்றால் கர்த்தர் என் வெற்றிக்கொடி என்று அர்த்தம்.

ஆகவே மோசேயின் ஜெபம், ஆரோனுடைய தாங்கும் ஜெபம், ஊரினுடைய தாங்கும் ஜெபமே பழைய ஏற்பாட்டு சபையை தாங்கினது. இன்றைக்கும் நம்முடைய சபைகளிலே, முழு இரவு ஜெபங்களிலே ஜெபிக்கிறவர்கள் ஏராளமான பேர் எழும்பட்டும். உபவாச ஜெபங்களில் அடிக்கடி கூடி வந்து ஜெபிக்கிற சகோதர சகோதரிகள் ஏராளம் எழும்பட்டும். ஜெபக் குழுவில் கூடி வந்து தங்களுடைய பாரங்களை பகிர்ந்து கொண்டு, பிறருடைய பாரங்களை சுமந்து ஜெபிக்கிற ஜெபக் குழுக்கள் ஏராளம் எழும்பட்டும். தன்னுடைய தேவைகளுக்காக மட்டுமல்ல. பிறருக்காக கண்ணீர் சிந்தி ஜெபிக்கிற யோபு போன்ற உத்தமர்கள் எழும்பட்டும். வடஇந்திய ஊழியங்களுக்காக வல்லமையோடு ஜெபிக்கக் கூடிய ஜெப பாரமுள்ள தேவபிள்ளைகள் நம் மத்தியில் ஏராளமாக எழும்புவார்களாக, ஜெபிக்கிறவர்கள் தேவாலயத்தைத் தாங்கும் தூண்களாக இருக்கிறார்கள்.

## 5. பாரத்தை பகிர்ந்து கொள்ளும் தூண்கள் : (Yoke fellow pillars)

கிராமங்களிலே மாட்டுவண்டி ஓடுகிறதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? அந்த வண்டியின் நுகத்தடியிலே இருபுறமும் இரண்டு காளைகள் பொறுத்தப்பட்டிருக்கும். அந்த காளைகளுடைய கழுத்தின் மேல் நுகத்தடி பொறுத்தப்பட்டிருக்கும். அந்த நுகத்தடியில் தான் மாட்டு வண்டி இணைக்கப்பட்டு மனிதர்களை சுமக்கிறதாகவோ அல்லது அரிசி மூடைகள், உரமூடைகள் இவற்றை சுமந்து கொண்டு செல்லக்கூடிய வண்டிகளாக இருக்கின்றன.

கிராமங்களிலே வயல்களை உழுவதற்கு ஒரு கலப்பை இருப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அந்த கலப்பையின் நுனியிலே ஒரு நுகத்தடி மாட்டப்பட்டிருக்கும். அந்த நுகத்தடியின் இருபுறத்திலும் பலமுள்ள இரு காளைகள் பூட்டப்பட்டிருக்கும். இந்தக் காளைகள் இந்த நுகத்தடியை சுமந்து கலப்பையை வைத்து உழுவதினாலே வயல்களிலே நல்ல விளைச்சலும், அறுவடையும் காணப்படும். நீதிமொழிகளிலே கூட இதைக்குறித்து சாட்சி கொடுத்திருக்கிறது. காளைகள் இல்லாத இடத்திலே களஞ்சியங்கள் வெறுமையாய் இருக்கும் என்று பார்க்கிறோம்.

இதுபோலவே இன்று கர்த்தருடைய சபையிலும் நுகத்தடிகள்

உண்டு. ஊழியத்திற்கான பாரங்கள் உண்டு. இந்த பாரங்களை பகிர்ந்து கொள்கிறவர்கள் யாரோ அவர்களே சபையின் ஊழியத்தை தாங்குகிற தூண்களாக இருக்கிறார்கள். நமது கர்த்தருடைய சபையிலே நுகத்தடியின் ஒருபுறம் கர்த்தருடைய ஊழியக்காரனும், நுகத்தடியின் மறுபுறம் விசுவாச மக்கள், அல்லது மூப்பர்கள் பூட்டப்படுவார்கள். மனமுவர்ந்து யார் கர்த்தருடைய ஊழியக்காரனோடு பாரங்களை பகிர்ந்து கொள்வேன். ஊழிய பாரங்களை சுமப்பேன். ஊழியக்காரனுடைய பாரத்தைக் குறைத்து லெகுவாக்கும்படி நானும் என் கழுத்தைக் கொடுக்கிறேன் என்று வந்து கேட்டு விசாரித்து பாரங்களை பகிர்ந்து கொள்கிறார்களோ அப்படிப் பட்டவர்களே தேவாலயத்தைத் தாங்கும் தூண்களாக இருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது. பவுல் அப்போஸ்தலன் ஊழியத்திலே பலர் தங்களுடைய கழுத்தைக் கொடுத்து தேவனுடைய சபையைத் தாங்கினவர்களாக இருக்கிறார்கள். பிலிப்பிய சபைக்கு நிருபத்தை எழுதும் போது கர்த்தருக்குள் ஒரே சிந்தையாக இருக்க எயோதியாளுக்கும், சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன். அன்றியும் என் உத்தம கூட்டாளியே அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்கள் கிலேமெத்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோட கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது (பிலி 4 : 2, 3) என்று பவுல் எழுதுகிறார். இங்கே என் உத்தம கூட்டாளியே! My true yoke fellow என்று சொல்லுகிறார் நுகத்தை சுமக்கிற கூட்டாளிலே என்று ஒரு சிலரைக் குறித்து சந்தோசமாக அறிக்கை கொடுக்கிறார். பவுலின் ஊழியம் போன இடமெல்லாம் சிறப்பாய் வளர்ந்ததற்கு காரணம் அவர் ஊழியத்திலே கழுத்தைக் கொடுத்து நுகங்களை சுமக்கக் கூடிய பாரங்களை சுமக்கக் கூடிய பலர் இருந்தார்கள்.

நெகேமியா எருசலேம் அலங்கத்தைக் கட்டியபோது அந்த நெகேமியாவுக்கும் பல வாலிபர்கள் கழுத்தைக் கொடுத்து பாரத்தை பகிர்ந்து கொண்டு ஊழியத்தை செய்தார்கள். ஆனால் அதே நேரத்திலே நெகேமியா எதிர் பார்த்த சில மனிதர் உதவி செய்யவில்லை. பிரபுக்களான சிலர் பெலன் உள்ளவர்கள், பாரத்தை பகிர்ந்து கொள்ள திராணி உள்ள ஒரு சிலர் பாரத்தை பகிர்ந்து கொள்ள மறுத்து விட்டனர். அதை நெகேமியா வேதனையோடு எழுதுகிறார். அவர்கள் அருகே

தெக்கோவா ஊரார் பழுது பார்த்துக் கட்டினார்கள். அவர்களுடைய பிரபுக்களோ, தங்கள் ஆண்டவருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தைக் கொடுக்கவில்லை என்று நெகேமியா 3 : 5-ல் கூறுகிறார். கர்த்தருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தைக் கொடுக்காதவர்கள் ஏழைகளல்ல. அல்லது பாமரமக்களல்ல. படித்தவர்களும், பிரபுக்களுமான ஐசுரியவான்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கு தங்கள் கழுத்தைக் கொடுக்கவில்லை என்று நெகேமியா வேதனைப் படுகிறார். இன்றும் நமது சபைகளிலே ஊழியங்களைத் தாங்குகிறவர்கள் சாதாரண மக்களாகத்தான் இருக்கிறார்கள் பிரபுக்கள் பலர் தங்கள் ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைத்திருக்கிற படியினாலே ஊழியங்களுக்கு கொடுப்பதற்காகவோ, அல்லது ஊழிய பாரங்களை பகிர்ந்து கொள்ளவோ அநேக ஐசுரியவான்கள் மறுத்து விடுகிறார்கள். ஆனால் எல்லா பிரபுக்களும் அல்ல, நமது சபைகளில் ஐசுவரியமுள்ள ஒரு சிலர் தங்களை முழுமையுமாய் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து ஊழியத்தைத் தாங்குகிறவர்களும் உண்டு. ஆனால் பிரபுக்களான பலர் ஊழியங்களை தாங்க மனற்றவர்களும் உண்டு என்பது உண்மை.

அன்பு சகோதர சகோதரிகளே! கர்த்தர் உங்களை ஐசுவரியத்தினால் ஆசீர்வதித்து பட்டம் பதவிகளால் நிரப்பி இருக்கிறாரா அவையெல்லாமே உங்கள் சபையின் ஊழியங்களை தாங்கும் தூண்களாக இருப்பதற்காக தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள் என்பதை நீங்கள் மறந்து போகாதீர்கள்.

**6. பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும் தூண்கள் :** ஊழியத்தைத் தாங்குவதிலே இது ஒரு தனி சிறப்பு உள்ளதாகும். பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்வதற்குத் தாழ்மையும், தியாகமும் இதயத்திலே வேண்டும். பரிசுத்தவான்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார்கள். விசுவாசிகளான கர்த்தருடைய பிள்ளைகளோ கர்த்தருக்கு ஊழியம் செய்கிற பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். சகோதரரே ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்யும் படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும் அறிந்திருக்கிறீர்களே (I கொரி 16 : 15) அடியேன் வேதாக பள்ளியில் படிக்கிற நாட்களிலே பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்திருக்கிறேன். இன்றும் என்னைவிட பெரிய பரிசுத்தவான்களுக்கு ஊழியம்

செய்கிறதை பாக்கியமாகக் கருதுகிறேன். வேதாகமப் பள்ளியில் படிக்கிற அந்த ஆரம்ப நாட்களிலே ஊழியக்காரருக்கு துணி துவைத்துக் கொடுப்பது, துணிகளைத் தேய்த்துக் கொடுப்பது, ஊழியர்களுடைய பிள்ளையை பராமரிப்பது, ஊழியர்களுடைய வீட்டை சுத்தம் பண்ணுவது, அந்த ஊழியக்காரருடைய வீட்டைச் சுற்றி இருக்கிற தோட்டங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவது, களைகள் எடுப்பது, முள்வேலிகளெல்லாம் வெட்டி சுத்தம் செய்வது, விறகு வெட்டுவது, சமையல் வேலையில் உதவி செய்வது கணக்குகள் எழுதுவது போன்ற பல காரியங்களை மிகுந்த தாழ்மையோடு செய்ததினாலே அதை பரிசுத்தவான்களுக்கு செய்த ஊழியமாக கர்த்தர் கணக்கிலே வைத்தார். அதன் பலனாக நான் எந்தெந்த பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்தேனோ அந்தந்த பரிசுத்தவான்களின் மேல் இருந்த அபிஷேகம் இன்று என் தலையின் மேல் பல மடங்காகப் பெருகி இருக்கிறதை நான் என் ஊழியத்தில் பார்க்கிறேன். நான் நேசித்து கனப்படுத்தின பல தேவ மனிதர்கள் இன்று இந்த பூலோகத்திலே இல்லை. ஆனால் அவர்கள் மேலிருந்த அபிஷேகம் பல மடங்காக என் மேல் விழுந்து சபை கட்டுவதிலும், கிளை சபைகளை ஸ்தாபிப்பதிலும், மிஷனெரி ஊழியங்கள் செய்வதையும், தீவிரமாக பிரயாணம செய்து ஆத்துமாக்களுக்காக பிரயோஜனப் படுவதையும் தேவனுடைய அபிஷேகம் என்னில் பெருகுவதையும் நான் பார்க்கிறேன். இதற்கெல்லாம் காரணம் ஆதி நாட்களிலே நான் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததே.

**7. வீட்டைத் திறந்து கொடுத்த தூண்கள் :** ஆதி சபை நாட்களிலே எழுப்புதல் தீவிரமாய் இருந்தபோது வீட்டு ஜெபக் குழுக்கள் ஆங்காங்கே நடந்தது. வீடுகள் தோறும் அப்பம் பிட்டார்கள். வீடுகள் தோறும் ஆராதனை நடத்தினார்கள். வீடுகள் தோறும் ஜெபக் குழுக்களை நடத்தினார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் ஊழியம் செய்த இடங்களில் எல்லாம் முதலில் எடுத்த உடனே பெரிய ஜெபவீடுகளோ தேவாலயங்களோ கட்டப்படவில்லை. ஆரம்ப நாட்களிலே யுஸ்து என்பவனுடைய வீட்டிலே, ஜெப ஆலயத் தலைவனுடைய தாயின் வீட்டிலே என்று பல இடங்களில் வீடுகளிலே விசுவாசிகள் கூடி கர்த்தரைத் தொழுது கொண்டார்கள். இவ்விதமாக ஊழியங்கள் ஸ்தாபிப்பதற்குத் தங்கள் வீட்டைத் திறந்து கொடுக்கும்

போது அவர்களின் செயல் நமது சபைகளைத் தாங்குகிற தூண்களாகக் காணப்படுகிறது. ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாஸம் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள் என்று I கொரி 16:19-ல் பவுல் சொல்லுகிறார். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் எந்த ஊருக்குச் சென்றாலும், எந்த பட்டணத்தில் வாழ்ந்தாலும் தங்கள் வீட்டிலே ஆராதனை நடத்துவதற்குத் திறந்து கொடுத்தார்கள். இதினிமித்தமாய் அவர்கள் வீட்டிலே ஒரு சபைக் கூடி வந்தது. வீட்டைத் திறந்து கொடுப்பது என்பது ஊழியத்தைத் தாங்குவதாகும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கப்பர்நகூம் என்ற ஊருக்குச் சென்றபோது அங்கே ஒரு மனுஷன் தன் வீட்டைத் திறந்து கொடுத்தான். அந்த வீட்டிலே இயேசுகிறிஸ்து உட்கார்ந்து போதகம் பண்ணத் தொடங்கினார். இயேசு வீட்டில் இருக்கிறார் என்று திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு அந்த இடத்திலேக் கூடி வந்தார்கள். ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாக ஏராளமானபேர் கூடி வந்தார்கள். அப்பொழுது அந்தவீடு அசுத்தப்பட்டிருக்கும். பிள்ளைகள் அந்த வீட்டின் அழகான தரைகளையும், வளவளப்பான சுவர்களையும் அவர்கள் அழுக்காக்கி இருப்பார்கள். பலர் தங்கள் மிதியடிகளையும் மிதியடிகளிலே உள்ள அழுக்குகளை வீடு வரைக்கும் கொண்டு வந்திருப்பார்கள். இதையெல்லாம் சகித்தாலும் இதைவிட பெரிய தியாகம் ஒன்று செய்ய வேண்டியிருந்தது. நான்கு பேர் ஒரு திமிர்வாதக் காரனை சுமந்து கொண்டு வந்து ஓடுகளைத் திறப்பாக்கி உள்ளே இறக்கினார்கள். இந்த கப்பர் நகூம் வீட்டுக்காரனுடைய தியாகம் சற்று எல்லாருடைய தியாகத்தைவிட கூடுதலானது என்று தான் சொல்லாம். வீடு திறப்பாக்கப்பட்டாலும் அவன் அதையும் சகித்துக் கொண்டான். சந்தோசமாய் அதற்கு இடம் கொடுத்தான். எப்படியாகிலும் திமிர்வாதத்திலே உள்ள ஒரு மனுசன் விடுதலையாகி பாவங்கள் மன்னிக்கப் பட்டவனாய், வேதனை நீங்கப்பட்டவனாய் தேவனுடைய பிள்ளையாய் மாறி ஆசீர்வாதத்தைப் பெற்று தேவ ராஜ்ஜியத்திற்கு சொந்தக் காரனாய் மாறிவிட்டானே என்ற பெரிய சந்தோசத்திலே தன் வீட்டையும், ஆஸ்திகளையும் தியாகமாகக் கொடுத்தான். ஆகவே தங்கள் வீட்டை ஊழியங்களுக்காகத் திறந்து கொடுப்பவர்கள், ஜெபக்குழு நடத்த திறந்து கொடுப்பவர்கள் ஊழியத்தைத் தாங்கும் தூண்களாக இருக்கிறார்கள்.

**8. ஆஸ்திகளால் ஊழியம் செய்த தூண்கள் :** நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாம்சத்தில் உலாவிய நாட்களிலே அவரோடு கூட பல தரப்பட்ட மக்கள் இருந்தார்கள். அதிலும் ஒரு குறிப்பிடத்தக்க ஸ்திரிகள் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைத் தாங்கும் தூண்களாக இருந்தார்கள். ஏரோதின் காரியக்காரனாகிய கூசாவின் மனைவியாகிய யோகன்னாளும், சூசன்னாளும் தங்கள் ஆஸ்திகளால் அவர்களுக்கு ஊழியம் செய்து கொண்டு வந்த மற்ற அநேக ஸ்திரிகளும் அவர்களோடு கூட இருந்தார்கள் (லூக்கா 8 : 3).

தங்கள் ஆஸ்திகளை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு கொடுத்தபோது இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திலே அவர்களும் பங்குள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். அன்று நடந்த அதே காரியங்கள் தான் இன்றும் நம் ஊழியங்களிலே நடக்க வேண்டும். விசுவாசிகளான கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் தசமபாகம், காணிக்கைகளை ஆண்டவருடைய ஊழியத்திற்காகக் கொடுத்தால் அவர்கள் ஊழியத்தைத் தாங்குகிறத் தூண்களாக இருப்பார்கள். இன்று தசமபாகம், காணிக்கைகளைப் பற்றி அறியாதவர்கள் நிறையப் பேர் உண்டு. தசமபாக்ம் கொடுக்க வேண்டும் என்று தெரிந்த பிற்பாடு அதைத் தவறாகப் பயன்படுத்துகிறவர்களும் உண்டு. இதைப் பற்றிய வெளிச்சத்தை வேத வசனத்திலிருந்து சற்று விரிவாகக் கவனிப்போம். ஊழியங்களைத் தாங்கும் தூண்களாக நிற்போம். **தசமபாகம் - TITHE** என்ற சொல் எபிரேய மொழியிலே MASER - A TENTH PART OF INCOME வருமானத்தில் பத்தில் ஒரு பாகம் என்று அர்த்தம்.

நிலத்தின் விளைச்சலிலும், தங்கள் வருமானத்திலும் பத்தில் ஒரு பாகத்தை தேவனுக்காக, தேவ ஊழியத்திற்காகக் கொடுக்கும்படி தேவன் கட்டளையிட்டார். (லேவி. 27 ; 30, 32; எண் 18 : 21, 26) இந்த தசமபாகம் ஆசரிப்புக்கூடார ஆராதனையில் செலவழித்தார்கள். ஆசாரிய ஊழியம் செய்கிற ஆசாரியர், லேவியர் இவர்களின் தேவைகளுக்காகவும் பகிர்ந்தளிக்க தேவன் சொன்னார்.

தசமபாகம் செலுத்தும் போது தேவனே சகல நன்மைக்கும் உரிமையாளர் என்ற சத்தியத்தை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். (யாத். 19 : 5) பூமியும், அதன் நிறைவும் கர்த்தருடையது. ஆகவே நான் சம்பாதித்த ஆயிரம் ரூபாயோ, அல்லது பல லட்ச ரூபாயோ எல்லாமே கர்த்தருடையது. தசமபாகமும் கர்த்தருடையது. ஆகவே

கர்த்தடையதைக் கர்த்தருக்கும்,இராயனுக்குரியதை இராயனுக்கும் செலுத்துவேன் என்பதை நாம் அறிக்கையிடுகிறோம். (சங். 24 : 1)

நாம் சுவாசிக்கிற சுவாசமும், நமக்குள் இருக்கிற ஜீவனும் நம் ஆண்டவர் தந்தது. (அப். 17 : 28) என்ற உணர்வோடு நம் வாழ்க்கையையே கர்த்தருக்கும் காணிக்கையாகக் கொடுக்க வேண்டுமென்று ஆண்டவர் எதிர்பார்க்கின்றார்.

நாம் தசமபாகம் கொடுப்பது மட்டுமல்ல கர்த்தருடைய ஊழியங்களுக்காக அதற்கு மேலும் காணிக்கைகளை செலுத்த வேண்டும். காணிக்கைகளை உற்சாகமாகச் செலுத்தும் போது நாம் ஊழியங்களைத் தாங்குகிறத் தூண்களாக இருக்கிறோம். ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவதற்கு பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற நூல் ஆகியவற்றைக் கொடுக்க நம் ஆண்டவர் கட்டளையிட்டார். (யாத். 35 : 28,29) தேவனுடைய ஆலயத்தை பழுது பார்த்துக் கட்டும் படியாக காணிக்கைகளைக் கொண்டு வரும்படி ஆண்டவர் சொல்லுகிறார். (I இராஜா 12 : 9,10) தேவனுடைய ஆலயத்தை திரும்பவும் கட்டி எழுப்புவதற்காக உற்சாகமாய் காணிக்கைகளை கொண்டு வரும்படி ஆண்டவர் சொன்னார். (II நாளா 31 : 5-10).

கர்த்தருடைய வீட்டைக் கவனியாமல் தன்னுடைய வீடு, உத்தியோகம், வியாபாரம், சம்பாத்தியம், தொழில் குடும்பம், பிள்ளை வளர்ப்பு ஆகியவற்றில் மட்டும் தன்னுடைய பொருளாதாரத்தை செலவாக்குபவர்கள் தேவ ஆசீர்வாதத்தைச் சம்பூரணமாய்ப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். எருசலேமை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்கள் என்று ஆண்டவர் சொன்னார். தேவனுடைய வீடு பாழாய்க் கிடக்கும் போது நீங்கள் மச்சுப் பாவுப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ? இப்போதும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள். நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டு வருகிறீர்கள். நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை. குடித்தும் பரிபூரணமடையவில்லை. நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர் விடவில்லை. கூலியை சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறான். ஒருவரையொருவர் அதை சம்பாதிக்கிறான் என்று ஆகாய் 1 : 4-6 வசனம் சொல்லுகிறது.

தூர இடங்களிலே கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற

மிஷனெரிகளுக்கும் நாம்காணிக்கைகளை அனுப்ப வேண்டும் என்று கர்த்தர் தம் திருவசனத்திலே சொல்லியிருக்கிறார். அந்தபடியே சுவிசேஷத்தை அறிவிப்பவர்களுக்கு சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டாக வேண்டும் என்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். (I கொரி 9:14) போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்தில் எழுதியிருக்கிறாரே. பவுல் அப்போஸ்தலனின் மிஷனெரி ஊழியத்தில் ஒரு சிலரே சுவிசேஷ ஊழியத்தை தாங்குகிற சபையாராக இருந்தார்கள். பவுல் மூலம் நூற்றுக்கணக்கான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டாலும் பிலிப்பு பட்டணத்திலுள்ள கர்த்தருடைய சபையாரே பவுலின் மினுனெரி ஊழியங்களுக்கு கொடுக்கிறவர்களாய் இருந்தார்கள். மேலும் பிலிப்பியரே சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல் வேறொரு சபையும் உடன்படவில்லை என்று பவுல் எழுதுகிறார். (பிலி. 4:15)

நமது வருமானத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும். ஏழைக்கு இரங்ககிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். கர்த்தர் அதைத் திரும்பக் கொடுப்பார். (நீதி 19:17) நமது சபைகளில் தரித்திரரும், ஏழைகளும் இல்லாமல் இருப்பது இல்லை. சரியான ஆகாரம் இல்லாமல், உடுத்துவதற்கு போதிய வஸ்திரம் இல்லாமல், தங்குவதற்கு வசதியுள்ள வீடு இல்லாமல் கூரைகளிலும், குடிசைகளிலும், தரித்திரத்திலும், நிந்தனைகளிலும் வாழுகிற ஏராளமான பேர் நம் சபைகளில் வருகிறார்கள். அவர்கள் நம்மோடு சேர்ந்து கர்த்தரை ஆராதிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய குறைவில் நாம் உதவி செய்யும்போது கர்த்தர் அதைக் குறித்து சந்தோசப்படுகிறார். தரித்திரரை நினைக்க வேண்டும் என்று கலா 2:10-ல் சொல்லப்பட்டுள்ளது. இவ்விதமாக நாம் ஏழைகளுக்கு இரங்கி தரித்திரருக்குக் கொடுத்து தேவனுடைய ஊழியங்களைத் தாங்கும்போது நமக்கு பரலோகத்திலே பொக்கிஷம் நிறைய சேர்த்து வைக்கப்படுவதாக மத். 6:20-ல் நம் ஆண்டவர் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டில் தசமபாகம் செலுத்தினால் மாத்திரம் போதுமானது. ஆனால் புதிய ஏற்பாட்டில் அவனவன் தன் தன்

வரவுக்குத் தக்கதாகக் கொடுக்க வேண்டும் என்று I கொரி 16:2-ல் ஆண்டவர் சொல்லியிருக்கிறார். ஆகவே புதிய ஏற்பாட்டு ஈகையானது உற்சாகமாய் கொடுக்க வேண்டும். (II கொரி 9:7) சந்தோசமாய் கொடுக்க வேண்டும். உதாரத்துவமாய் கொடுக்கப்பட வேண்டும். தாராளமாய் கொடுக்கப்பட வேண்டும். **(Voluntary and Generous and cheerful giver)**

நம் கர்த்தருடைய ஊழியத்தை நம்முடைய பணத்தாலும், தசமபாகத்தாலும், காணிக்கையாலும் தாங்கும் தூண்களாக இருக்கும் போது இந்த உலகத்திலும் ஆசீர்வதிக்கப்படப் போகிறோம். இடம் கொள்ளாமல் போகும் மட்டும் அவர் நம்மை ஆசீர்வதிப்பார். அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி தேவன் நம் மடியிலே போடுவார். நீதியின் விளைச்சலை 100 மடங்காகப் பெருக வைப்பார். (மல்கியா 3:10)

ஒருமுறை இரு நாடுகளின் மத்தியில் ஒரு பெரிய ஏரி இருந்தது. அந்த ஏரியின் மேல் பகுதி நாட்டினர் கீழ்ப்பகுதி நாட்டினரோடு அடிக்கடி மோதிக் கொண்டனர். அவர்களின் மோதலுக்கு ஒரு காரணம் இருந்தது. ஏரியின் மத்தியில் ஒரு தீவு இருந்தது. இரு நாட்டாரும் அந்த தீவு தங்களுக்குத் தான் சொந்தம் என்றனர். அது மிகவும் அழகான ஒரு தீவு. நீர்வளமும், நில வளமும் நிறைந்தது. யாரும் அப்படிப்பட்ட ஒரு சொத்தை இழக்க விரும்ப மாட்டார்கள்.

இந்த ஓயாத சண்டையுடன் சலித்து போன மக்கள் ஒரு முடிவு கட்ட விரும்பினர். ஒரு முடிவும் கிட்டவில்லை. அவர்கள் இருவருடைய சண்டையும் ஓயவில்லை. இறுதியில் இரு நாட்டாருக்கும் நண்பரான மூன்றாம் நாட்டுப் பெருந்தலைவர் ஒருவர் சமாதானம் செய்து வைக்க விரும்பினார்.

நியாயமான பல வழிகளையும், தீர ஆலோசித்த நண்பர் வழி காணாமல் இறுதியில் ஒரு போட்டியை ஏற்படுத்தி அதன் மூலம் பிரச்சனைக்கு தீர்வு காண தீர்மானித்தார். இரு தலைவர்களையும் அழைத்து நண்பர்களே, இங்குள்ள நிலையில் அந்த தீவு உங்கள் இருவருக்குமே சொந்தம் இல்லை. ஆயினும் உங்களில் ஒருவர் அதை பரிசாகப் பெறலாம். ஒரு போட்டியை ஏற்படுத்துகிறேன். அந்த போட்டியில் வென்றவர் அந்தத் தீவை பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். இருநாட்டாரும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். இருநாடுகளுக்கும் எல்லையான ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து இரு

படகுகள் தங்கள் தங்கள் தலைவருடன் குறிப்பிட்ட நேரத்தில் புறப்படவேண்டும். தீவின் கரையில் எந்த தலைவர் தன் கையை முதன் முதலாக வைக்கிறாரோ அவருக்கே இந்த தீவு சொந்தம். இது தான் போட்டி என்று மூன்றாவது தலைவர் சொன்னார்.

குறிப்பிட்ட நேரத்தில் போட்டி ஆரம்பித்தது. பயங்கர முயற்சி, ஓய்வில்லாத தண்டு வலிப்பு. முந்துபவர் யர்ரோ? முடிவு சொல்ல முடியவில்லையே, மூச்சுவிட முடியாத எதிர்பார்ப்புடன் படகுகள் இரண்டும் பரபரப்புடன் எதிர் கரையை நோக்கி சென்று கொண்டிருந்தது. 50 கஜதூரம் இருக்கும் போதே கீழ் நாட்டுப் படகு முந்த ஆரம்பித்தது. மேல்நாட்டுப் படகு தோற்கக் கூடிய நிலையில் இருந்தது. இன்னும் சற்று நேரத்தில் சீக்கிரத்தில் முடிவு தெரிந்துவிடும்.

கீழ்நாட்டுப் படகு கரையிலிருந்து 5 கஜ தூரத்தில் இருக்கும்போது மேல் நாட்டுப்படகு 10 கஜ தூரத்தில் பிந்தி வந்தது. மேல் நாட்டு அதிபர் தன் தோல்வி உறுதி என்று கண்டார். அவர் மனக் கண்ணில், தன் மக்களுக்கு ஏற்படவிருக்கும் ஏமாற்றமும், பெரும் நஷ்டமும் படம் போல் தோன்றின.

தலைவர் தண்டு வலிப்பதை நிறுத்தினார். கண்மூடி முளிப்பதற்குள் தன் வாளை உருவி தன் இடதுகையை முழங்கையிலிருந்து துண்டித்தார். தன் முழு பெலத்தையும் கூட்டி வலது கரத்தால் இடது கையை ஏரிக்கரை மணலில் விழும்படி வீசி எறிந்தார். கீழ்நாட்டுப் படகு 2 கஜ தூரத்தில் இருக்கும்போதே மேல் நாட்டு அதிபதியின் கை எதிர்கரை மணலில் தொப்பென விழுந்தது. கரைக்கு 7 கஜத்துக்கு அப்பால் இருந்து கொண்டு தீவு எனக்கு என்று அவர் ஆர்ப்பரித்தார்.

நிபந்தனையின்றி வெற்றி மேல் நாட்டவர்க்கே என்று முடிவாயிற்று. தங்கள் தலைவரின் தியாகத்தைக் கண்ட மக்கள் கண்ணீர் சொரிந்தனர். தங்கள் தலைவரை பாராட்டி பணிந்தனர். தோல்வியுற்ற கீழ்நாட்டார் கூட மேல்நாட்டின் தலைவர் தியாகத்தைக் கண்டு பாராட்டினார்கள்.

அன்பான நண்பர்களே! இந்த தீவைப் பெற்றுக் கொள்வதற்கு அந்த மேல்நாட்டு ஊரின் தலைவர் தன் கரத்தை வெட்டி எறிந்து தியாகம் செய்து அதை தன் நாட்டிற்குக் கொடுத்தார். இதுபோலவே நாமும் தியாகத்தோடு தசமபாகங்களையும், காணிக்கையும் கொடுத்து இந்திய தேசத்தை இரட்சித்து இயேசுவுக்கு சொந்மாக்குவோம்.

## 5

# ஐக்கியத்தின் தூண்கள்

வேதாகமத்திலே சொல்லப்பட்ட புதிய ஏற்பாட்டு சபைக்கு எருசலேமை தலை நகரமாகக் கர்த்தர் வைத்து ஆதி சபையை கர்த்தர் உண்டாக்கினார். ஆதி சபையினுடைய அப்போஸ்தலர்கள் 12 பேரும், சீசர்கள் 70 பேர்களாக ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்தார்கள். அதினிமித்தமாக அந்தியோகியாவிலே ஒரு புற ஜாதி சபையின் தலைமை சபை உண்டாயிற்று, இத்தனை சபைகள் ஏராளமான ஊழியர்கள் இருந்தாலும் ஆதி சபையின் தூண்கள் மூன்று பேர் என்று கலா 2:9-ல் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். தூண்களாக எண்ணப்பட்ட கேபாவும், யாக்கோபும், யோவானும் எங்களை ஏற்றுக்கொண்டு அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும், பர்னபாவுக்கும் வலது கை கொடுத்து ஊழியத்தில் சேர்த்துக் கொண்டார்கள் என்று பவுல் எழுதுகிறார்.

இன்றும் நம்முடைய ஸ்தாபனங்கள், ஐக்கியங்களிலே ஊழியக்காரர்களுடைய எண்ணிக்கை 100 பேர் 1000 பேர் என்றிருந்தாலும், ஐக்கியத்தின் தூண்களாக நின்று செயல்படக் கூடியவர்கள் ஒரு சிலரே. பேதுருவும், யாக்கோபும், யோவானும் ஆதி சபையின் தூண்களாக இருந்தபடியால் இந்த மூன்று பேர் மூலமாக புற ஜாதி சபைகளுக்கு அப்போஸ்தலனாக விளங்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பர்னபாவும், பவுலும் ஐக்கியத்தோடு கூட சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். தேவனாகிய கர்த்தரும் ஆத்துமாக்களையும், ஊழியக்காரர்களையும் ஐக்கியத்தில் சேர்க்கிறவராய் இருக்கிறார். ஆத்துமாக்களையும், ஊழியர்களையும் சிதறடிக்கிறவன் பிசாசாயிருக்கிறான். எனவே தேவனுடைய தாசர்களே! நீங்கள் உங்கள் ஐக்கியத்திற்கு ஊழியக்காரர்களையும், விசுவாசிகளையும் கொண்டு வந்து சேர்க்கிறவர்களாய் இருங்கள். அப்பொழுது நமது ஐக்கியத்திற்கு தூண்களாக நீங்கள் விளங்குவீர்கள்.

கர்த்தருடைய கிருபையினாலே எங்களுடைய சபை எங்களுடைய பிரதேசத்தில் வேகமாய் வளருவதற்கு காரணம் என்னவென்றால் சபையிலே ஆத்துமாக்களைக் கொண்டு வந்து சேர்க்கக் கூடிய சில சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களே, ஆத்துமாக்களை சபையில் கொண்டு வந்து சேர்ப்பவர்களே சபைக்குத் தூண்களாய் இருக்கிறார்கள். இந்தத் தூண்களைக் குறித்து மூன்று காரியங்களை இந்த அத்தியாயத்திலே சிந்திப்போம்.

**1. வேதப் பிரமாணத்தைப் போதிக்கும் தூண் :** ஆதி சபையின் தூண்களாக பரிசுத்த ஆவியானவர் எழுதும் மூன்று அப்போஸ்தலர்களும் தூண்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். தூண்கள் - pillers - STULOS - (GR) கிரேக்க வார்த்தை சொல்லப்பட்டுள்ளது இதற்கு மூன்று அர்த்தங்கள் உண்டு.

1. Teachers of the Law - வேதப் பிரமாணத்தை போதிப்பவர்.
2. Great important person - முக்கியமான தலைவன்
3. Achivement - சாதனையாளன் என்பதாகும்.

கேபா, யாக்கோபு, யோவான் இந்த மூன்று அப்போஸ்தலர்களும் மூன்றுவித தூண்களாக எண்ணப்பட்டார்கள். முதல் தூணாக இருந்தவர் பேதுரு, இந்த பேதுரு நியாயப் பிரமாணத்தை தீர்க்கமாக போதிக்கக் கூடியவராகக் காணப்பட்டார். அப்போஸ்தலர் அனைவரும் பெந்தெகோஸ்தே நாளில் மேல் வீட்டிலே கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கும் போது பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அப்போது அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு பற்பல பாஷைகளை பேசி தீர்க்கதரிசனம் சொன்னார்கள். பதினேழு தேசத்தை சேர்ந்த புறஜாதிகள் இதை கண்ட போது இவர்கள் மதுபானம் குடித்து மதிமயங்கி வெறித்திருக்கிறார்கள் என்று புகார் சொன்னார்கள். தவறான அபிப்பிராயம் கொண்டார்கள்.

அந்த வேளையில் பேதுரு பதினொரு பேருங் கூட எழுந்து நின்று பழைய ஏற்பாட்டில் இருக்கிறதான வேதாகம நியாங்களையும், தீர்க்கத் தரிசனங்களில் சொல்லப்பட்ட பரிசுத்த ஆவியானவர் பற்றிய சத்தியத்தையும் விளக்கமாக எடுத்துச் சொல்லி, ''நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறி கொண்டவர்கள் அல்ல. பொழுது விடிந்து இப்பொழுது மூன்றாம் மணி வேளையாயிற்றே. யோவேல் தீர்க்கத்தரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்திருக்கிறது'' என்று

சொன்னான்.

இதைக் கேட்ட போது அந்த பதினேழு தேசத்தாரும் மனதிலே குத்தப்பட்டவர்களாகி ''அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டு, மனந்திரும்பி மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

பேதுரு சாதாரண மீன் பிடிக்கிறவனாய் இருந்தாலும் நியாயப் பிரமாணத்தை நன்றாய் ஜனங்களுக்கு போதிக்கக் கூடியவராய் இருந்தார். அந்த நியாயப் பிரமாண வார்த்தைகளை போதித்ததின் மூலம் ஜனங்களுக்கு உணர்வு உண்டாக்கி இரட்சிப்பை கொடுத்து சபையிலே மூவாயிரம் பேர்களாக சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். பிற்பாடு ஐயாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பிற்பாடு ஐயாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இப்படிப்பட்ட அப்போஸ்தலர்கள் ஸ்தாபன ஐக்கியங்களுக்கு தூண்களாக இருக்கிறார்கள்.

**2. தலைவனாகிய தூண் :** ஆதி சபையின் தூண்களிலே இரண்டாவது இடத்தைப் பெற்றவர் யாக்கோபு என்னும் மனிதன். வேதாகம புத்தகத்திலே மூன்றுவிதமான யாக்கோபை புதிய ஏற்பாட்டிலே நாம் பார்க்க முடியும்.

1) மத்தேயு 4:21-ல் செபெதேயுவின் குமாரன் யாக்கோபு என்று ஒருவனை பார்க்கிறோம். இவன் அப்போஸ்தலர் 12:2 வசனத்திலே குறிப்பிடப்பட்டுள்ள ஏரோதினால் கொல்லப்பட்ட யாக்கோபாக இருக்கிறான்.

2) அல்பேயுவின் குமாரன் யாக்கோபு (மத்தேயு 10:3) என்ற ஒருவனை நாம் பார்க்கிறோம். தூண்களாக இருந்த யாக்கோபு இவனும் அல்ல.

3) இயேசுவின் சகோதரன் யாக்கோபு என்று யோவான் 7:5-லும், யாக்கோபு 1:1லும் நாம் வாசிக்கிறோம். இந்த இயேசுவின் சகோதரன் யாக்கோபு தான் ஆதி சபையின் தூணாக விளங்கினான். அதுமட்டுமல்ல. ஆதி சபையின் தலைவனாகவும் விளங்கியதாக அப் 15:13-ல் இவனைக் குறித்து சொல்லியிருக்கிறது.

எருசலேம் சபையில் நடந்த ஊழியத்திலே அந்தியோகியா

சபையிலிருந்து ஒரு பிரச்சனை வந்தது. அப்போஸ்தலரால் கட்டளையிடப்படாத சில ஊழியர்கள் அந்தியோகியாவின் கிளைசபைகளை சந்தித்து நீங்கள் விருத்த சேதனம் பெறாவிட்டால் இரட்சிக்கப்பட மாட்டீர்கள் என்று பொய்யாய் உபதேசித்து ஜனங்களுடைய ஆத்துமாவை புரட்டினார்கள். சபையார் கலங்கினார்கள் இந்தப் பிரச்சனை தலைமை சபையாகிய எருசலேமுக்கு வந்தது. தலைமை சபையின் தலைவனாக (Chairman of the counsellors) இயேசுவின் சகோதரன் யாக்கோபு இருந்தான். (அப். 15:13). குழப்பமான சூழ்நிலையிலே யாக்கோபு எழுந்து நின்று அந்தியோகியாவின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கிறதான புறஜாதி சபைகளுக்கு சில உபதேசங்களை அவர் தீர்மானித்து (1) வேசித் தனத்திற்கு விலகியிருங்கள். (2) நெருக்குண்டு செத்ததற்கு விலகியிருங்கள் (3) விக்கிரக ஆராதனைக்கு விலகியிருங்கள். (4) தானாய் செத்ததற்கு விலகியிருங்கள். இவைகளே கர்த்தர் உங்களுக்கு கொடுக்கிற பிரமாணம். வேறு ஒரு பாரமான பிரமாணம் உங்கள் மேல் சுமத்தப்படுவதில்லை என்று புறஜாதி சபைக்கு ஆலோசனையாக இந்த யாக்கோபு தீர்மானித்தான். (அப். 15:20) யாக்கோபு மூலமாக உண்டான இந்தத் தீர்மானமான ஆலோசனை புறஜாதிகளுடைய சபையைப் போய் சேர்ந்த போது அங்கே ஆறுதல் உண்டாயிற்று (அப். 15:31) யாக்கோபின் வார்த்தைகளால் சபையிலுள்ள குழப்பம் மாறிவிட்டது. ஆத்துமாக்களை புரட்டக் கூடிய கள்ள உபதேசத்திலிருந்து அந்தியோகியா சபை பாது காக்கப்பட்டது. இவ்விதமான ஆவிக்குரிய சிறந்த ஆலோசனையை தக்க சமயத்திலே ஐக்கியத்திற்காக பகிர்ந்தளிப்பவன் சபையின் தூணாக இருக்கிறான்.

அருமை நண்பர்களே! நமது தேவாலயத்தின் தூண்களாக தேவன் நம்மை நிறுத்த விரும்புகிறார். நீங்கள் வீடு சந்தித்தாலும், கிளை சபைகளை சந்தித்தாலும், ஆலோசனை சொன்னாலும் உங்கள் மூலமாக ஜனங்கள் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் ஊன்றக் கட்டி எழுப்பப்படட்டும். இடிப்பதற்கு அல்ல. ஊன்ற கட்டுவதற்கே கர்த்தர் நமக்கு கிருபை கொடுத்திருக்கிறார். அதை செய்யுங்கள், நீங்கள் சபையின் தூணாக நின்று ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**3. சாதனையாளனாகிய தூண்:** தூண்கள் என்ற வார்த்தைக்கு கிரேக்க வார்த்தையின் மூன்றாவது அடையாளம் மூன்றாவது அர்த்தம் ''சாதனையாளன்'' என்பதாகும். (Achivement)

இந்த இடத்திற்கு இயேசு கிறிஸ்துவின் மார்பிலே சாய்ந்த அன்பின் சீசனாகிய யோவான் பொருத்தமான மனிதனாக இருந்தான். இந்த யோவான் மெய்யாகவே சாதனையாளனாகக் காணப்பட்டான். இயேசு கிறிஸ்துவை கெத்சேமனேயில் யூத வீரர்கள் பிடித்த போது எல்லா சீசர்களும், அப்போஸ்தலர்களும் தங்கள் ஜீவனைக் காத்துக் கொள்ள பயந்து ஓடினார்கள். ஆனால் இந்த யோவான் அப்போஸ்தலன் மட்டும் இயேசுவை பின் தொடர்ந்தே போனான். இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கும் போதும் இயேசுவின் சிலுவையின் அடிவாரத்திலே தன் ஜீவனையும் பணயம் வைத்து இயேசுவின் மேல் தன் அன்பை வெளிப்படுத்தின ஒரு சாதனையாளனாய் காணப்பட்டான். எதிரியின் பட்டயத்திற்கு பயப்படுகிறவர்கள் சாதனையாளர்கள் அல்ல. சத்துருவின் சூழ்ச்சிக்கு பயந்து அஞ்சுபவர்கள் சாதனையாளர்கள் அல்ல. சூழ்நிலைகள் வித்தியாசமாகும் போது இருக்கிற இடத்தைவிட்டு ஓடுபவர்கள் சாதனையாளர்கள் அல்ல. எது நடந்தாலும், என்ன நேர்ந்தாலும், ஆட்டுக் குட்டியானவர் எங்கே போனாலும் அவரை பின்பற்றுகிற கூட்டமாக நிற்பவனே சாதனையாளன். இந்த யோவானுடைய துணிச்சலையும், சாதனை வீரனாக இருக்க வேண்டும் என்ற தைரியத்தைக் கண்ட நம் ஆண்டவர் யோவானுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தார். கடைசி நாட்களிலே ஆசியா மீதிருக்கிற ஏழு சபைகளுக்கும் கண்காணியாக இந்த யோவானைக் கர்த்தர் நியமித்தார். ஏழு சபைகளுக்காக ஜெபிக்கவும். எண்ணெய் கொப்பரையிலே போடப்பட்டும் சாகாதபடியும் கர்த்தர் காத்தார். தீர்க்கதரிசனத்தின் கடைசி புஸ்தகமாகிய வெளிப்படுத்தல் விசேஷத்தை எழுதும்படியாகத் தேவன் கிருபை கொடுத்தார். சாதனையாளன் எழுதிய புத்தகம் சாதனையாளர்களை எழுப்பும் புத்தகம் தான் - இன்று யோவானுடைய வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் ஒரு சாதனை புஸ்தகமாகத்தான் இருக்கிறது. உலக ஜனங்களைத் தட்டி எழுப்பி இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்தி ஜனங்களை பரிசுத்தப் படுத்திக் கொண்டிருக்கிறது. எனதருமை ஊழியர்களே! அன்பு விசுவாசிகளே! நீங்கள் ஆண்டவருக்காக தைரியமாக இருங்கள். சத்தியத்தைக் கைக் கொள்ளுங்கள். திடமாயிருங்கள். பரிசுத்த வாழ்க்கையிலே சாத்தானை எதிர்த்து போராடுங்கள். அவ்விதமாக நின்று கேபாவைப் போல, யாக்கோபை போல, யோவானைப் போல தூண்களாக இருங்கள்.

# 6

# சத்தியத்திற்குத் தூண்கள்

இங்கிலாந்தில் வயோதிபரான ஒரு பக்திமான் இருந்தார். வேதத்தை மிகவும் நேசித்தார். பிறர் உள்ளத்திலும் வேத வாஞ்சையை ஊற்ற பிரயாசப்பட்டார். அவருடைய பிறந்த நாள் ஒன்றை சிறப்பாகக் கொண்டாட விரும்பினார். அவருடைய வேலையாட்கள். அனைவருக்கும் பரிசு அளிக்க ஒழுங்கு செய்தார்.

நூறு பவுண்ட் நோட்டுகளை ஒரு மேஜை மீது வைத்தார். அதன் அருகில் ஒரு பரிசுத்த வேதாகமத்தையும் வைத்தார். தன் வேலையாட்கள் அந்த மேஜையின் அருகே வந்து நூறு பவுண்ட் நோட்டையாவது அல்லது அந்த வேதாகமத்தையாவது ஏதாகிலும் ஒன்றை எடுத்துக் கொள்ளலாம் என்றார். அந்நாட்களில் வேதாகமத்தின் விலை மிகக் குறைவு. ஒரு பவுனுக்கு அரை டஜன் அழகான வேதம் வாங்க முடியும். ஆதலால் குதிரைக்காரர் முதலாவது வந்தார். துரையே எனக்கு வேதாகமம் தான் பிரியம். ஆயினும் தற்சமயம் எனக்கு பணம்தான் அதிகம் தேவைப்படுகிறது என்று சொல்லி விட்டு பணத்தை எடுத்துக் கொண்டார். அடுத்து, தோட்டக்காரன் கை, கால் உதறலோடு அந்த மேஜையின் பக்கமாய் வந்து துரை அவர்களே! ''எனக்கு சரியாக வாசிக்க வராது!'' ஆதலால் பணம்தான் வேண்டும் என்று சொல்லி நூறு பவுண்ட் பணத்தை வாங்கிக் கொண்டான்.

காவல்காரன் குளைந்து, வளைந்து எஜமானின் அருகில் வந்து எஜமானே என் கண் பார்வை மங்கிக் கொண்டே போகிறது. ஆதலால் நானும் பணத்தையே விரும்புகிறேன் என்று சொல்லி நூறு பவுண்ட் நோட்டுகளை வாங்கிக் கொண்டான்.

சமையல்காரி மிகவும் நளினத்தோடு எஜமானின் அருகில் வந்து, ''துரையே எனக்கு படிக்கத் தெரியும். ஆனால் படிக்க நேரம் இல்லை' என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆதலால் பணம் இருந்தால் புது உடுப்பாவது எடுத்துக் கொள்வேன்'' என்று சொல்லி துரையிடம் நூறு பவுண்ட் நோட்டுக்களை வாங்கிக் கொண்டாள்.

அந்த வீட்டிற்கு தண்ணீர் சுமப்பவன் அருகிலே வந்தான். முதலாளியிடம் பணிவோடு கூட பதில் சொன்னான். என் நண்பரிடம் ஒரு பைபிள் இருக்கிறது. அது போதும். அந்த வேதாகமத்தை வாங்கி நான் வாசித்துக் கொள்வேன். எனவே பணமே எனக்குத் தேவை என்று சொல்லி அந்த நூறு பவுண்ட் நோட்டுகளை வாங்கிக் கொண்டு சென்றான்.

அந்த வீட்டிலே குழந்தைகளைக் கவனிக்கிற ஆயாள் எஜமானின் அருகிலே பணிவோடு வந்து நின்று, நான் ஞாயிறு பள்ளியில் வேதாகமக் கதையெல்லாம் கேட்டு விட்டேன். எனவே எனக்கு வேதாகமம் வேண்டாம். எனக்கும் பணம் தான் வேண்டும் என்று அந்த நூறு பவுண்ட் நோட்டுகளை வாங்கிச் சென்றாள். இப்படியாக அங்குள்ள ஒவ்வொருவரும் ஆளுக்கொரு சாக்குப் போக்குகளைச் சொல்லி நூறு பவுண்ட் நோட்டுக்களையே பெற்றுக் கொண்டார்கள். பரிசுத்த வேதாக மேஜையில் அப்படியே யாரும் விரும்பப் படாமல் இருந்தது.

கடைசியாக அந்த சீமானுக்குத் தினமும் பத்திரிக்கைப் போடும் சிறுவன் ஒருவன் வந்தான். அவனுக்கும் பரிசு கொடுக்க முதலாளி விரும்பினார். கந்தல் உடைகளையே அணிந்திருந்தான் அந்த சிறுவன், அவன் ஏழ்மையைக் கண்ட சீமான், தம்பி இன்று என் பிறந்த நாள். உனக்கும் ஒரு பரிசுதர விரும்புகிறேன். இதோ இந்த வேதாகமம் உனக்கு வேண்டுமா? அல்லது 100 பவுண்ட் நோட்டுகள் உனக்கு வேண்டுமா? பணம் இருந்தால் புது உடுப்புகள் தைத்துக் கொள்வாய் என்றார்.

வேதாகமம் என்று சொன்னவுடனே இளைஞனுடைய கண்கள் பிரகாசித்தன. தனக்கு சொந்தமாக ஒரு வேதாகமம் வேண்டுமென்று அவன் வெகு காலமாய்க் காத்திருந்தான். அவன் தாய் பரம ஏழை. ஆயினும் நல்லதொரு கிறிஸ்தவப் பெண். ஆயிரக்கணக்கான பொன் வெள்ளியைப் பார்க்கிலும் கர்த்தருடைய வேதமே விலையேறப்பெற்றது என்று அவன் தாய் அவனுக்கு அடிக்கடிச் சொல்லிக் கொடுத்திருந்தாள். ஆகவே கொஞ்சமும் தயக்கமின்றி, பெரியவர்களே உங்களுக்கு மிகவும் நன்றி. அந்த வேதாகமத்தையே எனக்குத் தாருங்கள் என்று மிகவும் விருப்பத்தோடேக் கேட்டான். செல்வந்தர் மிகவும் களிப்படைந்தார். சிறுவனைப் பார்த்துச் சொன்னார். தம்பி நீ நல்ல பங்கினைத் தெரிந்து கொண்டாய் என்று அவனைப் பாராட்டிப் பேசினார். நீ தெரிந்து கொண்ட நல்ல பங்கு மேலும்

உனக்குப்பல ஆசீர்வாதங்களைத் தருவதாக என்று பாராட்டி அந்த வேத புஸ்தகத்தை வாங்கிக் கொடுத்தார்.

சுற்றியிருந்த வேலையாட்கள் சிறுவனின் சிறுமதியை பரியாசம் செய்தார்கள். பணத்தை வாங்கி வேத புத்தகமும், துணிகளும் வாங்கத் தெரியாத முட்டாள். இவனுக்கு விவேகம் காணாது என்று அவனை இகழ்ந்து பேசினர். எனினும் சிறிது நேரத்தில் அவர்கள் பரியாசம் நின்று போயிற்று. ஏனெனில் அந்த வேதாகமத்தைத் திறந்த போது ஒவ்வொரு பக்கங்களிலும் விலையேறப்பெற்ற பவுண்ட் நோட்டுகள் மறைந்திருந்தன. அப்பொழுது அந்த வேலையாட்கள் தங்கள் புத்தியீனத்தை உணர்ந்து வேதனையோடும், வெட்கத்தோடும் போய் விட்டார்கள்.

இந்த சரித்திர உண்மையைப் படிக்கும் போது இங்கேக் காணப்பட்ட அந்த வேலையாட்கள் போல தான் இன்று கர்த்தருடைய சபையிலும் வேதாகம சத்தியங்களை விரும்புகிறவர்களைவிட உலகப்பிரகாரமான பண சம்பாத்தியத்தையே அதிகமாய் விரும்புகிறவர்கள் ஏராளம். ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டார்கள். சத்தியத்திற்குச் செவியை விலகிக் கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும் என்று பவுல் அப்போஸ்தலன் சொன்னபடியே ஜனங்கள் வேதத்தைவிட கட்டுக் கதைகளை அதிகமாய் நேசிக்கிறார்கள். ஆகவே தான் முடிவில்லாத வம்ச வரலாறுகளையும், கிழவிகள் கதைகளையும் நீ கவனிக்க வேண்டாமென்று வாலிபனாகிய தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். தங்களுடைய சபைக்குப் போவதினால் சத்தியத்தின் வெளிச்சம் அதிகமாய் கிடைக்குமா என்று அறிகிறதைவிட வேலை, உத்தியோகம், தொழில் பெருக்கம், மனிதருடைய ஆதரவு, அன்பு, உலக ஆடம்பரங்கள் முதலியவற்றை நன்றாய் அனுபவிக்க இந்த சபை உதவி செய்யுமா என்பதைத் தான் இன்று அநேகர் பார்க்கிறார்கள்.

ஆனால் பரிசுத்த ஆவியானவருடைய வெளிச்சத்தின்படி கர்த்தருடைய சபையானது சத்தியத்திற்குத் தூணாயிருக்கிறது. I தீமோத் 3 : 15-ல் தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு

ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. (Ground and Pillars of the Truth.)

ஒரு வீட்டைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் அதற்கு ஆதாரம் என்று சொல்லக்கூடிய பவுண்டேசன், அஸ்திபாரம் மிக முக்கியம். அந்த அஸ்பாரத்திற்கு அப்புறமாக அதன் மேலே தூண்கள் எழுப்பப்பட வேண்டும். தூண்களுக்கு மேலே தான் அந்த வீட்டினுடைய கூரைப் போடப்பட வேண்டும். இங்கே அந்த ஆதாரம் அல்லது அஸ்திபாரம் என்பதை அப்போஸ்தலர் அல்லது தீர்க்கதரிசியுடைய உபதேசம் என்று சொல்லப்படுகிறது. அந்த வீட்டின் மேலே இருக்கிறதான கூரை சத்தியமாக இருக்கிறது. ஆனால் அந்த சத்தியத்தைத் தாங்கக் கூடிய தூண்கள் தான் கர்த்தருடைய பிள்ளைகளான விசுவாசிகள், சபையார். ஆகவே இன்று நம்முடைய சபையில் இருக்கிற ஒவ்வொரு ஊழியக்காரனும், விசுவாசியும் சத்தியத்தைத் தாங்குகிறவர்களாக இருக்க வேண்டும். சத்தியத்தை சுமக்குகிறவர்களாக இருக்க வேண்டும். சத்தியத்தைக் கைக் கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும். ஆகவே இந்த செய்தியிலே நாம் சத்தியத்திற்கு தூணாக இருப்பது எப்படி? என்பதற்கு 7 காரியங்களைப் பார்க்கப் போகிறோம்.

**1. விடுதலையாக்கும் சத்தியம்:** சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று யோவான் 8:32-ல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். ஆகவே இன்று நம்முடைய சபைகளிலே பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலைப் பெற்று ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் ஒவ்வொரு Bible study-யிலும், ஒவ்வொரு ஆராதனையிலும் சத்தியம் போதிக்கப்பட வேண்டும். அந்த சத்தியமே ஜனங்களை விடுதலையாக்கும். தேவனுடைய ஜனங்களே! இன்று நம்முடைய சபைகள் விடுதலையாக்கும் சத்தியத்தை பிரசங்கித்து, போதித்து, கைக் கொள்ளுகிற இடமாக இருக்கட்டும். விடுதலையின் சத்தியம் என்றால் பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் மட்டுமல்ல; பாரம்பரியத்திலிருந்தும் நாம் விடுவிக்கப்படும் சத்தியங்களை போதிக்க வேண்டும். கைக் கொள்ள வேண்டும். சபையானது விடுதலையாக்கும் சத்தியத்தை தாங்கும் தூணாக இருக்கின்றது.

**2. பரிசுத்தமாக்கும் சத்தியம்:** இன்று நாம் பரிசுத்தமடைவதற்கு சுயக்கட்டுப்பாடோ, மனுஷ பாரம்பரியங்களோ

அல்லது ஆகாரக்கட்டுப்பாடோ நம்மை பரிசுத்தப்படுத்த முடியாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உண்மையே அறிந்தவராக உம்முடைய சத்தியத்தினாலே இந்த சீசர்களைப் பரிசுத்தமாக்கும். உமது வசனமே சத்தியம் என்று யோவான் 17:17-ல் சொல்லுகிறார். ஆகையால் தேவ ஜனங்களே! சத்தியம் சபையிலே பிரசங்கிக்கப்பட்டால் அந்த சத்தியம் ஜனங்களைப் பரிசுத்தப் படுத்தும். தூய்மையாக்கும். வருகைக்கு ஆயத்தப்படுத்தும். நம்முடைய சபைகள் சத்தியம் பிரசங்கிக்கப்படுகிற இடங்களாக இருப்பதாக. சத்தியத்தை அநியாயத்தினால் அடக்கி வைக்கக் கூடாது. பரிசுத்தமாக்கும் சத்தியத்திற்கு சபையானது தூணாக விளங்க வேண்டும்.

**3. கச்சையாகிய சத்தியம் :** சத்தியத்துடைய வெளிச்சத்தை இன்னும் சற்று கவனமாய்க் கவனிக்கும் போது ஆவிக்குரிய யுத்தத்திலே பிசாசோடு போராடுகிற சர்வாயுத வர்க்கம் தரித்திருக்கிற போர் வீரன் தன் இடுப்பிலே கட்டியிருக்கிறதான கச்சையை சத்தியம் என்று வேதம் சொல்லுகிறது. சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டியவர்களாக என்று எபேசியர் 6:14-ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு போர்வீரன் தன் இடுப்பிலே கட்டப்பட்டிருக்கிற சச்சையில் தான் எதிரிகளைத் தாக்கக் கூடிய பலவித ஆயுதங்களையும், தன்னைக் காத்துக் கொள்ளக் கூடிய ஆயுதங்களையும் தொங்கவிட்டிருப்பான். ஆகவே இன்று நம் சபையிலே ஒவ்வொருமுறையும் சத்தியம் பிரசங்கிக்கப்பட்டால் அந்த சத்தியம் விசுவாசத்தை வளர்க்கும் விசுவாசிகளான கர்த்தருடைய பிள்ளைகள் இடுப்பிலே கட்டக்கூடிய, பட்டயங்களை சுமக்கக் கூடிய, சர்வாயுதங்களைத் தாங்கக் கூடிய விசுவாசத்தை உருவாக்கும். எதிரி வரும்போது அந்த சத்தியத்தில் ஏதாவது ஒன்றை எடுத்து எதிரியைத் தாக்கினால் உடனே தேவனுடைய பிள்ளைகள் தங்களைக் காத்துக் கொள்ள முடியும். எதிரிகளை வீழ்த்த முடியும். இப்படிப்பட்ட சத்தியம் இன்று ஒவ்வொரு ஞாயிறும் ஒவ்வொரு வேத பாட வகுப்பிலும் பிரசங்கிக்கப்பட வேண்டும். விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவ வசனத்தால் வரும். நமது சபைகள் விசுவாசத்துக்கு தூண்களாக விளங்கட்டும்.

**4. பரிசையாகிய சத்தியம் :** ஒரு போர்வீரன் தன்னுடைய வலது கையிலே வேத வசனமாகிய ஆவியின் பட்டயத்தை வைத்திருக்க வேண்டும். இடது கையிலே பரிசையாகிய கேடகத்தை வைத்திருக்க வேண்டும். அந்தக் கேடகம் சங் 91:4-ல் அவருடைய சத்தியம் எனக்குப் பரிசையும், கேடகமுமாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே சத்தியத்தை தேவன் பரிசையாக தந்திருக்கிறார். பரிசையாகிய

கேடகம் நம்முடைய சத்துருவின் அம்புகளிலிருந்து நம்மைப் பாதுகாக்கும். வியாதிகள் வரும் போது, சோதனைகள் வரும்போது, பரிசுத்த வாழ்க்கையில் போராட்டங்கள் வரும்போது சத்தியத்தின் வார்த்தை நமக்குள் தாராளமாய் இருக்குமானால் அந்த சத்தியம் நம்மை பாதுகாக்கும். சிந்தனையில் பரிசுத்தம், தனிமையில் பரிசுத்தம், பொது வாழ்வில் பரிசுத்தம் ஊழியத்தில் பரிசுத்தம். இவைகளுக்கெல்லாம் சத்தியமாகிய பரிசை தான் நம்மை பாதுகாக்கக் கூடியது. சத்தியத்தைப் பற்றிய அறிவில்லாதவர்கள் சங்காரமாவார்கள்.

**5. வஞ்சகத்தை வெல்லும் சத்தியம்:** வேதாகம சத்தியங்களை நாம் நேசிக்க வேண்டும் என்று கர்த்தருடைய வார்த்தையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆண்டவருடைய வருகையிலே எடுத்துக் கொள்ளப்படுகிறவர்கள் சத்தியத்தை நேசிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆண்டவருடைய இரகசிய வருகையிலே கைவிடப்படுபவர்கள் சத்தியத்தை நேசிக்காமல் அநீதியிலே பிரியப்பட்டவர்களாக இருக்கிறார்கள் II தெச 2:11,12-ல் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கள் அனுப்புவார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தேவ பிள்ளைகளே! அந்திக் கிறிஸ்துவின் கொடிய வஞ்சகவலையில் விழாது ஆண்டவருடைய வருகையில் பறந்து செல்ல வேண்டுமானால் நீங்கள் சத்தியத்தை நேசிக்கிறவர்களாய் இருங்கள். சத்தியத்தை நேசிக்கிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள் என்று ஏசா 26:2-ல் சொல்லியுள்ளது. அந்திக் கிறிஸ்துவின் வஞ்சகத்தை வெல்லும் சத்தியத்திற்கு சபை தூணாக இருக்கிறது.

**6. மயக்கத்தை வெல்லும் சத்தியம்:** சத்தியத்திற்கு தூணாக விளங்குவதற்கு நாம் சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் உங்களையே வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மட்டுமல்ல. அதன்படி செய்கிறவர்களாய் இருங்கள் என்று யாக்கோபு அப்போஸ்தலன் எழுதுகிறார். சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத் தக்கதாக உங்கள் மனதை மயக்கினவன் யார்? நீங்கள் நன்றாய் ஓடினீர்களே. உங்களைத் தடை செய்தவன் யார்? என்று கலா 65:7-ல் பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார். சத்தியத்தை நாம் கேட்கும் போது அதற்கு கீழ்ப்படிய சத்தியத்தின் வெளிச்சம் இன்னும் அதிகமாய்க் கிடைக்கும். அப்பொழுது நாம் சத்தியத்திற்கு தூண்களாக விளங்கும்படியாய்

இருப்போம். புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத் தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? என்று மறுபடியும் கலா 3:1-ல் பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார். விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட கலாத்திய சபையார், விருத்த சேதனத்தினால் தான் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று கள்ள அப்போஸ்தலர், கபடமுள்ள வேலையாட்களுடைய உபதேசங்களைக் கேட்டு அவர்கள் ஆவிக்குரிய மயக்கத்திலே விழுந்தார்கள். ஆகவே தான் அவர்களை பவுல் அப்போஸ்தலன் எச்சரித்து நீங்கள் ஏற்கெனவே கேட்டுப் பெற்றுக் கொண்ட சத்தியத்திற்குக் கீழ்ப்படியுங்கள் என்று சொல்லுகிறார். சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து சாத்தானின் மயக்கத்தை வெல்லும் சத்தியத்திற்கு தூணாக விளங்குங்கள்.

**7. பூரண சுவிசேஷசத்தியம் :** தேவனுடைய சபையானது சத்தியத்திற்குத் தூணாக விளங்குவதற்கு கடைசியாக மனதார சத்தியத்தை பேச வேண்டும் என்று சங். 24:2-ல் சொல்லியிருக்கிறது. பூரண சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டும். சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற எல்லாவித மனுசனுடைய அவபக்திக்கும் விரோதமாக தேவ கோபம் வானத்திலிருந்து ஊற்றப்பட்டிருக்கிறது. முக்கியமாக கர்த்தருடைய ஊழியக்காரர் வாயிலே சத்திய வேதம் இருக்க வேண்டும். அதனால் அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருப்பார்கள். சத்திய வேதம் அவனுடைய வாயிலிருந்து. அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை. அவன் என்னோடே சமாதானமும், யதார்த்தமுமாய் சஞ்சரித்து அநேகரை அக்கிரமத்திலிருந்து திருப்பினான். ஆசாரியரின் உதடுகள் அறிவைக் காக்க வேண்டும். வேதத்தை உன் வாயிலே தேடுவார்களே. அவன் கர்த்தருடைய தூதன் என்று மல் 2:6,7-ல் வசனங்களிலே நாம் வாசிக்கிறோம். பூரண சுவிசேஷ சத்தியம் பேசினால் கூட்டம் குறைந்துவிடும் என்று சாத்தான் பொய் சொல்வான். உண்மையாய்க் கவனித்தால் இன்று ஜனங்கள் பூரண சுவிஷேசத்தையே விரும்புகிறார்கள். பூரண சுவிசேஷம் பிரசங்கிக்கும் சபையையே ஜனங்கள் விரும்புகிறார்கள். நீங்கள் சத்தியத்தைக் கீழே போட்டு விடாதிருங்கள். சத்தியத்தை சுமந்து செல்லுங்கள்.

பிரயோஜனமான ஒன்றையும் மறைக்காமல் எல்லாவற்றையும் அறிவித்து பூரண சத்தியத்திற்கு தூண்களாக சபையைக் கட்டுவோமாக!

# 7

# வழி நடத்தும் தூண்கள்

கடைசியாக! சத்தியத்திற்கு தூண்களாக நிற்கும் சபையை வழிநடத்துவது தேவனே. இச்செய்தியில் திருச்சபையின் தூண்கள் தேவனே என்று தியானிக்கப் போகிறோம். பழைய ஏற்பாட்டில் 420 வருடமாக எகிப்திலே அடிமையாக இருந்த இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் தேவன் தமது குமாரனுடைய இரத்தத்தினாலே விடுதலை பண்ணி எகிப்தை விட்டு வெளியே கொண்டு வந்து வாக்குத்தத்தம் பண்ணிய கானான் தேசத்திற்கு அவர்களை 40 வருடமாக வழி நடத்தினார். எகிப்திலிருந்து வெளியே வந்த ஜனம் இரட்சிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு சபைக்கு ஒப்பாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டு சபையார் இதுவரை தாங்கள் ஒருபோதும் பிரயாணம் பண்ணாத வனாந்தரம் வழியாக கானானை நோக்கி நடந்து வந்தார்கள். அவர்களுக்கு அந்த 40 ஆண்டு பிரயாணத்திலும் வழி காட்டுவதற்கு தேவனே அவர்கள் முன்பாக வந்தார்.

அவர்கள் சுக்கோத்திலிருந்து பிரயாணப்பட்டு வனாந்திரத்தின் ஓரமாய் ஏத்தாமிலே பாளயம் இறங்கினார்கள். அவர்கள் இரவும், பகலும் வழிநடக்கக் கூடும்படிக்கு கர்த்தர் பகலில் அவர்களை வழி நடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சம் காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார். பகலில் மேகஸ்தம்பமும், இரவில் அக்கினி ஸ்தம்பமும் ஜனங்களை விட்டு விலகிப் போகவில்லை. (யாத். 13 : 20, 21, 22)

தேவன் தமது சபைக்குத் தூண்களாக முதலாவது அவரே வந்து விடுகிறார். தமது சுய இரத்தத்தால் சம்பாதித்துக் கொண்ட சபைக்கு தூண்களாக தேவனே இறங்கி வருகிறார். இந்த தமிழ் வேதாகமத்தின் அக்கினி ஸ்தம்பம், மேகஸ்தம்பம் என்ற வார்த்தை ஆங்கிலத்தில் The Piller of Fire, The Piller of Cloud என்று எழுதி இருக்கிறது. அதாவது தேவனுடைய சபைக்கு முன்பாக பகலிலே மேகக் கூட்டம் ஒரு தூண் போல் நின்றது. இரவிலே அக்கினி ஒரு தூண்போல் அவர்களுக்கு முன்பாக நின்றது. இந்த 40 வருட வனாந்தர பிரயாணத்திலே மேகத்தின் தூணும், அக்கினியின் தூணும் அவர்களை விட்டு விலகவில்லை. தேவனுடைய சபைக்கு தேவனே தூணாக நிற்கிறார். இந்த தூண்களைக்

குறித்து ஆவிக்குரிய அர்த்தத்தை ஆவியானவர் இங்கு நமக்கு வெளிப்படுத்தப் போகிறார்.

இந்த அக்கனி தூண்களும், மேகத் தூண்களும் கர்த்தர் அவர்களுக்கு தேவ பிரசன்னமாகக் கொடுத்தார். நமது சபைகளின் ஆராதனையின் வேளையில் இறங்கும் தேவ பிரசன்னமே சபையின் ஊழியத்தைத் தாங்கக்கூடிய தூண்களாக இருக்கிறது. கடந்த நாட்களில் ஒரு நாள் அருகில் இருக்கிற சபையின் கூட்ட நோட்டீஸ்களைக் கொடுக்க ஒரு சகோதரன் எங்களுடைய சபைக்கு வந்தார். அப்பொழுது நாங்கள் எல்லோரும் கண்களை மூடி, பாடி தேவனைத் துதித்து புகழ்ந்து ஆராதித்துக் கொண்டிருந்தோம்.

தேவ பிரச்சன்னத்தினாலே எங்கள் தேவாலயம் நிரம்பி இருந்தது. நோட்டீஸ் கொடுக்க வந்த அந்த சகோதரன் ஆலயத்தில் நுழைவதற்கு மிகுந்த பயபக்தியான உணர்வு அவருக்கு வந்ததாகச் சொன்னார். ஆலயத்தின் உள்ளே வந்த பிற்பாடு கண்களை மூடி ஆராதித்துக் கொண்டிருக்கிற என்னைத் தொட்டு என் கண்களைத் திறக்க வைத்து அந்த நோட்டீஸைக் கொடுக்க அவருடைய உள்ளம் அச்சப்பட்டதாகச் சொன்னார். கொடுத்த பிற்பாடு அந்த தேவபிரசன்னம் நிறைந்த ஆராதனையை விட்டு வெளியே போக மனமில்லாமலிருந்தேன். அங்கேயே இருந்துவிட எனக்கு மனதுண்டாயிற்று என்று அவர் சாட்சி சொன்னார்.

அன்பு நண்பர்களே! அருமை விசுவாசிகளே! நமது ஜெபங்களிலும், ஆராதனைகளிலும் தேவன் தம்முடைய முழு பிரசன்னத்தோடு இறங்கி வந்தாரானால் அந்த முழு தேவ பிரசன்னமும் நம்மை ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆசீர்வதித்து வழி நடத்தக் கூடும். தேவ பிரசன்னம் இல்லாத ஆராதனை சகாரா பாலைவனம் போல காட்சியளிக்கலாம். தேவசமூகம் உணர முடியாத இடங்கள் மத்திய பிரதேசத்தில் மகாராஷ்டிராவில் உள்ள சம்பல் பள்ளத்தாக்கு போல காட்சியளிக்கலாம். திருடர்களும், கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும், துஷ்ட ஜந்துக்களும் நடமாடுகிற சம்பல் பள்ளத்தாக்கு போல இன்று பல இடங்கள் காணப்படுகின்றது.

ஊழியத்தின் நிமித்தமாய் பல ஊர்களுக்கும், வீடு சந்திப்பின் நிமித்தமாய் பல இடங்களுக்கு அடியேன் செல்லும்போது, சில இடங்களிலே தேவபிரசன்னத்தையே பார்க்க முடியாத இடங்கள் இருந்திருக்கிறது. அந்த இடங்களுக்கு அடியேன் செல்லும்போது தாங்க முடியாத துக்கமும், ஆத்தும பாரமும் என் உள்ளத்தை நிரப்புகிறது.

அந்த நேரத்திலே நான் உணருவேன். தேவ பிரசன்னமே நம்மை சரியான பாதையில் வழிநடத்தி இளைப்பாறுதலின் பியூலா தேசமான கானான் தேசத்தில் கொண்டுபோய் விடமுடியும். எனவே அக்கினி ஸ்தம்பமும், மேகஸ்தம்பமும் நம்மை ஆவிக்குரிய வாழ்வில் வழி நடத்தக் கூடிய தேவ பிரசன்னமாக இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் அக்கினித் தூணையும், மேகத் தூணையும் சந்தித்த இடம் ஏத்தாம் என்ற இடம். ஏத்தாம் என்றால் கர்த்தர் என் பெலன் என்று அர்த்தம் இன்று நீங்கள் சரீரத்தில் பெலவீனப்பட்டிருக்கிறீர்களா? தேவ பிரசன்னம் உங்களுடைய சரீரத்தில் இறங்கட்டும். இந்த தேவபிரசன்னம் உங்கள் சரீரத்தை உயிர்ப்பித்து உங்களைப் பெலப்படுத்தும், ஆத்துமாவில் பெலவீனப்பட்டிருக்கிறீர்களா? தேவ சமூகம் உங்களை நிரப்பும்போது உங்கள் ஆத்துமா பெலனையும் அடைகிறது. உங்கள் ஆவியிலே சோர்வு, மனமடிவு, கிலேசம் இருக்கிறதா? ஆவியிலே கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? தேவ பிரசன்னம் உங்கள் ஜெபத்திலும் உங்கள் ஆராதனையில் இறங்க இடங்கொடுங்கள். தேவ பிரசன்னமே உங்களுடைய ஆவி, ஆத்துமா சரீரத்திற்கு பெலனுயிருக்கிறது.

இந்திய அரசாங்கம் தன் படைபலத்தைப் பெருக்கிக் கொள்ள பெரிய டாங்கிகளையும், பீரங்கிகளையும், விஞ்ஞான நுணுக்கமுள்ள துப்பாக்கிகளையும் போர்விமானங்களையும், போர் கப்பல்களையும் வாங்கிக் குவிக்கிறது. ஆனால் கர்த்தருடைய சபையாகிய நாமோ நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், பலப்படுத்திக் கொள்ளவும் தேவ பிரசன்னமே நமக்கு பெலனாக இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் இருந்த நாட்களிலே இந்த எத்தாம் என்ற இடத்திலே சூரிய தேவனை வழிபட்டார்கள். சூரிய தேவனை வழிபட்டு பாவத்திற்கும், விக்கிரகத்திற்கும் அடிமைகளாக இருந்த அதே ஏத்தாம் என்ற இடத்திலே இன்று தேவன் தம்முடைய மகிமையின் பிரசன்னத்தை இறக்கினார். தேவ பிரசன்னத்தை உணருகிற கர்த்தருடைய பிள்ளைக்கு பழைய விக்கிரக ஆவிகளின் தொடர்பிலிருந்தும் பாரம்பரியங்களிலிருந்தும் பரிபூரண விடுதலை உண்டாயிருக்கும். இந்த அக்கினி தூண்களும், மேகத் தூண்களும் இஸ்ரவேல் ஜனத்திற்கு முன் செல்லும் தூண்களாக தேவனாகிய கர்த்தர் தந்ததற்கு 5 காரணங்கள் உண்டு. அதை நாம் தியானிப்போம்.

**1) ஆவிக்குரிய வழி நடத்துதல்:** 40 வருட வனாந்தர பிரயாணத்திலே இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக தேவன் பகலிலே

மேகத் தூணிலே இறங்கினார். இரவிலே அக்கினித் தூணிலே கர்த்தர் இறங்கினார். இதை சற்று மாற்றி சொன்னால் பகலிலே அக்கினியும், இரவிலே மேகமும் தூண்களாக வந்திருந்தால் இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் வழி நடந்து செல்ல குழம்பிப்போய் இருப்பார்கள். ஏனென்றால் பகலிலே அக்கினி ஸ்தம்பம் காணப்பட்டிருக்குமானால் சூரிய வெளிச்சமும் மேகத்தின் சிவப்பு நிறங்களும், வானத்தின் செந்நிறமும் இவர்களுக்கு பயங்கர குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கும். அக்கினி ஸ்தம்பத்திற்கு பின்னால் செல்லும் இவர்கள் சூரியனுக்கு பின்னால் சென்றிருந்திருப்பார்கள். வழிமாறி இருந்திருப்பார்கள். ஆகவே ஞானமுள்ள தேவன் பகலிலே அக்கினியை அனுப்பாமல் பகலிலே மேகத்தை அனுப்பினார். பகலில் மேகம் தெளிவாகத் தெரியும்.

ஆகவே நம்முடைய ஜீவியத்திலே படிப்பு, உத்தியோகம், திருமணம், ஊழியம், மாற்றலாகிப் போகுதல் போன்ற காரியங்களுக்கு தெளிவான, திட்டவட்டமான தேவ நடுத்துதலே தேவன் தருகிறவராக இருக்கிறார். குழம்ப வேண்டிய அவசியமில்லை.

இரவில் மேகஸ்தம்பத்தை தேவன் தந்திருப்பார் என்று சொன்னால் இரவு இருளாக இருக்கும்போது மேகம் தெளிவாக இஸ்ரவேலர் கண்களுக்குத் தெரியாது. ஆகவே மகா ஞானமுள்ள தேவன் இருளாக இருக்கிற வேளையிலே அக்கினி ஸ்தபம்பத்தை முன்னாக அனுப்பியபோது அவர்களுக்குத் தெளிவான வெளிச்சமும் வழி நடத்துதலும் கிடைத்தது. ஆகவே தேவன் தமது சபைக்குத் தூண்களாக அக்கினியையும், மேகத்தையும் தந்தது தம்முடைய ஜனத்தை தெளிவானப் பாதையில் வழிநடத்துவதற்காகத்தான். ஆகவேதான் இந்த நித்திய வழியிலே நடக்கிற பரிசுத்தக் கூட்டம் பேதைகளாய் இருந்தாலும், திசைகெட்டுப் போகாமல் சீயோனுக்கு வந்து சேர்வார்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

**2) ஆவிக்குரிய ஊழியம்:** பழைய ஏற்பாட்டு ஊழியம் நடந்த காலத்தில் கூட அந்த ஊழியத்தை ஆவிக்குரிய ஊழியமாக நடத்த கர்த்தர் விரும்பினார். ஆகவே மோசே ஆசரிப்புக் கூடாரத்தை நிறுவினப் பிற்பாடு அந்தக் கூடாரத்தை கர்த்தருடைய மேகம் மூடியது. கர்த்தருடைய மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை நிரப்பினதாலே மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக்க முடியாமல் தவித்தான். (யாத். 40 : 34, 35) தேவனுடைய மேகத் தூண் தேவாலயத்தை நிரப்பியிருந்தபடியினால் மனிதன் அதற்குள் பிரவேசிக்க முடியவில்லை. இதனுடைய ஆவிக்குரிய செய்தி என்னவென்றால்

நமது சபைகளும், சுவிசேஷ மிஷனெரி ஊழியங்களும் ஆவிக்குரிய ஊழியங்களாகவே நடத்தப்பட வேண்டும். அதிலே மனுஷீகங்கள் பிரவேசிக்கவேக் கூடாது.

ஆதி சபையிலே புறஜாதி சபைகளுக்கு ஊழியம் செய்யும்படி தேவன் பவுலையும், பர்னபாவையும் தெரிந்து கொண்டார். முதலாவது மிஷனெரி ஊழியத்திலே அவர்களைக் கொண்டு பல சபைகளைக் கர்த்தர் ஸ்தாபித்தார். உடன் ஊழியனாய் வந்த மாற்கு என்ற பேர்கொண்ட யோவான் முதல் மிஷனெரி ஊழியத்திலே பின்வாங்கித் தன்னுடைய ஊருக்கு போய்விட்டான். பின்பு 2-வது மிஷனெரி பிரயாணம் செல்லும்போது பர்னபா அந்த மாற்கு என்கிற யோவானைத் தன்னோடு கூட்டிக் கொண்டு செல்ல வேண்டுமென்று பவுலிடத்தில் சொன்னார். பவுலோ அவனைக் கூட்டிக் கொண்டு செல்லக் கூடாது என்று வாதித்தார். அவர்களுக்குள் பலத்த வாக்குவாதம் உண்டாகி கடுங்கோபம் மூண்டது. இதினிமித்தமாக பவுலும், பர்னபாவும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தார்கள். இதிலே பவுல் ஆவிக்குரிய ஊழியக்காரனாய் செயல்படுகிறான். பர்னபாவோ மனுஷீகமான ஊழியத்தைச் செய்பவனாக செயல்படுகிறான். மாற்கு என்கிற யோவான் தனக்கு இனத்தானாயிருந்தபடியினாலே அவனைக் கூட்டிக் கொண்டு செல்ல விரும்பினான். (கொலோ. 4 : 10) ஆகவே பவுலின் ஆவிக்குரிய ஊழியம் வேதத்திலும் குறிப்பிடப்பட்டு பல இடங்களிலும் வெற்றியாய் சென்றது என்று ஆவியானவர் வேதத்தில் எழுதி வைத்திருக்கிறார். ஆனால் மனுஷீகத்திற்கு இடங்கொடுத்து தன் இனத்தானை அழைத்துக்கொண்டு சென்ற பர்னபாவின் ஊழியம் எப்படி நடந்ததோ நமக்கு தெரியாது. ஆனால் நம் கரத்திலிருக்கிற வேதாகமத்திலே பர்னபாவைக் குறித்து ஒரு குறிப்பும் பார்க்க முடியவில்லை. ஆகவே அன்பு நண்பர்களே! அருமையான தேவனுடைய பிள்ளைகளே! நமது ஊழியங்களிலே பரிசுத்த ஆவியானவர் தூணாக நின்று செயல்பட இடங் கொடுப்போம். அதற்கு தடையாக இருக்கும் மனுஷீகம் உள்ளே பிவேசியாதபடி தடுத்து அப்புறப்படுத்துவோம். நமது ஊழியங்கள் ஆவிக்குரிய ஊழியங்களாக ஆண்டவர் வருகை வரைக்கும் முன்னேறிப் போவதாக. கர்த்தருடைய பிரசன்னம் நமது சபையை நிரப்பும்போது மனுஷீகம் மறைந்து போகும். ஆவியானவர் கெம்பீரமாய் நம்மை நடத்துவார்.

**3) ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சி :** பழைய ஏற்பாட்டு சபையார் 40 வருடமாய் பிரயாணம் பண்ணும்போது அவர்கள் பிரயாணம் பண்ண வேண்டும் என்ற கட்டளை

மேகத்தூணிலிருந்தும், அக்கினி தூணிலிருந்தும் அவர்களுக்கு வந்தது. மேகம் எழும்பும்போது அவர்கள் பிரயாணம் பண்ணுவார்கள். மேகம் இறங்கும்போது அவர்கள் பாளயம் இறங்குவார்கள். (எண். 9:17) மேகத்தூணும், அக்கினித் தூணும் மேலே எழும்பும்போது இஸ்ரவேல் ஜனம் தம் இருக்கிற ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு முன்னேறிப் போகிறவர்களாகக் காணப்பட்டார்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருகிறவர்கள் யார்? பரிசுத்த ஜீவியத்திலே முன்னேறிப் போகிறவர்கள் யார்? பக்தி வாழ்க்கையிலே நாளுக்கு நாள் விருத்தி அடைபவர்கள் யார்? என்று காண்போமானால் தங்களுடைய ஜெப வாழ்க்கையிலும், தங்களுடைய ஊழியத்திலும், ஆராதனையிலும் தேவ பிரசன்னத்தைக் கொண்டு வருகிறவர்களே அக்கினி ஸ்தம்பமும், மேகஸ்தம்பமும் நமக்கு முன்பாகச் செல்லுமானால் நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளருவோம். ஊழியத்திலும் நாளுக்கு நாள் பெருகுவோம். கர்த்தருடைய பிரசன்னம் நமது சபைக்கு தூணாக முன் செல்லும்போது நாம் வளருகிறவர்களாய் இருப்போம்.

**4) ஆவிக்குரிய வாழ்க்கையிலே வெற்றி:** மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக எழும்பும் போது தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி புறப்படும் என்று எண் 10 : 35-ல் வாசிக்கிறோம். மேக ஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் எழும்பும்போது, பெட்டி புறப்படும்போது அவருடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்கள். தேவன் எழுந்தருளுவார். அவருடைய சத்துருக்கள் சிதறடிக்கப்பட்டு ஓடிப் போவார்கள் என்று (சங். 68:1) சொல்லியிருக்கிறது. தேவன் எழுந்தருளுவார். அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப் போவார்கள். புகை பறக்கடிக்கப்படுவதுபோல அவர்களை பறக்கடிப்பேன். மெழுகு அக்கினிக்கு முன்பு உருகுவது போல அவர்கள் தேவனுக்கு முன்பாக அழிவார்கள். நீதிமான்களோ தேவனுக்கு முன்பாக மகிழ்ந்து களிகூர்ந்து ஆனந்த சந்தோசமடைவார்கள் என்று சங்கீதத்திலே நாம் பார்க்கிறோம். தேவனுடைய சபைகளுக்கு விரோதமாய் தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் இன்று இந்திய தேசம் முழுவதிலம் 1000-க்கு மேற்பட்ட எதிராளிகளும், மந்திரவாதிகளும் மந்திரங்களை செய்து, ஏவல் சூனியங்களைச் செய்கிறதாக ஒரு இரகசிய கடிதத்தின் செய்தி ஒன்று சொல்லுகிறது. அன்பானவர்களே! உங்களுக்குத் தெரியாமல், ஒரு கூட்டம் சத்துருக்கள் சூனியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். தெரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தாலும் தேவ பிரசன்னம் அக்கினி ஸ்தம்பமாக மேக ஸ்தம்பமாக நம்மோடு

இருக்கும் போது நம்முடைய சத்துருக்கள் அழிந்து போவார்கள். மாய்ந்து போவார்கள் என்று ஆவியானவர் சொல்லுகிறார். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் வெற்றி இந்த அக்கினித் தூணிலும், மேகத் தூணிலும்தான் இருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் சபைக்கு தூணாக இருக்கும்போது எவரும் நம்மைக் கெடுக்க முடியாது.

**5) ஆவிக்குரிய பாதுகாப்பு:** இஸ்ரவேல் ஜனங்களின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் எகிப்தை விட்டு `புறப்பட்ட பிற்பாடு செங்கடலுக்கு முன்பாக வந்தார்கள். 1 கொரி. 10 : 1,2-ல் அவர்கள் மேகத்துக்குக் கீழும், சமுத்திரத்திற்குக் கீழும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். இதை அறிந்ததான எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னுடைய குதிரைகளோடும், ரதங்களோடும் இஸ்வேலரைத் துரத்திக் கொண்டு வந்தான். அப்பொழுது இஸ்ரவேலருக்கு முன்னாக இருந்த தேவ தூதனானவர் விலகி அவருக்குப் பின்னாக நடந்தார். அவர்களுக்கு முன்னிருந்த மேகஸ்தம்பமும் (The Pillar of Cloud) விலகி அவர்களுக்கு பின்னாக நின்றது. அது எகிப்தியரின் சேனையையும், இஸ்ரவேலரின் சேனையையும் இரவு முழுவதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது. எகிப்தியருக்கு அவைகள் மேகமும், அந்தகாரமுமாய் இருந்தது. இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று.

நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் பாதுகாப்பு இந்த மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும்தான். பார்வோனாலும் அவன் சேனைகளாலும் இஸ்ரவேல் ஜனங்கள் அழிந்து போகாதபடி, சங்கரிக்கப்படாதபடி இந்த மேக ஸ்தம்பமும் அக்கினி ஸ்தம்பமும் நடுவாக வந்து நின்றது. பார்வோன் தன் முழு பெலத்தை பயன்படுத்தி இஸ்ரவேலரைக் கொல்லப் பார்த்தான். ஆனால் மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் நடுவாக நின்று தடுத்து விட்டது. எவ்வளவு பெரிய மகிழ்ச்சி. எவ்வளவு பெரிய களிகூறுதல், இந்நாட்களிலே தேவன் நமக்குத் தந்திருக்கிறார். பிசாசானவன் உங்களைத் தொட முடியாது. உங்கள் தலையிலுள்ள முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. தேவ பிரசன்னம் இன்று நம்முடைய ஊழியங்களிலே இருக்கும் போது அது நம்முடைய ஊழியங்களைத் தாங்கக் கூடிய தூணாக இருக்கிறது.

பார்வோன் என்றால் பெரியவன் என்று அர்த்தம்; ஆனால் மோசே பார்வோனைவிட பெரியவனாக காணப்பட்டான். யாத். 11 : 4. தேவ பிரசன்னமே நமது சபைகளைக் காக்கும் தூண்களாக இருக்கிறது.

- ஆமென்

# ஆசிரியரின் பிற வெளியீடுகள்

1. ஆவி, ஆத்துமா, சரீரம்
2. கொடியேற்றுங்கள்
3. மகிமையின் மேல் மகிமை
4. உறுதியான அஸ்திபாரம்
5. வாழ்வளிக்கும் வயல்
6. எழுப்புதலும் நியாயத்தீர்ப்பும்
7. திறப்பில் நிற்கும் ஊழியன்
8. திசை மாறிய தீர்க்கதரிசி
9. உலகம் மாமிசம் பிசாசு
10. கடைசிக் கால பாபிலோன்
11. கிறிஸ்துவின் மணவாட்டி
12. சிந்தனையில் பரிசுத்தம்
13. சீயோன் கோட்டையைபிடியுங்கள்
14. ஏதேன் தோட்டம்
15. பரலோக, பாதாள வாசல்
16. ஆவியின் வரங்கள்
17. ஆவியின் கனிகள்
18. யூதா நிருபம்
19. சிறையிலிருந்து சிங்காசனம் வரை
20. இரட்சகனாகிய தீர்க்கதரிசி
21. தேவாலயத்தின் தூண்கள்
22. இதோ மணவாளன் வருகிறார்
23. சொப்பனங்களும் தரிசனங்களும்
24. மேய்ப்பனாகிய தீர்க்கதரிசி
25. ஸ்தல சபையின் வளர்ச்சி
26. எபிரெயர் நிருபம்
27. யோவான் ஸ்நானகன்
28. கானான் யாத்திரை
29. போய் சுதந்தரித்த ஆபிரகாம்
30. துணையாளராகிய ஆவியானவர்
31. சாலமோன் ராஜா
32. ஆசீர்வாதமான கிறிஸ்தவம்
33. பாவம்
34. கர்த்தரின் பட்டயம்
35. தேவனுடைய இராஜ்யம்
36. இலக்கை அடைவது எப்படி?
37. விசுவாசத்தை வளர்ப்பது எப்படி?
38. பரிசுத்த ஜீவியம்
39. அபிஷேகத்தை அனல்மூட்டுவது எப்படி?
40. எழுந்து கட்டுவோம் வாருங்கள்
41. மன்னாதி மன்னன் இயேசு
42. ஆராதனைக்கு ஓர் அழைப்பு
43. சிறிய தீர்க்கதரிசனங்களின் விளக்கவுரை
44. வல்லமையை பெற்றுக் கொள்வது எப்படி?
45. ஜெயஜீவியமும் செழிப்பான வாழ்வும்
46. ஆராதிப்பது எப்படி?
47. பிரோயஜனமுள்ளவனாவது எப்படி?
48. யேசபேன் ஆவி
49. நமது அதிகாரங்கள்
50. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்
51. சீஷர்களாக்குங்கள்
52. பாரம்பரியமா? பரிசுத்த ஆவியானவரா?
53. புதிய ஏற்பாட்டு சபை
54. எப்பாபிரா
55. நீதிமானாவது எப்படி?
56. ஊழிய வரங்கள்
57. மேலான இயேசுவின் நாமம்
58. வேதம் கற்பது எப்படி?
59. ஆவிக்குரிய போராயுதங்கள்
60. தேவன் யார்? எப்படிப்பட்டவர்?
61. தசமபாகம் கொடுக்க வேண்டுமா?
62. வெற்றியுள்ள கிறிஸ்தவன்
63. பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பவர்கள் யார்?
64. ஓடு ஓடு ஓடு?
65. திரும்பி வரும் தேவ மகிமை
66. விழுந்தவன் எழும்ப முடியுமா?

## இந்நூலைப் பற்றி...

ஒரு மாளிகை உறுதியாய் நிற்பதற்கு தூண்கள் அவசியம். தூண்கள் நிமிர்ந்து நின்றால், கட்டிடம் நமக்கு அடைக்கல பட்டணமாகும். அதே தூண்கள் விழுந்து போனால் சில ஆயிரம் பேரை நசுக்கி கொன்று விடும். மூவாயிரம் பேர் அமர்ந்திருந்த மண்டபத்தின் தூணை சிம்சோன் கீழே வீழ்த்தினான். மூவாயிரம் பேரும் மடிந்து போனார்கள். அதே சமயம், புதிய ஏற்பாட்டு சபையிலே, யாக்கோபும், பேதுருவும், யோவானும் தூண்களாக எண்ணப்பட்டார்கள். புதிய ஏற்பாட்டு சபை நிமிர்ந்து நின்றது.

- ➢ நீங்கள் நிமிர்ந்து நிற்கும் தூணா? அல்லது
- ➢ விழுந்து கிடக்கும் தூணா?

நிமிர்ந்து நிற்கும் தூண்கள் எப்படிப்பட்டவர்கள்? விழுந்து போன தூண்கள் எப்படி இருப்பார்கள்? ஆர்வமுடன் இந்நூலை திறவுங்கள், அர்த்தமுள்ள பதில்களை பெற்றுக் கொள்வீர்கள். நீங்கள் சத்தியத்திற்கு தூணும், சபைக்கு ஆதாரமுமாக மாறுவீர்கள்.

### ஆசிரியரை பற்றி...

**சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான். ஏசா. 60:22**



என்ற வாக்குத்தத்தை தரிசனமாக பெற்று கர்மேல் பெந்தெகொஸ்தே சபையை ஸ்தாபித்து அதின் மூத்த போதகராக பணியாற்றும் இவர் கடந்த 34 ஆண்டுகளாக சபையின் மேய்ப்பராக, வேதாகம போதகராக, சபைகளை ஸ்தாபிக்கும் அப்போஸ்தலராக தேவனால் பயன்படுத்தப்படுகிறார்.

அகில உலகமும் பயணம் செய்து மத். 28:19ன் படி கிறிஸ்துவுக்கு சீஷர்களை உருவாக்க கருத்தரங்களில் போதித்து வருகிறார். ஆசிரியர் எழுதிய 66வது புத்தகமே உங்கள் கையில் தவழும் இப்புத்தகம் இவரின் புத்தக செய்திகள் உலகின் 85 நாடுகளுக்குள் கடந்து சென்று எழுப்புதல் தீயை பற்ற வைத்துள்ளது.

ஆக்கியோன்
**பாஸ்டர் மா. ஜான்ராஜ்**
**சீயோன் கோட்டை சர்வதேச ஊழியங்கள்**
26, D, காந்தி ரோடு, சிவகாசி - 626 123.
தமிழ்நாடு - இந்தியா.
போன்: 0091 - 4562 - 277209